Registered aa News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ திருமண மண்டபம்
❖ திருமண மண்டப அலங்காரம்
❖ மணப்பெண் அலங்காரம்
❖ திருமண கார் சேவை
❖ Honey moon room
E.Mail - info@cityhoteljaffna.com
Web - www.Cityhoteljaffna.com T.P - 0212225969

முரசு - 03 திருவள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 23 திங்கட்கிழமை (07.01.2013) பக்கங்கள் 20 ஓசை - 099

















# தைப்பொங்கலுக்கு முன்னர் மாணவர்கள் விடுதலை?

## உயர்கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கைதான நான்கு மாணவர்களும் எதிர்வரும் தைப்பொங்கலுக்கு முன்னர் விடுவிக்கப்படுவரெனவும், பல்கலைக் கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் இன்று முதல் முழுமையாகச் செயற்படத் தொடங்குமெனவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க பி.பி.சி. தமிழோசையிடம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

யாழ். பல்கலைக் கழகத்தின் சித்த மருத்துவத்துறை, நுண்கலைத்துறை போன்ற துறைகள் கல்விப் பணிகளை முன்னெடுத்து வந்தன ஆனால் கலைத் துறை, முகாமைத்துவபீட மாணவர்கள் வகுப்புகளை புறக்கணித்த காரணத்தாலேயே கல்விச் செயற்பாடுகள் தடைப் பட்டன.

பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நான்கு மாணவர்கள் பாதுகாப்புச் சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளனர் அவர்களிடம் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து வாரா வாரம் ஆராயப்பட்டு கிறது. விசாரணைகளில் அவர்களுக்கு சட்டத்துக்கு புறம்பாக தீவிரவாத அமைப்புகளுடன் தொடர்பு இருப்பது தெரியவந்தால் அவர்கள் புனர்வாழ்வுக்கு

(19) ஆம் பக்கம் பார்க்க

## அலையில் சிக்குண்ட கடற்றொழிலாளி மாயம்

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு ஆழியவளை கடற்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்ட ஒருவர் அலையில் சிக்குண்டு காணாமல் போயுள்ளார். சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 4.00 மணியளவில் கட்டுமரத்தில் மீன்பிடிப்பதற்காக ஆழியவளை கடற்பகுதியில் சென்ற வேளை பாரிய அலை அடித்த நிலையில் கட்டுமரம் கவிழ்ந்துள்ளது. இதில் சென்று மீன்பிடியில் ஈடுபட்ட இருவரில் மயில்வாகனம் துரைசிங்கம் (வயது-56) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு காணாமல் போயுள்ளார். இவருடன் சென்ற அயலவர் நீந்திக் கரைசேர்ந்துள்ளார். இது பற்றி மருதங்கேணி பொலிஸில் முறையிடப்பட்டதையடுத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(116)

## பதவி நீக்கப்படவுள்ளார் ஆளுநரின் பிரத்தியேக செயலர்?

வடமாகாண ஆளுநர் சந்திரசிறியின் பிரத்தியேக செயலாளர் சுமித் ஜெயக்கொடி பதவிநீக்கம் செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரனின் சகோதரரும், ஈஸ்வரன் றேடர்ஸ் நிறுவன உரிமையாளருமாகிய துவாரகேஸ்வரன் மீது நல்லூரில் நடத்தப்பட்ட அசிட் வீச்சு சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் சுமித் ஜெயக்கொடி மீது பொலிஸார் விசாரணைகளை நடத்தியிருந்தனர். இந்நிலையிலேயே அவரை உடனடியாகப் பதவிநீக்கம் செய்வதற்கு வடமாகாண ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளதாகத் தகவல்கள்

(19) ஆம் பக்கம் பார்க்க

## வார இறுதிக்குள் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து விலக்கப்படலாம்?

(கொழும்பு)

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்காவை பதவி விலக்கும் தீர்மானம் எதிர்வரும் 11 ஆம் திகதி நிறைவேற்றப்படுமென எதிர்பார்க்கப்படும் நிலையில் இந்தவார இறுதிக்குள் பதவி விலக்கப்படலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாடாளுமன்றில் விவாதம் நடத்தி, வாக்கெடுப்பு நடத்தப்பட்டதன் பின்னர் அந்த அறிக்கை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.


நாடாளுமன்ற அறிக்கைக்கு அமைவாக ஜனாதிபதி, பிரதம நீதியரசரை பதவி விலக்குவது தொடர்பான உத்தரவினை பிறப்பிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதம நீதியரசருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு உள்நாட்டு வெளிநாட்டு சக்திகள் பாரியளவில்

(19) ஆம் பக்கம் பார்க்க

## நீர் நிரம்பிய குழியிலிருந்து தாய், மகன் சடலங்களாக மீட்பு

### கிளிநொச்சி பெரிய பரந்தனில் சம்பவம்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பெரிய பரந்தன் பகுதியில் வயல்வெளிக்கு நடுவே உள்ள நீர் நிரம்பிய குழி ஒன்றிலிருந்து தாய் மற்றும் அவரது மகனின் சடலங்கள் நேற்றுக்காலை கிளிநொச்சிப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

(19) ஆம் பக்கம் பார்க்க

## அரசியல் சாசனத்திற்கு விரோதமாக செயற்பட்டால் போராட்டம்

### எச்சரிக்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

அரசியல் சாசனத்திற்கு எதிராகச் செயற்பட்டால் சபாநாயகர், அரசாங்கம் அல்லது எதிர்க்கட்சித் தலைவருக்கு எதிராகக் குரல் கொடுக்கும் உரிமை நாட்டின் பொதுமக்களுக்கு காணப்படுவதாக ஜே.வி.பி. தெரிவித்துள்ளது. உழைக்கும் வர்க்கத்தினர், புத்திஜீவிகள், தொழில்சார் நிபுணர்கள் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தத் திட்டமிட்டுள்ளதாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

சட்ட விளக்கம் அளிக்கும் அதிகாரம் உச்ச நீதிமன்றிற்கு காணப்படுவதாக அரசியல் சாசனத்தின் 125 ஆம் ஷரத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார். பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பில் நீதிமன்றம் ஏற்கனவே சட்ட விளக்கத்தை அளித்துள்ளது.

இந்தச் சட்ட விளக்கத்தை அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் குறிப்பிட்டுள்ள அவர், மேன்முறையீட்டு நீதிமன்றின் சட்ட விளக்கத்தை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என சபாநாயகர், அரசாங்கம் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளதாகவும், இது

(19) ஆம் பக்கம் பார்க்க

## நாவற்குழி சங்குப்பிட்டிப் பாதை இன்றுமுதல் இரவில் பூட்டு

(நெடுங்கேணி)

நாவற்குழியிலிருந்து கேரதீவு சங்குப்பிட்டி ஊடாக மன்னார் செல்லும் ஏ-32 வீதியானது இன்று முதல் இரவில் மூடப்பட்டிருக்கும் என முல்லை மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் ரி.கே. இளங்கீரன் அறிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாவற்குழியிலிருந்து சங்குப்பிட்டிப் பாலம் வரையான மாதவகாம்போதி வீதிபுனரமைக்கப்படவுள்ளது. இதனால் இவ் வீதியானது இன்றிலிருந்து இரவு 7.00 மணி முதல் காலை

(19) ஆம் பக்கம் பார்க்க

## சிங்களம் கற்பிக்க நியமிக்கப்பட்ட இராணுவ ஆசிரியர்கள் நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட இராணுவ ஆசிரியர்கள் நிறுத்தப்பட்டதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா புவனேஸ்வரன் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வன்னிப் பிரதேச பாடசாலைகளில் சிங்களம் கற்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட இராணுவ

(19) ஆம் பக்கம் பார்க்க

# முல்லைத்தீவு வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை;
# 16 ஆயிரம் மாணவர்களின் கல்வி பாதிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவுக்கல்வி வலயத்திற்குட்பட்ட 52 பாடசாலைகளில் 185இற்கும் மேற்பட்ட ஆசிரியர் பற்றாக்குறையினால் 16750இற்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி நிலையில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ம.ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்தில் நடைபெற்ற போரின் போது பல பாடசாலைகளின் கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றின் பௌதீக வளங்களும் அழிவடைந்துள்ளன.

மக்கள் இடம்பெயர்ந்து அதன் பின்னர் மீள்குடியமர்த் தப்பட்டு முல்லைத்தீவு கல்வி வலயத்திலுள்ள 56 பாடசாலை களில் 52 பாடசாலைகள் தற்போது இயங்கிவருகின்றன.

ஆனால் இங்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் நிலை பற்றாக்குறையாகவே உள்ளது. இதில் ஆரம்பக் கல்விக்கு 73 ஆசிரியர்களும், இடைநிலை கல்வியில் கணிதம், விஞ்ஞானம், ஆகிய பாடங்களிற்கு 59 ஆசிரியர்களும், ஆங்கில பாடத்திற்கு 29 ஆசிரியர்களும், க.பொ.த. உயர்தரத்தில் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களிற்கு 15 ஆசிரியர்களும் கலைப்பிரிவு மற்றும் வர்த்தகப் பிரிவிற்கு 10 ஆசிரியர்களுமாக சுமார் சில நூற்றுக்கணக்கான ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவுகிறது.

இதனைவிட வருடாந்த இடமாற்றம் பெறும் ஆசிரியர்களும், 2 வருட ஒப்பந்த அடிப்படையில் எதிர்வரும் மாசிமாதம் தமது சேவையை நிறைவு செய்து இடமாற்றம் பெற்று செல்ல இருக்கும் நிலையில் மேலும் ஆசிரியர் பற்றாக்குறை நிகழவுள்ளதாகவும் இது தொடர்பாக வடமாகாணக் கல்விப் பணிப்பாளருக்கும், வடமாகாண கல்வி அமைச்சின் செயலருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், தற்போது நடைபெற இருக்கும் இடமாற்றத்தில் இவ் பற்றாக்குறையை நிறைவு செய்து தருவதாகவும் தெரிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (12)

# அடிப்படை வசதிகளற்ற கொடிகாமம் பஸ்தரிப்பிடம்

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட ஏ-9 வீதியில் உள்ள கொடிகாமம் பஸ்தரிப்பிடமானது அடிப்படை வசதிகள் இன்றி காணப்படுவதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கொடிகாமம் நகரமானது ஏனைய மாவட்டங்களிற்கும் பயணம் செய்யும் பிரயாணிகளிற்கு மிகவும் முக்கியமான பகுதியாக உள்ளது.

வடமராட்சி, தென்மராட்சி போன்ற பகுதிகளில் இருந்து வெளியிடங்களிற்கு செல்லும் பிரயாணிகள் கொடிகாமம் சந்தியில் உள்ள பஸ்தரிப்புிடத்தினை பயன்படுத்துகின்றனர். மழைகாலங்களில் மழையில் நனையாதவாறு நின்று செல்லக்கூடிய கொட்டகை வசதிகள் எவையும் இல்லை,முதியவர்கள் குழந்தைகளுடன் பயணம் செய்வோர் இருப்பதற்குரிய இருப்பிடவசதிகள் இல்லை.

இரவு வேளைகளில் இவ் பஸ்தரிப்பிடமானது போதிய வெளிச்சமின்றி இருள் சூழ்ந்த பகுதியாக காணப்படுகின்றது. இதனால் பெண்கள் இரவில் அச்சத்துடனேயே பயணம் செய்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து கொடிகாம நகர பஸ்தரிப்பிடத்தினை திருத்தித் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (130)

# மடுக்கரையைச் சேர்ந்த 30 குடும்பங்கள் தொடர்ந்தும் இடைத்தங்கல் முகாமில்



அண்மையில் பெய்த கடும் மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட மன்னார், மடுக்கரை கிராமத்தைச் சேர்ந்த 30 குடும்பங்கள் தொடர்ந்தும் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ளன.

மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட மடுக்கரை கிராம மக்கள் கடும் மழையாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட நிலையில் இடம்பெயர்ந்து மடுக்கரை ம.வி. பாடசாலையில் தங்கியிருந்தனர்.

தற்போது இக்கிராமத்தில் வெள்ளம் வடிந்தோடிய நிலையில் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களது வீடுகளுக்கோ அல்லது உறவினர்களின் வீடுகளுக்கோ திரும்பிச் சென்றுள்ளனர். ஆனால சுமார் 30 குடும்பங்கள் வரை தொடர்ந்தும் இப்பாடசாலையில் தங்கியுள்ளதாக மடுக்கரை கிராம அலுவலர் தெரிவித்தார்.

தங்களது வீடுகள் தற்போதும் வெள்ளத்தில் மூழ்கிய நிலையில் காணப்படுவதாக மடுக்கரை ம.வி. பாடசாலையில் தங்கியுள்ள இம்மக்கள் தெரிவித்தனர்.

தாம் தொடர்ந்தும் இப்பாடசாலையிலேயே தங்கியுள்ளதாகவும் அடிப்படை வசதிகளின்றியுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.


இது இவ்வாறிருக்க இப்பாடசாலையிலுள்ள மக்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது மீண்டும் வீடுகளுக்குச் செல்லமுடியாத நிலையிலுள்ள எங்களை, உடனடியாக பாடாசாலையை விட்டு வெளியேறுமாறு அதிகாரிகள் பணித்துள்ளனர். தற்போது இங்கு அடிப்படை வசதிகளின்றி உள்ளோம். எங்களில் பலருக்கு தொற்றுநோய் ஏற்பட்டுள்ளது. எனவே எங்களை தொடர்ந்து சில தினங்களுக்கு இப்பாடசாலையிலேயே தங்கவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மடுக்கரை பாடசாலையில் தங்கியுள்ள இம்மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரினர்.

இப்பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், நானாட்டான் பிரதேச செயலர் மற்றும் உரிய கிராம அலுவலரின் கவனத்திற்கு கொண்டு வந்தார்.

நிலைமையை அவதானித்து தொடர்ந்து பாடசாலையில் அல்லது பொதுமண்டபமொன்றில் இம்மக்களை தங்கவைப்பதாக நாடாளுமன்ற உறுப்பினரிடம் அதிகாரிகள் கூறினர்.

# உழவு மாட்டை வெட்டிய 2 சந்தேக நபர்கள் கைது



(வட்டக்கச்சி)

வட்டக்கச்சிப் பகுதியில் உழவு மாட்டை வெட்டிய இரண்டு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை காணாமல்போயிருந்தஇரண்டு மாடுகளுள் ஒரு மாடு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேய்ச்சலுக்கு கட்டப்பட்ட இந்த இரண்டு உழவு மாடுகளும் இனம் தெரியாதோரால் கடத்திச்செல்லப்பட்டு அருகிலுள்ள காட்டுப்பகுதியில் வைத்து ஒருமாடு இறைச்சிக்காக வெட்டப்பட்டுள்ளது. மற்றையமாடு அக்காட்டுப்பகுதியில் மறைத்துக கட்டப்பட்டிருந்த நிலையில் மறுநாள் சனிக்கிழமை காலையில் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சிப் பொலிஸாருக்கு முறையிட்டதையடுத்து பொலிஸார் அப்பகுதியில் இறைச்சிக்காக வெட்டப்பட்ட மாட்டின்தோலை மீட்டதுடன் 2 சந்தேக நபர்களையும் கைது செய்துள்ளனர். இம் மாடுகளின் பெறுமதி 65ஆயிரம் ரூபா என்றும் தெரிவிக்கப்படுகின்றது. கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களிடமும் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (கே)

# நாம் எப்போது மீளக்குடியமர்வது? கேப்பாப்புலவு மக்கள் கேள்வி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள கேப்பாப்புலவு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருக்கும் நிலையில் தாம் சொந்த இடத்தில் எப்போது மீள்குடியமர்வது என கேள்வியெழுப்பி யுள்ளனர்.

இக்கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 130 குடும்பங்கள் வரை உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் இன்னமும் வாழ்ந்து வரும் நிலையில் இம்மக்கள் தம்மை சொந்த இடத்தில் மீள் குடியமர்த்துமாறு கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளனர்.

தாம் சொந்த இடத்தில் மீள் குடியமர்த்தப்படாமையால் பொருளாதார ரீதியிலும் வாழ்வாதார ரீதியிலும் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

எனவே தம்மை சொந்த இடத்தில் மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கையை உரிய அதிகாரிகள் மேற்கொள்ளவேண்டும் என இக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (04)

# வெள்ள அனர்த்த மதிப்பீடு: கரைச்சியில் முன்னெடுப்பு

கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் அண்மையில் ஏற்பட்ட கடும் மழையால் பாதிப்புற்றோரில் தொழில் உபகரணங்கள், சமையலறை உபகரணங்களை இழந்தோரின் விபரங்கள் திரட்டும் பணி தற்போது நடைபெற்றுவருகிறது.

அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக சமையலறை உபகரணங்களை இழந்தவர்களுக்கு தலா 1500 ரூபா வரையிலும், தொழில் உபகரணங்களை இழந்தவர்களுக்கு தலா 3000 ரூபா வரையிலும் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைவாகவே இவ் விபரம் திரட்டும் பணி கிராம அலுவலர்கள் மூலம் இடம்பெற்று நிறைவுபெறும் கட்டத்தை அடைந்துள்ளது. கடும் மழையினால் பாதிப்புற்று நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்ட குடும்பங்களே இவ்விதமான பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர்.


அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரனின் வழிகாட்டலில் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப்பணிப்பாளர் எஸ்.சுகுணதாசன் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளான கண்டாவளை, பூநகரி, பளை பிரிவுகளிலும் இவ் விபரங்களைத் திரட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

அத்துடன் வெள்ளப் பாதிப்பினால் நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த அனைத்துக் குடும்பங்களுக்கும் ஒருவாரகால உலர் உணவு நிவாரணம் வழங்கப்படவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (90)

# கொடுப்பனவை பெறவும்

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுசனமாதாந்த உதவிப்பணம் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவுகள் பெறுபவர்களுக்கான 2013 ஜனவரிமாதக் கொடுப்பனவுகள் அந்தந்த தபாலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் எனவும் இம்மாதம் 15ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளும்படியும் பிரதேச செயலக சமூகசேவைகள் பிரிவினர் தெரிவித்தனர். (11)



சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற பொலிஸாரின் வருடாந்த அணிவகுப்பு நிகழ்வில் சுன்னாகம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ்பரிசோதகர் GDR கங்கநாத் தலைமையில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் அணிவகுத்து நிற்பதையும் பொலிஸ் உத்தியோகத்தர்களை யாழ்.மாவட்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் கே.ஈ.எல் பெரேராபாதவையிடுவதையும் காணலாம். (54)








சாவகச்சேரி லியோறியா தேவாலயத்தின் ஒளிவிழா அண்மையில் நடைபெற்றது. இதில் சவேரியார் குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்பணி ஜே.ஜி.போல் றொசான் மங்கள விளக்கேற்றுவதையும், மாணவர்களின் கலை நிகழ்வையும், ஈ.பி.டி.பி தென்மராட்சி பிரதேச அமைப்பாளர் சாள்ஸ் மாணவரொருவருக்கு பரிசில் வழங்குவதையும் காணலாம். (11)

# முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் மக்கள் நலனில் அக்கறை காட்டவேண்டும்

## பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி



(கரணவாய்)

நெல்லியடிப் பிரதேசத்தில் சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மக்கள் நலனின் அக்கறை கொண்டு சிறந்த சேவையை வழங்க வேண்டும் என பருத்தித்துறை மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்களை கேட்டுள்ளார்.

நீதிபதி குறித்த முச்சக்கர வண்டி உரிமையாளர்களை அழைத்து அண்மையில் கருத்தரங்கொன்றை நடத்தினார். இதன போது முச்சக்கரவண்டி உரிமையாளர்களிடம் சில கோரிக்கைகளை முன்வைத்தார்.

இதில் முச்சக்கரவண்டி உரிமையாளர்கள் சீருடையணிதல், மதுபோதையுடன் வாகனம் செலுத்துவதை தவிர்த்தல், கர்ப்பிணித் தாய்மார்களுக்கான இலவச சேவை வழங்குதல், இடத்துக்கான கட்டண விபரங்களை மக்களுக்கு தெரியப்படுத்தல் போன்ற கோரிக்கைகளை செயற்படுத்தும் முகமாக முன்வைத்தார். இதனை முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டனர்.

மேலும் இக்கோரிக்கைகளை நடைமுறைப்படுத்தும் வகையில் முச்சக்கரவண்டி உரிமையாளர்களுக்கு நெல்லியடிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கங்கார தலைமையில் கருத்தரங்கு ஒன்று நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் நெல்லியடி வர்த்தகசங்க மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டதுடன் மேற்படி விடயங்களை செயற்படுத்துவதற்கும் ஆவன செய்யப்பட்டது.

இதில் சங்கத்தின் நிர்வாக தெரிவில் தலைவராக இ.கிருஷ்ணராஜா, செயலாளராக க.கவியழகன், பொருளாளராக து.ரமணன் ஆகியோரும் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (18)

# படிப்புக்கேற்ற வேலையில்லை பட்டதாரி பயிலுநர்கள் ஆதங்கம்

தற்போது வழங்கப்பட்டுள்ள பட்டதாரி பயிலுநர்களுக்கான வேலை அமர்தலில் தமக்குரிய தகுதிக்கு ஏற்ற வேலை வழங்கப்படவில்லை என பட்டதாரிப் பயிலுநர்கள் ஆதங்கம் தெரிவித்துள்ளனர்.

கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில் நுட்பங்களை கற்பிப்பதற்கு பாடசாலைகளில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் வேறு பாடங்களைச் சேர்ந்தோடு பொருத்தமில்லாத தொடர்பில்லாத வேலைகளைத் தந்து தம்மை மன அழுத்தங்களுக்கு உள்ளாக்குவதாகவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலகத்தில் இதுபோன்ற தவறுகள் அதிகமாகக் காணப்படுவதாகவும், தம் வேலையில் அதிருப்தி ஏற்படும்போது தம்மை வேலையை விட்டு விட்டு வீடுசெல்லுமாறும் ஏசுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே, தமது நிலைமையைக் கருத்திற்கொண்டு உரியவர்கள் நடவடிக்கை எடுத்து தமது கஷ்டத்தைப் போக்குமாறும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (12)

# முல்லைத்தீவு பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் கசிப்பு உற்பத்தி மற்றும் சட்டவிரோத விற்பனை நடவடிக்கைகள் என்பன தொடர்ந்தும் இடம்பெறுவதால் சிறுவர்களும், பெண்களும் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக அப்பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதில் ஹிஜ்னாபுரம், கொக்குத்தொடுவாய் ஆகிய கிராமங்கள், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவிலுள்ள முத்தையன்கட்டு, புதுக்குடியிப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வள்ளுவர்புரம் ஆகிய கிராமங்களில் இவ்வாறான சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அதிகமாக காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை நடவடிக்கையால் குறிப்பாக சிறுவர்கள் இதனை பாவிக்கும் நிலையும் வேறு ஒரு இடத்திற்கு கொணடு சென்று விற்பது போன்ற செயற்பாடுகளால் சிறுவயதிலே இவர்கள் குடிப்பழக்கத்துக்கு ஆளாக நேரிடுவதாகவும் மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதைவிட குடும்பங்களுக்கு இடையேயும் வன்முறைகள் சண்டைகள் ஏற்படுவதற்கும் இவை காரணமாக அமைவதாகவும் தெரிவிக்கும் மக்கள் இதனால் பெருமளவில் பெண்களே பாதிப்புக்களை எதிர்நோக்கி வருவதாகவும் இவர்கள் கொடுமைகளுக்கு ஆளாவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இப்பிரதேசங்களில் தொடர்ந்து நடைபெறும் இவ்வாறான சட்டவிரோத கசிப்பு உற்பத்தியை தடுக்கப் பொலிஸார் தீவிர நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (04)

# கட்டையாப்பு வீதியை செப்பனிடுமாறு கோரிக்கை

(கொடிகாமம்)

சாவகச்சேரி பிரதேச சபைக்கு உட்பட்ட குடமியன் கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கட்டையாப்பு வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால் போக்குவரத்துக்கள் நெருக்கடியாக இருப்பதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

கொடிகாமம் நகரை நோக்கிச் செல்லும் குடமியன், நாவற்காடு, மிருசுவில் வடக்கு பகுதி மக்களது முக்கியமான போக்குவரத்து பாதையாக இவ்வீதி காணப்படுகின்றது.

அத்துடன் இவ் வீதியினை 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பயன்படுத்துகின்றன. இப்பகுதியில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்திப் பொருட்களை கொடிகாமம் சந்தைக்கு கொண்டு செல்ல இவ்வீதியே பயன்படுகின்றது.

இவ்வீதியானது கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாத காரணத்தினால் குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

மழைகாலங்களில் இவ்வீதியில் பல இடங்களில் நீர் தேங்கி நிற்பதால் பாடசாலை செல்லும் மாணவர்கள் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனமெடுத்து வீதியினைத் திருத்தித் தருமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (130)

# ஆஞ்சநேயர் ஜெயந்தி


(குருநகர்)

அளவெட்டி மேற்கு நாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை ஆஞ்சநேயர் ஜெயந்தி சிறப்பாக நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் பூசைகள் ஆரம்பமாகும். 9 மணிககு சிறப்பு சமயச் சொற்பொழிவு இடம்பெறும்.

முற்பகல் 10 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் அதனைத் தொடர்ந்து ஆஞ்சநேய சுவாமி வீதியுலாவும் இடம்பெறும். மதியம 12 மணிக்கு மகேஸ்வர பூசையும் நடைபெறும். (68)

# கன்ரர் வாகனம் மோதி இடிந்து விழுந்தது மடம்



(திருநெல்வேலி)

கல்வியங்காடு - பருத்தித்துறை வீதியில் இருந்த மடம் ஒன்று வாகனம் ஒன்றினால் மோதப்பட்டு இடிந்து விழுந்துள்ளது. கடந்த வெள்ளிக்கிழமை இவ் வீதியால் வந்த கன்ரர் வகை வாகனம் இம் மடத்தை மோதி விழுத்தியுள்ளது.

மடத்தின் முக்கால் பகுதி இடிந்துள்ளது. கூரைகள், தூண்கள் என்பன தரையில் விழுந்து சேதமடைந்துள்ளன. இரவு 10.00 மணிபோல் பாரிய சத்த மொன்று கேட்டதாகவும், பொது மக்கள் சென்று பார்த்தபோது கன்ரர் வாகனம் மோதி மடம் விழுந்துள்ளதைக் கண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வியங்காடு இலங்கை நாயகி அம்மன் கோயிலுக்கு முன்பாக இம்மடம் பல வருடங்களாக இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (137)

நம்பிக்கை குறையும் போது ஒவ்வொரு மனிதனும் நெறியற்ற கொள்கையை மேற்கொள்கிறான். - ஜான்மில்டன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## எதைச் சாதிப்பதற்கு இதை எதிர்க்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள்!

அரசாங்கம் வாழ்வின் எழுச்சி (திவிநெகும) சட்டமூலத்தை நிறைவேற்ற விடக்கூடாது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏனைய கட்சிகளிடமும் கேட்டுள்ளது. குறிப்பாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற அரசில் பங்கு வகிக்கும் சிறுபான்மையினர் கட்சிகள் தங்களோடு சேர்ந்துகொண்டு இந்தச் சட்ட மூலத்தை எதிர்க்க வேண்டும் என்று அது கேட்டுள்ளது.

அந்தச் சட்டமூலத்தால் காப்பாற்றப்படப் போகும் வடக்கைச் சேர்ந்த 55,000 குடும்பங்களினது நன்மைக்காகவும், இந்தச் சட்ட மூலத்தை ஆதரிக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளோடு இணைந்து முன்வரவேண்டும் என்று அந்தக் கட்சிகள் கேட்டுக்கொண்டால் இவர்கள் வருவார்களா என்பது ஒருபுறமிருக்கட்டும். இதையும் எதிர்த்து தமிழரசுக் கட்சியினர் தமிழ்மக்களுக்குச் சாதிக்கப் போவது எதை என்றாவது அவர்கள் தெளிவாகச் சொல்ல வேண்டும்.

இந்த நாட்டில் அரசாங்கங்கள் கொண்டுவரும் எல்லாத் திட்டங்களையும் எதிர்ப்பதும் எரிப்பதும் என்ற நிலைப்பாட்டிலேயே தொடர்ந்து இயங்கிவந்த இந்தத் தமிழரசுக் கட்சியினர் தமிழ் மக்களுக்கு எதைத்தான் கிடைக்கச் செய்தார்கள் என்பதை நாம் வரலாற்றில் பார்த்துவிட்டோம். இப்போதும் வடமாகாண மக்களுக்குக் கிடைக்கவிருக்கும் சமுர்த்தி உதவிகளையும் நிப்பாட்டிவிடும் உணர்ச்சிகர அடுக்குகளையே எடுத்து வருகிறார்கள்.

இவர்கள் உணர்ச்சிகர ஆவேசங்களால் மக்களைத் திசை திருப்பிவிட்டு, தென்னிலங்கை எதிர்க்கட்சிகளோடு இணைந்து கொண்டு எல்லாவற்றையும் எதிர்த்துக் குழப்புவதும், பின்னர் காலங்கடந்த பிறகு அதையே திரும்பக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்துடன் சண்டைபிடிப்பதுமான நாடகத்தை அறுபது வருட காலமாக எல்லோரும் பார்த்துவிட்டோம். இப்போது வாழ்வின் எழுச்சித் திட்டத்தாலும் தமிழ் மக்களுக்கு நன்மை கிடைத்துவிட வேண்டாம் என்றே நினைக்கிறார்கள்.

13வது திருத்தத்தை முழுமையாகக் காப்பாற்றிக்கொள்ள இவர்கள் தெரிவுக்குழுவுக்குப் போய் நமக்குத் தேவையான அதிகாரங்களை உரிமைகளைச் சொல்லி ஏனைய கட்சிகளையும் அதற்கு ஆதரவாகச் சேர்த்துகொண்டிருக்க வேண்டும். குறைந்தபட்சம், சிறுபான்மைக் கட்சிகளுடனாவது கூடிப் பேசி, சமுர்த்தி அதிகாரங்களை மத்தி எடுத்துக்கொள்ளுமானால், மாகாணத்திற்கு இவையிவை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று சேர்ந்தொன்றாய் அரசை வலியுறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்க வேண்டும்.

யதார்த்தம் எதுவோ அதைப் பேசி நடக்கக் கூடிய திட்டத்திற்கு ஆதரவு தேடுவதை விட்டுவிட்டு, எல்லாவற்றையும் சும்மா எதிர்த்துக் கொண்டிருக்கலாம் வாருங்கள் என்றால் யார்தான் வருவார்கள்? இதுகால வரலாற்றைத் தெரிந்த–அரசியல் தெரிந்த எவரும் தமிழரசுக் கட்சியினரின் குருட்டுத்தனமான எதிர்ப்பரசியலுக்குத் துணைபோவது, மேலும் மேலும் எமது மக்களைத் தற்கொலைப் பாதைக்குத் தள்ளுவதாயே இருக்கும் என்றே தள்ளி விலகுவார்கள்.

தன் தோல்வியிலிருந்து எதையும் கற்றுக்கொள்ள மறுக்கும் சமூகம் முன்னோக்கி நகராது என்பது உண்மை. இவ்வளவு கால எதிர்ப்பு அரசியலும் எரிப்பு அரசியலும் கொண்டுவந்த விளைவுகளை அலசிப்பார்க்கும் எவருக்கும் இவர்கள் தமிழ் சமூகத்தை எவ்வளவுதூரம் பின்னடைய வைத்திருக்கிறார்கள் என்பது விளங்காமலிருக்காது. இந்த உண்மையையும் விளங்காதது போல நடித்துக் கொண்டிருக்கும் தலைவர்களின் போக்கும், சாதாரண மக்களைக் கணக்கிலெடுக்காத சமூக மேல்தட்டினரின் தற்திருப்தி அரசியலும் நிச்சயம் தீவிர கவலைக்குரியது தான்.

- ஆசிரியர்

# நாடாளுமன்ற அதிகாரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது

## அமைச்சர் யாப்பா அறிவிப்பு

(கொழும்பு)

நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் எந்தத் தருணங்களிலும துஷ்பிரயோகம் செய்யப்படமாட்டாது அவை பொதுமக்களின் நன்மைக்காகவே பயன்படுத்தப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசியல் குற்றப் பிரேரணை தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் அமைச்சர் அனுர பிரியதர்ஷன யாப்பா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

குருநாகலை - மாவத்தகம பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், ஒவ்வொரு துறையினதும் அதிகாரங்களை அறிந்து அவற்றின் வரையறைகளை மீறாமல் செயற்படுவதன் ஊடாகவே ஜனநாயகத்தை நிலைநாட்ட முடியும் என குறிப்பிட்டார்.

தன்னிச்சையாக செயற்பட முடியாது, அவ்வாறு செயற்பட எமக்கு அதிகாரமும் இல்லை. நீதிமன்றத்திற்கும் அரசியலுக்கும் எந்தப் பிரச்சினையும் இல்லை. நாடாளுமன்றத்திற்கு உள்ள அதிகாரங்கள் அதிகம்.

அவற்றை நாட்டு மக்களின் நன்மைக்காகவே பயன்படுத்த முடியும். இந்த அரசாங்கத்திற்கு வெறுமனே மூன்றில் இரண்டு அதிகாரம் இல்லை.அதனுள் மக்களின் எதிர்பார்ப்புகள் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய அவசியம் இருக்கின்றது.

இதேவேளை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் தேசிய சட்டத்தரணிகள் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கு இடையில் கொழும்பில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இந்தச் சந்திப் பின்போதே, பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை தொடரபில் அதிககவனம் செலுத தப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

குற்றப்பிரேரணை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் கொண்டுள்ள நிலைப்பாட்டுக்கு தாம் ஆதரவளிப்பதாக தேசிய சட்டத்தரணிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. நாடாளுமன்றத்தின் ஒரு செயற்பாடான குற்றவியல் பிரேரணை. விசாரணைக்கான சட்டம் போதுமானதாக இல்லை என்பதால் தேவையான அதிகாரத்தை பெற்றுக்கொள்ள புதிய சட்டம் ஒன்றை நாடாளுமன்றம் நிறைவேற்றிக்கொள்ள வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சித் தரப்பினர் தெரிவித்திருந்தனர்.

# கொழும்பு சட்டக்கல்லூரி விவகாரம் தெற்கு அரசியலில் சூடு கிளம்புகிறது

## பலம் பொருந்திய முறைகேடு என்கிறார் சம்பிக்க

(கொழும்பு)

கடந்த ஆண்டுக்கான சட்டக்கல்லூரியின் நுழைவுத் தேர்வுப் பரீட்சையில் பலம் பொருந்திய முறைகேடுகள் இடம்பெற்றுள்ளமைக்கான சாத்தியங்களை ஒப்புவித்துக் காட்ட முடியும் என அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

சட்டக்கல்லூரியின் நுழைவுத் தேர்வுப் பரீட்சை தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினை குறித்து தெளிவுபடுத்தும் நோக்கில் கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சட்டக்கல்லூரிக்கான நுழைவுத் தேர்வுப் பரீட்சையில் பலம் பொருந்திய அநீதி ஏற்பட்டுள்ளது. தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் தோற்றியவர்கள் அதிகளவில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதனை ஆராய்ந்து பார்க்கும் போது, பாரதூரமான பிரச்சினை இந்த இடத்தில் இருப்பது எனக்கு புலப்படுகிறது. பரீட்சையின் புள்ளிகள் நியாயமாக வழங்கப்பட்டது என எவராவது கூறுவார்களேயானால் அது முற்றிலும் பொய்யானது. இதனை ஒப்புவித்துக் காட்டமுடியும். பரீட்சைத்தாள வெளியானதா இல்லையா என்பது குறித்து புலனாய்வுப் பிரிவினருக்கு உறுதிப்படுத்த முடியுமா முடியாதா என்ற போதிலும் இதனை எங்களால் தெளிவாக ஒப்புவித்துக் காட்டமுடியும் எனவும் சம்பிக்க ரணவக்க கூறியுள்ளார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் நீதியமைச்சராக பதவி வகிக்காத 2010 ஆம் ஆண்டுக்கு முன்னர், 7 முதல் 8 முஸ்லிம் மாணவர்கள் நுழைவுத் தேர்வில் தேர்ச்சி பெற்றனர். எனினும் ஹக்கீம் நீதியமைச்சராக பதவி வகிக்கும் 2011 ஆம் ஆண்டு 51 முஸ்லிம் மாணவர்களும், 2012 ஆம் ஆண்டு 78 முஸ்லிம் மாணவர்களும் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

# "நேட்டோ" படைத்தளங்களில் இலங்கைத் தொழிலாளர்கள் அவதி

## அபாயத்தை நீக்க முயற்சிக்குமா அரசு

(கொழும்பு)

அமெரிக்காவில் பணியாற்றும் இலங்கையைச் சேர்ந்த தொழிலாளர்களை யுத்த அபாயம் நிறைந்த நாடுகளில் நேட்டோ படை நிலைகளில் பணியாற்றும் படி நிர்ப்பந்தங்கள் செய்யப்படுவதாக தகவல்கள் கசிந்துள்ளன.

இது குறித்து மேலதிக தகவல்களைத் திரட்டும் முயற்சியில் இப்போது இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது.

இலங்கையில் இருந்து சென்ற பணியாளர்களை அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படையினர் நிலை கொண்டுள்ள ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானிய இராணுவத் தளங்களுக்கு சட்டவிரோத ஆட்கடத்தல் நடவடிக்கைகள் மூலம் அனுப்பும் நடவடிக்கை தொடர்பில் அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல மில்லியன் ரூபாய்களின் அடிப்படையில் இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது. இதனையடுத்து இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள குழு ஒன்றை நியமிக்க, வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது. குறித்த ஆட்கள், போலிக் கடவுச்சீட்டு மற்றும் விசாக்களின் மூலம் ஈராக்குக்கும் ஆப்கானிஸ்தானுக்கும் அழைத்துச் செல்லப்படுவதாக முறையிடப்பட்டுள்ளது.

# நோயாளிகள் மீது அதிககட்டணச் சுமை; நுகர்வோர் பாதுகாப்புசபை அதிருப்தி

(கொழும்பு)

நோயாளர்களிடம் ஈவு இரக்கமின்றி அதிக பணம் அறவிடும் தனியார் மருத்துவமனைகள் தொடர்பாக நுகர்வோர் பாதுகாப்பு அதிகார சபை தனது கவனத்தை திருப்பியுள்ளது.

இந்த மருத்துவமனைகள் தம்மை நாடி வரும் நோயாளர்களைப் பாதிக்காத வகையில் தமது கட்டணப் பிரமாணங்களைப் பின்பற்ற வேண்டும் என்று நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபை எதிர்பார்கிறது.

சில தனியார் வைத்தியசாலைகள் அறவிடும் அசாதாரண கட்டணங்கள் தொடர்பில் தமக்கு பல முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அச்சபை தெரிவித்துள்ளது.

மேலும் கட்டணங்கள் எதற்காக அறவிடப்படுகின்றது? எவ்விதமான சிகிச்சை அளிக்கப்படுகின்றது அதற்கான கட்டணம் என்ன என்பது தொடர்பிலும் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் தொடர்பிலும் நோயாளிகளுக்கு அல்லது அவருக்கு பொறுப்பானவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட வேண்டுமெனவும் நுகர்வோர் அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தனியார் வைத்தியசாலைகள் சிலவற்றில் அதிக கட்டணம் அறவிடப்படுவதுடன் அதற்கான காரணம் என்ன என்பது தொடர்பில் தமக்கு தெளிவுபடுத்தப்படுவதில்லையென தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை குறிப்பிடுகின்றது.

# இங்கு மாற்றம் வரவேண்டுமாயின் இரு பக்கமும் உள்ள இனவாதிகள் ஓரங்கட்டப்பட வேண்டும்!

**ஸ்ரீபதி கட்டுரையிலிருந்து**


“இலங்கைத் தீவில் இருந்து 1948இல் ஆங்கிலேயர்கள் வெளியேறியதில் இருந்து தமிழர்களின் உரிமைகள் படிப்படியாக பறிக்கப்பட்டு வருகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக முதலில் அகிம்சை வழியிலும் பின்னர் ஆயுதம் ஏந்தியும் போராடினோம். இன்று ஆயுதப் போராட்டம் முடிவுக்கு வந்துவிட்டது. உரிமைகள் எதுவுமே வழங்கப்படவில்லை. சுட்ட மண்ணும் பச்சை மண்ணும் ஒட்டாது. நாம் சர்வதேசத்தின் உதவியுடன் போராடுவோம்...” வெளிநாடுகளில் வதியும் எம்மவர்கள் சிலரினால் வைக்கப்படுகின்ற ஒப்பாரி தான் இது.

தமிழ் மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமையை வாரிசு அடிப்படையில் தாங்களே பெற்றுள்ளதான தோற்றத்தினை நிலைநாட்ட இக்கூட்டம் விரும்புகின்றது. மக்கள் நலனைப்பற்றிய அக்கறை இவர்களுக்கு எள்ளளவும் இல்லை. மேலோட்டமாகப் பார்த்தால் இவர்களின் ஒப்பாரி சரி போல தான் தெரியும். இந்த மேலோங்கிகளின் நல நோக்கில் இருந்து அணுகும் போது இவர்களின் ஒப்பாரி சரி தான். மண்ணிலிருந்து அவலப்படுகின்ற மக்களுக்கல்லவோ மரண வேதனை. பூனைக்குக் கொண்டாட்டம் எலிகளுக்குத்தான் திண்டாட்டம்.

**தொடர்ந்து யாழ்ப்பாண சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த பிரபுத்துவ வர்க்கத்தினரே இந்த நிலைமையின் சூத்திரதாரிகள் எனப் புரியப்பட வேண்டும். ஆளும் மேலோங்கிகளிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஆள விரும்பும் மேலோங்கிகளால் பயன்படுத்தப்படுகின்ற ஆயுதம் இனப்பிரச்சினை தான். இந்தச் சூழல் உருவாவதற்கு வழி சமைத்துக் கொடுத்தவர்கள் வடமாகாணத்தில் இருந்து சட்டசபைக்கு சென்ற தமிழ் பிரபுக்கள் தான்.**

இன்னொரு புறத்திலே இருக்கின்றது அரசு. இனப்பிரச்சினை என்பதே இந்த நாட்டில் இல்லை என்ற கூச்சல் போடுகின்ற பேரினவாதிகளையும் தன்னகத்தே கொண்ட அரசு இந்தப் பேரினவாதிகளுக்கு ஈடுகொடுத்து இனப்பிரச்சினைத் தீர்வையே இழுத்தடித்துக் கொண்டிருக்கிறது.

இனப்பிரச்சினை தொடர்பான முரண்பாடுகள் காலத்திற்குக் காலம் பல தடவைகள் மேற்கிளம்பியுள்ளன. இதில் 1956 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட உத்தியோக மொழிச்சட்டம் ஒரு திருப்பமாக அமைந்தது. சிங்கள மொழிச்சட்டம் என்ற இச்சட்டம் மக்கள் மத்தியில் ஓர் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. 1930 களிலேயே யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் ஊடாக பிரித்தானிய ஏகாதிபத்தியத்திற்கு எதிராக குரல் கொடுத்த மக்களை அரசுக்கெதிராகப் போராடும் நிலைமைக்கு மாற்றிவிட்டது இந்தச் சட்டம்.



1930களிலேயே யாழ்ப்பாண மாணவர்களிடம் மேற்கிளம்பி வந்த சமூக விடுதலையுடன் கூடிய விடுதலை உணர்வு முளையிலே கிள்ளி ஏறியப்பட்டமையும் ஒரு காரணம். தொடர்ந்து யாழ்ப்பாண சமூகத்தில் ஆதிக்கம் செலுத்திவந்த பிரபுத்துவ வர்க்கத்தினரே இந்த நிலைமையின் சூத்திரதாரிகள் எனப் புரியப்பட வேண்டும். மிக அண்மைக் காலம் வரை தென்னிலங்கை தேர்தல் அரங்கிலேயே இனப்பிரச்சினைதான் முக்கியபேசுபொருளாக மாறியுள்ளது. ஆளும் மேலோங்கிகளிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு ஆள விரும்பும் மேலோங்கிகளால் பயன்படுத்தப்படுகின்ற ஆயுதம் இனப்பிரச்சினைதான். இந்தச் சூழல் உருவாவதற்கு வழிசமைத்துக் கொடுத்தவர்கள் அன்று வடமாகாணத்தில் இருந்து சட்டசபைக்கு சென்ற தமிழ் பிரபுக்கள்தான்.

இலங்கையின் உத்தியோக மொழியாக சுதேச மொழிகள் பயன்படுத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கை 1940களில் சட்ட சபையில் முன்வைக்கப்பட்டது. ஆங்கிலத்தின் இடத்தைச் சிங்களத்திற்கு வழங்கப்பட வேண்டும் என்ற பிரேரணை ஜே.ஆர்.ஜெயவர்தனாவினால் முன்மொழியப்பட்டது. மட்டக்களப்பு பிரதிநிதி அமரர் நல்லையாவினால் முன்வைக்கப்பட்ட சிங்களத்துடன் தமிழும் இடம் பெற வேண்டும் என்ற திருத்தத்துடன் இப்பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஏனைய தமிழ்ப் பிரதிநிதிகள் அமரர் சி.டபிள்யூ. ஜாயா இனால் முன் மொழியப்பட்ட மாற்றுப் பிரேரணைக்கே ஆதரவு வழங்கியுள்ளனர். அவருடைய முன்மொழிவு உத்தியோக மொழியாகச் சுதேச மொழிகளை அவசரப்பட்டு மாற்றாமல் ஆங்கிலம் தொடர அனுமதிக்கப்படவேண்டும் என்று இருந்தது. இந்த நடவடிக்கை தமிழரை விரோதமாகப் பார்க்கும் நிலையைத் தோற்றுவித்தது. தமிழர்கள் என்போர் சாதாரண மக்களின் நலனுக்கெதிரானவர்கள் என்ற தோற்றப்பாடு உருவாக்கப்பட்டது. தொடர்ந்து இலவசக் கல்வியின் தந்தை எனப்படுகின்ற C.W.கன்னங்கராவினால் கொண்டு வரப்பட்ட கல்வி மசோதாவையும் வடமாகாணத்தில் இருந்து சென்ற பிரதிநிதிகள் எதிர்த்துள்ளனர். வாய் சப்பிய சிங்கள இனவாதிகளுக்கு அவல் கிடைத்து போலாயிற்று இவர்களின் நடவடிக்கைகள். இப்படித்தான் தோற்றம் பெற்றது இனவாதம்.

1957 இல் பண்டா-செல்வா ஒப்பந்தம் எழுதப்பட்டது. வடக்குக் கிழக்கு மாகாணங்களின் நிர்வாகத்தில் தமிழின் பயன்பாட்டிற்கு இந்த ஒப்பந்தம் வழிவிட்டது. ஏட்டிக்குப் போட்டியாக ஐக்கிய தேசியக் கட்சியினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் ஒப்பந்தத்தைக் கிழித்தெறியப் பண்ணின. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் தலைமையில் ஒப்பந்தத்தைக் கண்டித்து கொழும்பிலிருந்து கண்டிக்கான பாதயாத்திரை முயற்சிக்கப்பட்டது. பேரினவாதத் தீ பிரவாகம் எடுத்து எரியத் தொடங்கியது.

கூட்டாட்சி அமைக்கும் நோக்குடன் 1965 இல் ஐக்கிய தேசியக் கட்சியும் தமிழரசுக்கட்சியும் இணைந்து ஒரு ஒப்பந்தம் எழுதின. அது டட்லி-செல்வா ஒப்பந்தம் என்று அழைக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையிலான எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பினால் இதுவும் கிழித்தெறியப்பட்டது. முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவினால் முயற்சிக்கப்பட்ட அரசியல் தீர்வுப் பொதியும் இரு பக்க இனவாதிகளின் எதிர்ப்பினால் கைவிடப்பட்டது. இன்று நிதர்சனமாக உள்ளது 13ஆம் திருத்தச்சட்டம் மட்டுமே. அதுவும் மூல வடிவத்தில் இல்லை இரண்டு தடவைகள் வெட்டப்பட்டு விட்டது.

தமிழ் தேசியக்கூட்டமைப்புத்தான் தற்போது பெரும்பான்மையான தமிழ் மக்களின் ஆதரவு பெற்ற அமைப்பு ஆகும். இது பல கட்சிகளின் கதம்பமாக இருந்தாலும் இதனுடைய முதன்மையான அமைப்பு தமிழரசுக் கட்சியாகும். இதனால் இது ஒரு மிதவாத அமைப்பாக அடையாளம் காணப்படுகின்றது. புலிகளால் கட்டப்பட்ட அமைப்பு என்றும் விமர்சிக்கப்படுகின்றது. அண்மையில் இதன் தலைவர் இரா.சம்பந்தன் பாராளுமன்றத்தில் விடுதலைப்புலிகள் பற்றிக் கூறிய கருத்துக்கள் சுய விமர்சனமாக அமையாவிட்டாலும், பல யதார்த்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவர் இதனைக் குறிப்பிட்ட போது தன்னை நம்பி வாக்களித்த தனது மக்களுக்கு வழிகாட்டும் கடமையைச் செய்துள்ளார் என்றே குறிப்பிட வேண்டும்.


வரலாற்றில் இருந்து பாடம் கற்கத் தவறிய பலர் அதனைக் கடுமையாக விமர்சிக்கின்றனர். பழம் பெருமை பேசி பட்டபாடுகள் போதும். அப்பன் கட்டிய கிணறு எண்டதுக்காய் உப்புத்தண்ணியைக் குடிச்சுக் கொண்டு இருக்கேலாது.

30 வருடகாலம் நீடித்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தமையால் இந்த அரசுக்கு ஒரு தனியிடம் உண்டு. பயங்கரவாதத்தைத் தோற்கடித்து விட்டதாகக் கூறுவது ஏற்றுக் கொள்ளவேண்டியதே! போர் ஓய்ந்து 3 வருடங்கள் கடந்து விட்ட நிலையிலும் உருப்படியான அரசியல் தீர்வு முயற்சிகள் ஒன்றுமே மேற்கொள்ளப்படவில்லை. அரசு பின்னடிக்கின்றது என்றுதான் கூறவேண்டும். பௌதீக அபிவிருத்திகள் நடைபெறுகின்றன. வீதிகள் அகலித்து, பாரிய கட்டடங்கள் எழும்புகின்றன. தென்னிலங்கையில் இருந்து பல வாகனங்கள் வந்து போகின்றன. வீதிகள் வாகனங்களாலும் கடைகள் வியாபாரப் பொருட்களாலும் நிரம்பி வழிகின்றன. மீள் குடியேற்றமும் நடந்துள்ளது. அரசியல் செயற்பாடுகள் ஜனநாயகமயப்படுத்தப்படவில்லை மக்கள் மனம் விட்டுக் கதைக்கப்படுவதில்லை. தென்னிலங்கை மக்கள் வந்து போகின்றனர். அன்பாகப் பழகுகின்றனர்.

(17ஆம் பக்கம் பார்க்க)

## புகைவண்டியில் மோதி இளம் யுவதி மரணம்

### மற்றுமொருவர் படுகாயம்



(கொழும்பு)

பொல்காவலை புகைவண்டி நிலையத்திற்கு அருகில் ஓமந்தையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த புகைவண்டியில் இரு பெண்கள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் 24 வயதான வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த பெண், மேலதிக சிகிச்சைகளுக்காக குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# பல்கலைக்கழகத்தில் கல்வி நடவடிக்கை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும்

## இல்லையேல் இழுத்து மூடப்படும் என்கிறார் உயர்கல்வி அமைச்சர்

(கொழும்பு)

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் கல்வி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்காவிட்டால், அந்த பல்கலைக்கழகம் இழுத்து மூடப்படும் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

கல்விச் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிக்காவிட்டால் குறைந்தது ஒரு வருடத்துக்காவது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தை மூடவேண்டி வரும் என்று தாம் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் தெரிவித்துள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் கடந்த வாரம் அமைச்சருடன் இடம்பெற்ற சந்திப்பின் போது மாணவர்கள் வருகை தராவிட்டாலும், பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தமது விரிவுரைகளை ஆரம்பிக்க வேண்டும் என்று அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

எனினும் வெலிக்கந்தை புனர வாழ்வு மையத்தில் வைக்கப்பட்டுள்ள நான்கு மாணவர்களையும் விடுவிக்கும் வரை விரிவுரைகளை பகிஷ்கரிப்பது என்ற மாணவர்களின் தீர்மானத்தில் இன்னும் மாற்றங்கள் தென்படவில்லை.

இதற்கிடையில் மாணவர்கள் தவறு இழைத்திருந்தால் அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர் செய்து விடுவிக்கவேண்டும் என்று இலங்கை ஆசிரியர்கள் சங்கம் உயர்கல்வி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.



## மன்னாரில் வெள்ளப்பாதிப்பு சேதவிபர மீளாய்வு கூட்டம்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு தொடர்பாக ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பில் மீளாய்வு செய்யும் அவசர கூட்டம் நேற்றுமுன்தினம் 11 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் அமைச்சர் ரிசாட் பதியுதீன் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது மக்களின் இடப்பெயர்வுகள், அதனாலேற் பட்ட சொத்தழிவு, நெற்பயிர்ச் செய்கையின் அழிவுகள், உடைக்கப்பட்ட குளங்கள் ஆகியவை தொடர்பில் மீளாய்வு செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கும் வெள்ளத்தின் போது பயன்படுத்தும் தற்காப்பு அங்கிகள் வழங்கி வைக்கப்பட்டது.

# களனியில் நடந்த கொலை விசாரிக்க விசேட குழு விரைவு



(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் களனி பிரதேச சபை உறுப்பினர் ஹசித்த மடவல சுட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள விசேட பொலிஸ் குழு ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

இரண்டு பேரின் வாக்குமூலங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரிஷாந்த ஜயகொடி தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் 7.30 - 7.40 இடைப்பட்ட நேரத்தில் இனந் தெரியாத ஆயுததாரிகளால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்த ஹசித மடவல கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தன் பின்னர் உயிரிழந்தார். களனி - வராகொட பகுதியில் வைத்து தனது வாகனத்திலிருந்து இறங்கி வீட்டிற்கு செல்ல முற்பட்ட வேளையில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவரால் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இலக்கத்தகடு இல்லாத மோட்டார் சைக்கிள் ஒன்றில் வருகைத்தந்த இருவரே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரணிக்கும் இலங்கையர்களிடம் உடல் அவயவங்கள் திருட்டு

## அச்சத்தில் உறையும் பணியாளர்கள்

(கொழும்பு)

வெளிநாடுகளில் மரணிக்கும் இலங்கைப் பணியாளர்களிடமிருந்து திருட்டுத்தனமாக உடல் அவயவங்கள் அகற்றப்படுவதாக அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளது.

குறிப்பாக மத்திய கிழக்கில் பணியாற்றும் போது உயிரிழக்கும் இலங்கைப்பணியாளர்களின் அவயவங்கள் திருட்டுத்தனமாக அகற்றப்படுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது. மத்திய கிழக்கில் பணியாற்றும் பெண்கள் பெரும்பாலும் சித்திரவதை மற்றும் தடுத்து வைத்தல் போன்ற நிலைமைகளுக்கு ஆளாகின்றனர்.

இந்தநிலையில் இறந்தவர்களின் உடல் உறுப்புக்களும் அகற்றப்படுவதாக முறைப்பாடு புதிதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே மத்திய கிழக்குக்கு பணிகளுக்காக செலலும் பெண்களின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் குறிப்பிட்டுள்ளது.

# நீதித்துறைக்கு சாவுமணி அடிக்கப்பட்டால் நாடு முழுவதும் மோதல் வெடிக்கும்

## ஐ.தே.கட்சி எச்சரிக்கை

(கொழும்பு)

நாட்டில் நீதித்துறைக்கு சாவுமணி அடிக்கப்பட்டால் நாடு முழுவதும் மோதல்கள் வெடிக்கும் அபாயம் தோன்றும் என்று ஐக்கிய தேசியக் கட்சி எச்சரித்துள்ளது.

நீதித்துறையில் வீழ்ச்சி ஏற்பட்டால் அது அந்நாட்டின் ஜனநாயகத்தில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கு நாடுகளில் தற்போது இராணுவ மோதல் மூண்டுள்ளமைக்கு காரணம் ஜனநாயகமின்மையே என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கம்பகா பகுதியில் கடந்த சனிக்கிழமை காலை இடம் பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

# வினாத்தாள் மோசடியைத் தடுக்க "பொக்கற்" இல்லாத சீருடை

(கொழும்பு)

பரீட்சை வினாத்தாள்களை அச்சிடும் அச்சகப்பகுதிகளின் பாதுகாப்பை பன்மடங்காக அதிகரிப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக தெரிவித்த பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் புஷ்பகுமார, அச்சகப் பகுதிகளில் சேவையாற்றுகின்ற ஊழியர்களுக்கு "பொக்கட்" இல்லாத சீருடையை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

கல்விப்பொதுத்தராதர சாதாரணத்தரப்பரீட்சையின் விஞ்ஞான வினாத்தாள்கள் வெளியானதை அடுத்தே அச்சகப் பகுதிகளின் பாதுகாப்பு அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாதாரணத்தரப் பரீட்சை விஞ்ஞான வினாத்தாள் வெளியாகியதை அடுத்து புதிய தொழில்நுட்பங்களுடன் கூடிய பாதுகாபபு கருவிகளையும் பொருத்துவதற்கும் நவீன அச்சடிக்கும் இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கின்றது என்றார்.

# மருந்துப் பொதிகளில் மும்மொழி அறிவித்தல்

## கால எல்லை நீடிப்பு




(கொழும்பு)

விற்பனைக்கு தயார் நிலையிலுள்ள மருந்து பொருட்களின் விபரங்கள் மருந்து பொதிகளில் மூன்று மொழிகளிலும் பதிவு செய்வதற்கான காலஎல்லை பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மருந்து பொருட்களின் விபரங்கள் அவ்வாறு மூன்று மொழிகளிலும் குறிப்பிடப் படுகின்ற சந்தர்ப்பங்களில் நடைமுறை பிரச்சினைகள் எழுமாயின் அதற்கான விசேட அனுமதியினை பெற்றுக் கொள்ள வேண்டும் என அரச கரும மொழி ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ஆர்.ரணவக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி மருந்துகளின் விபரங்கள் மூன்று மொழிகளிலும் பதிவு செய்துள்ளமை கட்டாயமாக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

சந்தையிலுள்ள மருந்து பொருட்களின் விபரங்கள் மூன்று மொழிகளிலும் பொதிகளின் பதிவு செய்யப்பட வேண்டும் என கடந்த ஆகஸ்ட் மாதம் அறிவித்தல் விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# "க்ளோக்சசிலின்" மருந்து பாவனைக்குத் தடை

(கொழும்பு)

கண்ணாடித் துண்டுகள் காணப்பட்ட மருந்தினை இலங்கையில் பயன்படுத்துவது தடை செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

களுபோவில போதனா வைத்தியசாலையில் கடந்த 30 ஆம் திகதி மருந்துக் குப்பி ஒன்றில் இருந்து ஒரு வகை கண்ணாடித் துண்டு மீட்கப்பட்டது.

இது குறித்து அழகுசாதனப் பொருள் மற்றும் தேசிய மருந்து கட்டுப்பாட்டு அதிகார சபை விசாரணை நடத்தியது.

க்ளோக்சசிலின் மருந்துக் குப்பியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது கண்ணாடித் துண்டு என விசாரணையில் உறுதி செய்யப்பட்டுள்ளதாக அதிகார சபையின் பணிப்பாளர் ஹேமந்த பெனரகம தெரிவித்தார்.

இதனால் க்ளோக்சசிலின் மருந்து இலங்கை சந்தைகளில் தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

# இளம் சமூகத்தினரின் செயற்பாடுகள் வழிகாட்டுவதாக இருக்க வேண்டும்



(யாழ்ப்பாணம்)

இளம் சமூகத்தினர் எதிர்கால வழிகாட்டிகளாக திகழ வேண்டுமென ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கந்தசாமி கமலேந்திரன் (கமல்) தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. கட்சியின் யாழ். அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்ற சுன்னாகம் - ஏழாலை மயிலங்காடு சிறிமுருகன் கலாமன்ற குழுவினருடனான சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய இளம் சமூகத்தினர் எதிர்கால வழிகாட்டிகளாக திகழ வேண்டும். கடந்த கால வன்செயல் காரணமாக எமது கலை, கலாசாரம், பண்பாட்டு விழுமியங்கள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இளைஞர்கள் தவறான பாதைக்கு இட்டுச் செல்லப்பட்டமையினால் எமக்குக் கிடைத்த வாய்ப்புக்கள் அனைத்தும் வீணாகவே போனது.

கடந்த கால அனுபவங்கள் எமக்கு ஓர் நல்ல சான்றாகும். வன்முறையினால் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படை வசதிகள், வாழ்வாதார திட்டங்கள், பொருளாதார வளர்ச்சி மீள்குடியேற்றம், கல்வி வளர்ச்சி, வேலைவாய்ப்புக்கள் மற்றும் துரித அபிவிருத்தித் திட்டங்களை ஈ.பி.டி.பி. கட்சியினராகிய நாம் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம்.

அந்த வகையில் உங்களது கிராம மேம்பாட்டுக்கும், அபிவிருத்திக்கும், வளர்ச்சிக்கும், கடந்த காலங்களில் விட்டதவறுகளை உணர்ந்து சரியான அரசியல் தலைமைத்துவத்துடன் மக்களுக்காக உழைப்பவர்களோடு ஓரணியில் திரள்வதாலேயே எமக்கான எதிர்காலத்தை பாதுகாக்க முடியுமென என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது மேற்படி கலைக் குழுவினரால் கலைத்துறை அபிவிருத்தி மேம்படுத்துவது தொடர்பிலும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது மேற்படி கோரிக்கை தொடர்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதிமொழி வழங்கினார்.

இதில் வலிதெற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் அரிகரன், வலிதெற்கு பிரதேச சபை உறுப்பினர் இராஜசேகரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## இடமாற்றம்

தென்மராட்சி பிரேதேச செயலக சிறுவர் மேம்பாட்டு அலுவலகத்தில் பணியாற்றிய திருமதி மாதங்கி மயூரன் வேலணைப் பிரதேச செயலகத்திற்கும், வலி.கிழக்கு பிரதேச செயலகத்தில் பணியாற்றிய திருமதி வரதீஸ்வரி சத்தியசீலன் தென்மராட்சி பிரதேச செயலகத் திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டு கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (11)

## பேருந்து சேவைகளின் கட்டணங்களில் வேறுபாடு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலிருந்து செம்மலைக்கு சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் அரச பேருந்துகளை விட அதிக பணம் அறவிடுவதாகக மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு செம்மலையூடாக சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகள் 50 ரூபா அறவிடுவதாகவும், அதே வழியாக சேவையில் ஈடுபடும் அரச பேருந்துகள் 34 ரூபா அறவிடுவதாகவும், தனியார் பேருந்துகளில் செல்வதாயின் 16 ரூபா தாம் கூடுதல் பணம் செலுத்தவேண்டியுள்ளதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதாவது ஒரு ரூபா, இரண்டு ரூபா வித்தியாசமாயின் நாம் தெரிவிக்காமல் இருக்கலாம். ஆனால் 16 ரூபா அதிகமாக உள்ளதாகவும், இது தொடர்பாக தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் கவனம் செலுத்த வேண்டும் எனவும் பயணிகள் கேட்டுக்கொள்கின்றனர். (04)

## திறப்பதற்கு அனுமதி

(குருநகர்)

தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்க நிலையங்களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் செல்லையா சிறீரங்கன் தெரிவித்துள்ளார்.

தைத்திருநாளான 14 ஆம் திகதி திங்கட்கிழமை நிலையங்களை மூடி பொங்கல் திருநாளைக் கொண்டாட ஊழியர்களை அனுமதித்து, உரிமையாளர்களும் ஓய்வெடுக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர். (68)

## ஆலயச் சூழலிலுள்ள மதுக்கடையை இடமாற்றக் கோரி மகஜர் கையளிப்பு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரில் பசுபதீஸ்வரர் ஆலய மேற்கு வீதியில் இயங்கி வரும் பருத்தித்துறை மதுபானசாலையை இடம்மாற்றி பாதிப்புக்குள்ளாகி வரும் மக்களுக்கு விமோசனம் வழங்குமாறு பருத்தித்துறை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் பருத்தித்துறை பிரதேச செயலரை மகஜர் மூலம் கேட்டுள்ளது.

அம்மகஜரில் கிராம அபிவிருத்திச் சங்கத்தால் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,


பருத்தித்துறையில் இயங்கிவரும் இம்மதுபானசாலை மக்களின் வாழ்வியல் நடவடிக்கைகளுக்கு சொல்லொணா இடையூறுகளை ஏற்படுத்தி வருகின்றது.

இம்மதுபானசாலையின் தற்போதைய செயற்பாடுகளால் ஆலயத்திற்கு வகைதரும் பக்தர்கள், பாடசாலை மாணவ, மாணவிகள் முக்கியமாகப் பெண்கள் உட்பட மக்கள் பல்வேறு இடைஞ்சல்களுக்குள்ளாகி வருகின்றனர்.

இம்மதுபானசாலை அமைவிட விதிகளுக்கு முரணாக ஆலயம், பள்ளிவாசல், பாடசாலை ஆகியவற்றிற்கு அண்மித்து நகரில் அமைந்துள்ளது.

இம்மதுபான விற்பனை நிலையத்தினைச் சூழவுள்ள பகுதிகள் சாராயம், பியர் போத்தல்களாலும், உடைந்த போத்தல் துகள்களினாலும் நிறைந்து காணப்படுவதனால் ஆபத்துடன் சுகாதாரச் சீர்கேடாகவும் இருக்கிறது. இவ் இடங்களில் இரவு, பகல் என்று பாராமல் மதுப்பிரியர்கள் இப்பிரதேசத்தைக் கழிப்பிடமாகவும், பயன்படுத்துகின்றனர். அவர்களின் மதுபோதை வார்த்தைப் பிரயோகங்களால் பாடசாலை மாணவர்கள், பெண்கள் உட்பட மக்கள் பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். மக்களின் அன்றாட நடமாட்டச் செயற்பாடுகள் முடங்குகின்றன. சமய கலாசாரங்களுக்குப் பெரும் பாதிப்புக்கள் ஏற்படுத்துகின்றன.

பருத்தித்துறையிலுள்ள இன்னும் பல பொது சேவை நிறுவனங்கள் இம்மதுபானசாலையினால் ஏற்பட்டுவரும் இடைஞ்சல்கள், அசௌகரியங்களை விளக்கி இம்மதுபானசசாலையை இடமாற்றவேண்டுமென பிரதேச செயலரைக் கேட்டுள்ளதாக அம்மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது. (01)



இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகத்தின் தண்ணீர் தாங்கி திறப்பு விழா அண்மையில் விளையாட்டுக்கழகத் தலைவர் ர.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றபோது கரவெட்டி பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் அ.சந்திரசேகரன் மற்றும் கரவெட்டி பிரதேச செயலர் சிவாஜி, ஈ.பி.டி.பியின் வடமராட்சி இணைப்பாளர் விசிந்தன் இணைந்து தாங்கியின் நாடாவெட்டித் திறந்து வைப்பதைக் காணலாம். (116)

## முரசின் இன்றைய பலன்

(07.01.2013 – திங்கட்கிழமை)

நந்தன வருஷம் மார்கழி மாதம் 23 ஆம் திகதி. நட்சத்திரம் சுவாதி அமிர்தம் முற்பகல் 08.06 வரை. திதி தசமி பிற்பகல் 1.13 வரை. இராகுகாலம் 8.02 - 9.32 வரை. சுபநேரம் 12.32 - 2.02 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | பெருமைமிக்க செயல்கள். குடும்பத்தினர் உதவி. தொழில் தொடர்பு பலம் பெறும். பணவரவு திருப்தி. பொது நலப்பணிகளில் ஆர்வம். |
| ரிஷபம் | எல்லோரிடமும் அன்பாக இருப்பீர்கள். முக்கிய செயல் ஒன்று நிறைவேறும். பணியில் நேர்த்தி. தொழில் மனநிறைவு தரும். இலாபம். |
| மிதுனம் | பணிகளில் இலக்கை எய்துவீர்கள். மகிழ்ச்சி கூடும். தொழில் வளர்ச்சியும், நற்பலனும். உபரி பண வருமானம். உண்டு மகிழ்வீர்கள். |
| கடகம் | தன்னம்பிக்கையும், உத்வேகமும். தொடங்கிய காரியம் முழுபலனைத் தரும். தொழில் முனனேற்றம். உபரி வருமானம். சொத்து சேர்க்கை. |
| சிம்மம் | கணவன்–மனைவி மனக்கசப்பு நீங்கும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். தெய்வ காரிய ஈடுபாடு. இலாப அதிகரிப்பு. புதிய முயற்சிகள் வெற்றி. |
| கன்னி | நீண்ட நாள் ஆசை நிறைவேறும். பிள்ளைகள் பற்றிய பெருமை. அந்தஸ்து உயரும். சூழ உள்ளவர்கள் பராட்டுவர். உபரி வருமானம். |
| துலாம் | நல்ல நினைவும் நன்மைகளும். தொழில் சிறந்து, அதிக பணவரவு. குடும்ப தேவைகள் நிறைவேறும். உறவினர் வருகையால் மகிழ்ச்சி. |
| விருச்சிகம் | பழைய உறவினர், நண்பர்கள் சந்திப்பு. உதவிகள் கிடைக்கும். பயணம் லாபம். உடல்நலம் சிறக்கும். சுறுசுறுப்பு. பிள்ளைகளால் பெருமை. |
| தனுசு | திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு. சகோதர வகையில் நன்மை. கல்யாணப் பேச்சு. வாகன திருத்தம். அதிக வரவு. புது முதலீடு. |
| மகரம் | விலகி சென்றவர்கள் வலிய வருவர். கேட்ட பணம் கிடைக்கும். வீடு, வாகன திருத்தம். திடீர் லாபம். உழைப்பிற்கு அங்கீகாரம். புதிய அனுகூலம். |
| கும்பம் | கடந்தகால நினைவு. பெற்றோரின் விருப்ப நிறைவேற்றம். விட்டுக் கொடுப்பீர்கள். சூழ்ச்சி முறியடிப்பீர்கள். அனுபவ அறிவு உதவும். |
| மீனம் | புத்திசாலித்தன செயலால் அனுகூலம். பாராட்டு வரும். தொழில் முன்னேற்றம். அதிக இலாபம். சேமிப்பும் அதிகரிக்கும். இல்லறத்துணை ஆலோசனை. |



# தொடரை முழுமையாக வென்றது ஆஸி.

(சிட்னி)

இலங்கை அணிக்கெதிரான டெஸ்ட் தொடரை அவுஸ்ரேலிய அணி முழுமையாகக் கைப்பற்றிக் கொண்டது. இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று சிட்னியில் நிறைவடைந்தது.

இரண்டாவது இனிங்ஸிற்காக ஏழு விக்கெட்டுக்களை இழந்து 225 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் நான்காம் நாள் ஆட்டத்தை இலங்கை அணி தொடர்ந்தது. இதில் சண்டிமலின் பொறுப்பான ஆட்டத்தால் இலங்கை அணி மேலும் 53 ஓட்டங்களைப் பெற்றது. இறுதியில் இலங்கை அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சண்டிமல் ஆட்டமிழக்காது 62 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கருணாரட்ண 85, மஹேல ஜெயவர்த்தன 60 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் போர்ட், ஜோன்சன் தலா மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு 141 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய அவுஸ்ரேலிய அணி ஆரம்பத்தில் விக்கெட்டுக்களை இழந்த நிலையிலும் ஓட்டங்களை சராசரியாகப் பெற்றுவந்தது. இறுதியில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. மைக்கல் ஹசி ஆட்டமிழக்காது 27 ஓட்டங்களைப் பெற்றார். மற்றும் கோவன் 36, ஹியூஸ் 34, கிளார்க் 29 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரங்கண ஹேரத் மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இவ்வெற்றியின் மூலம் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரை 3-0 என்ற என்ற கணக்கில் அவுஸ்ரேலிய அணி முழுமையாக வென்றுள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக ஜோக்சன் போர்ட், தொடர் நாயகனாக மைக்கல் கிளார் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இலங்கை அணி முதல் இனிங்ஸ் 294. அவுஸ்ரேலியா முதல் இனிங்ஸ் 432.

இதேவேளை, இப்போட்டியுடன் சர்வதேச டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து மைக்கல் ஹசி ஓய்வு பெற்றார். அணி வீரர்களை அவரைத் தூக்கி மைதானத்தைச் சுற்றி வலம் வந்தமை குறிப்பிடத்தக்கது.

# வீரராக என்னைப் பாருங்கள் உருகுகிறார் மியான்டட்

என்னை ஒரு கிரிக்கெட் வீரராக பார்க்க வேண்டும். விளையாட்டு வீரராக நினைக்க வேண்டும். சிலரது உறவினர் என்றால் என்ன அர்த்தம். நான் விசா பெற்றதில் என்ன பிரச்சினை இருக்கிறது என பாகிஸ்தான் முன்னாள் கப்டன் மியான்டட் தெரிவித்தார். பாகிஸ்தான் தொடரை வென்றதால் நான் பிசியாக இருக்கிறேன். அவரது (தாவூத் இப்ராகிம்) குடும்பத்தினர் அனைவரும் இந்தியாவில் உள்ளனர். சகோதரர்கள், சகோதரிகள் இந்தியாவில்தான் உள்ளனர். அப்படி இருக்கும் போது என்னை மட்டும் குறி வைப்பது ஏன் என்று தெரியவில்லை. ஏனென்றால் நான் புகழ் பெற்றவனாக இருக்கலாம். நான் கிரிக்கெட் வீரராக இருந்தேன். தற்போது பாகிஸ்தான் கிரிக்கெட் சபையில் பணி புரிகிறேன். இந்தியா-பாகிஸ்தன் இடையே நல்ல உறவு இருக்கவேண்டும் என்று விரும்புகிறேன். இரு நாடுகள் இடையே கிரிக்கெட் உறவு தொடரவும் விரும்புகிறேன் எனவும் அவர் தெரிவித்தார்.

மியான்டட் மும்பை குண்டு வெடிப்பு வழக்கில் தொடர்புடைய தாவூத் இப்ராகிமின் உறவினர் ஆவார். மியான்டட்டின் மகன் தாவூத் இப்ராகிமின் மகளை திருமணம் செய்து இருக்கிறார். இந்த எதிர்ப்பு காரணமாக அவர் இந்தியா வருவதை இரத்து செய்தார். சர்ச்சையை தவிர்க்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை தலைவரின் வேண்டுகோளை ஏற்று அவர் இந்தியா வருவதை தவிர்த்தமை குறிப்பிடத்தக்கது.

# தொடர் தோல்வி கபில் விளக்கம்

(புதுடில்லி)

சிறந்த பந்துவீச்சாளர்கள் உருவாகாததே இந்திய அணியின் தோல்விக்கு காரணம் என கபில்தேவ் தெரிவித்துள்ளார்.

இந்திய அணியில் தற்போது உலகத் தரம் வாய்ந்த பந்து வீச்சாளர்கள் என்று சொல்லிக் கொள்ளும் அளவிற்கு எவரும் இல்லை. கும்ளே, ஹர்பஜன், சகீர் கான் ஆகியோருக்குப் பின்னர் வந்த அனைத்து பந்து வீச்சாளர்களும் சிறிது காலம் தாக்குபிடிக்கக் கூடியவர்களாகவே இருந்துள்ளனர். சிறந்த பந்து வீச்சாளர்கள் உருவாக்கப்படும் பட்சத்திலேயே இந்தியாவின் தோல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படும். இல்லையே இது போன்ற தோல்விகள் தொடர் கதையாகவே இருக்கும்.

பாகிஸ்தான் அணியைப் பொறுத்தவரை காலத்திற்குக் காலம் சிறந்த பந்து வீச்சாளர்கள் வெளிக்கொணரப்படுகின்றனர். இவ்வணியின் வெற்றிக்கு அடிப்படையாக பந்து வீச்சே முக்கிய காரணமாக திகழ்கின்றது என்றார்.

# இரசிகர்கள் இனவெறிக் கூச்சல் வெளியேறியது ஏ.சி.மிலன் அணி





(ரோம்)

இரசிகர்கள் இனவெறியை தூண்டும் வகையில் கூச்சலிட்டதால், நட்பு கால்பந்து போட்டியில் இருந்து பாதியில் வெளியேறியது இத்தாலியின் ஏ.சி.மிலன் அணி.

ஏ.சி.மிலன் மற்றும் புரோ பாட்ரியா அணிகள் மோதிய நட்பு கால்பந்து போட்டி இத்தாலியில் நடந்தது. இதில் ஆபிரிக்காவின் கானாவைச் சேர்ந்த போயட்டங் (வயது-25), மிலன் அணிக்காக விளையாடினார். போட்டியின் 26ஆவது நிமிடத்தில் மைதானத்தில் ஒரு பகுதியில் இருந்த இரசிகர்கள்,போயட்டங்கை நோக்கி இனவெறி சர்ச்சையை கிளப்பும் வகையில் கோஷம் எழுப்பினர்.

இதனால், போயட்டங் உள்ளிட்ட ஏ.சி. மிலன் அணி வீரர்கள் உடனடியாக, தங்களது டி சர்ட்டை கழற்றி விட்டு, மைதானத்தை விட்டு வெளியேறினர். பெரும்பாலான இரசிகர்கள் இந்த அணிக்கு ஆதரவு தந்த போதும் போட்டியில் தொடர்ந்து விளையாட மறுத்தனர்.

இதுகுறித்து போயட்டங் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பும், இனவெறியை கிளப்பும் செயல் நடப்பது அவமானகரமானது, என தெரிவித்துள்ளார்.

ஏ.சி.மிலன் பயிற்சியாளர் அலெகிரி கூறுகையில், இதுபோன்ற நிகழ்வுகள் நடப்பது ஏமாற்றமானது. போட்டியில் தொடர்ந்து விளையாட முடியாமல் போனதுக்காக, இரசிர்கர்கள் மற்றும் பாட்ரியா அணி வீரர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறோம். எங்களுக்கு இதைத்தவிர வேறு வழியில்லை. இது போன்ற நிகழ்வுகள் இனி வரும் காலத்திலும் நடக்காதவாறு போட்டி அமைப்பாளர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.

கால்பந்து உலகில் இது போன்ற நாட்கள் கறுப்பு நாட்களே. இதற்கு சர்வதேச கால்பந்து சம்மேளனம் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.



# வென்றது ரியல் பெட்டிஸ்

(ஆரகான் ஜாரகோசா)

ரியல் ஜாரகோசா அணிக்கு எதிரான ஸ்பானிஸ் லா லீகா கால்பந்து போட்டியில், ரியல் பெட்டிஸ் அணி வெற்றி பெற்றது.

ஸ்பெயினில் நடக்கும் இத்தொடரின் லீக் போட்டியில் ரியல் பெட்டிஸ், ரியல் ஜாரகோசா அணிகள் மோதின. இதன் முதல் சுற்றின் 44ஆவது நிமிடத்தில் ரியல் பெட்டிஸ் அணியின் கேஸ்ட்ரோ ஒரு கோல் அடித்தார். 58ஆவது நிமிடத்தில் இதே அணியின் ஜார்ஜ் ஒரு கோல் அடிக்க, ரியல் பெட்டிஸ் அணி முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில்(78ஆவது நிமிடம்) ரியல் ஜாரகோசா அணியின் பிரான்சிஸ்கோ ஒரு கோல் அடித்தார். முடிவில், ரியல் பெட்டிஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

# பிரிஸ்பேன் ரென்னிஸ் தொடர் முர்ரே, செரீனா, சானியா ஜோடி சம்பியன்



(பிரிஸ்பேன்)

பிரிஸ்பேன் சர்வதேச ரென்னிஸ் போட்டித் தொடரில் ஆன்டி முர்ரே, செரீனா வில்லியம்ஸ் மற்றும் சானியா ஜோடி சம்பியன் கிண்ணம் வென்றுள்ளது.

அவுஸ்ரேலியாவில் இடம்பெற்ற பிரிஸ்பேன் ரென்னிஸ் தொடரின் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

பெண்கள் ஒற்றைய இறுதிப் போட்டியில் ரஷ்யாவின் அனஸ்டேசியா பாவ்லியுசென்கோவாவுடன் அமெரிக்காவின் செரீனா வில்லயம்ஸ் மோதியனார்.

இதில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய செரீனா 6-2, 6-1 என்ற நேர் செட்களில் மிக எளிதாக வென்று கோப்பையை தட்டிச் சென்றார்.

ஆண்கள் ஒற்றையர் இறுதிப் போட்டியில் இங்கிலாந்தின் ஆண்டி முர்ரே பல்கேரியாவின் டிமிட்ரோவை எதிர்கொண்டார். இதில் முர்ரே 7-0, 6-4 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தை வென்றார்.

இதேவேளை, மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சானியா மிர்சா - பெதானி மேட்டக் (அமெரிக்கா) ஜோடி 4-6, 6-4, 10-7 என்ற செட் கணக்கில் பெஷ்கே - குரோயன்பெல்ட் ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது.





## பிரதேச விளையாட்டு
### வேலணையில் கலந்துரையாடல்

(வேலணை)

வேலணை பிரதேச வருடாந்த விளையாட்டு விழா தொடர்பான முக்கிய கலந்துரையாடல் நாளை காலை 10.00 மணிக்கு வேலணை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அமைப்பாளர்கள் அறிவித்துள்ளனர்.

இக்கலந்துரையாடலில் பிரதேசத்திலுள்ள பதிவு செய்யப்பட்ட கழகங்களைச் சேர்ந்த தலைவர், செயலாளர்களை கலந்து கொள்ளுமாறும், கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வருடாந்த விளையாட்டு விழாவை சிறப்பாக நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கான மேலதிக ஆலோசனைகள் கழக தலைவர், செயலாளர்களிடமிருந்து எதிர்பார்ப்பதாகவும் போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் போட்டியாளர்களுக்கான அதிக சந்தர்ப்பங்கள் வழங்கப்படவேண்டும் எனவும், புதிய வீர,வீராங்கனைகளை இனங்காணல் தொடர்பாகவும் இதில் கலந்துரையாடப்படும் எனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

எனவே, விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தலைவர், செயலாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (93)

## யூனியன் கல்லூரியை வென்றது மானிப்பாய் இந்து




(மானிப்பாய்)

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கெதிரான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரி அணிக்குமிடையிலான இரண்டு நாள் பயிற்சி போட்டி கடந்த 4,5ஆம் திகதிகளில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இனிங்ஸிற்காக ஆடிய யூனியன் கல்லூரி அணி நிர்சன், சபேசன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறி கொடுத்தது. இருப்பினும் ஒரு முனையில் கீர்த்தனன், ஆகிசன் ஆகியோர் அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் ஆடினர். இறுதியில் யூனியன் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 132 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கீர்த்தனன் 26, ஆகிசன் 21, மகிழ்ராஜ் 15, நிரோஜன் 16, சஞ்சிவன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நிர்சன், சபேசன் தலா மூன்று, பிரதீபன், சேந்தன் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக ஆடிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி சஜீவன், நிக்சன், நிதர்சன் ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 214 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சஜீவன் 63, நிக்சன் 33, நிதர்சன் 30, கிருசாந்த் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சிறப்பான முறையில் செயற்பட்ட சிந்தாகரன் ஏழு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். மற்றும் ஜெருசன், அன்ராஜ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

82 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக ஆடிய தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி, சேந்தன், பிரதீபன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது திணறியது. இருப்பினும் கீர்த்தனன், மகிழ்ராஜ் ஆகியோர் பொறுமையாக ஆடியதுடன்அணியை கௌரவமான ஓட்ட எண்ணிக்கையைப் பெற வழிவகுத்தனர். இறுதியில் யூனியன் கல்லூரி அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கீர்த்தனன் 36, மகிழ்ராஜ் 29, நிரோஜன் 23, சஞ்சிவன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பிரதீபன், சேந்தன் தலா மூன்று, நிர்சன் இரண்டு டில்சான் ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 51 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி மூன்று விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் டில்சான் 29, நிதர்சன் 14 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ரகுபதி, சிந்தாகரன், ஜெரூசன் தலா ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். இதன் மூலம் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இப்போட்டிக்கு நடுவர்களாக இலங்கை கிரிக்கெட் சபையின் கார்த்திகேயன், செல்வராசா ஆகியோர் கடமையாற்றினர். (17)

### உடற்கல்வி ஆசிரியர்களுக்கான
## முக்கிய சந்திப்பு

(வடமராட்சி)

வடமராட்சி கல்வி வலய உடற்கல்வி ஆசிரியர்களுக்கான முக்கிய சந்திப்பு நாளை காலை 9.00 மணிக்கு வலயக் கல்விப் பணிமனையில் நடைபெறவுள்ளது.

இதில் இந்தாண்டுக்கான குழு நிலைப் போட்டிகள், மெய்வல்லுநர் போட்டிகள் குறித்து ஆராயப்படவுள்ளதாகவும்,இந்த ஆண்டு வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கைப்பந்து போட்டி தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்படவுள்ளதாகவும் வடமராட்சி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

எனவே, இச்சந்திப்பில் வலயத்திலுள்ள உடற்கல்வி ஆசிரியர்களைத் தவறாது, உரிய நேரத்திற்கு வருகை தருமாறு கேட்டுள்ளார். (93)

## இறுதிப் போட்டி

(மட்டுவில்)

மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ளதாக போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மாவட்ட மற்றும் பிரதேச ரீதியாக இப்போட்டித் தொடர் நடத்தப்பட்டது. இதில் மாவட்ட மட்ட இறுதிப் போட்டிக்கு புத்தூர் கலைமதி அணியும், நீர்வேலி ஐக்கியம் அணியும், பிரதேச மட்ட இறுதிப் போட்டிக்கு மட்டுவில் ஐங்கரன் அணியும், மட்டுவில் வளர்மதி அணியும் தகுதிபெற்றுள்ளன.

இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 9ஆம் திகதி மாலை 6.30 மணிக்கு மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (93, 118)

## அடித்தாடாததால் தோல்வி

(கொல்கத்தா)

இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களை அடித்தாட முயலவில்லை. இதனாலேயே இந்திய அணி தோல்வியைத் தழுவ நேரிட்டது என இந்திய அணி யின் முன்னாள் தலைவரும், நேர்முக வர்ணனையாளருமான கங்குலி தெரிவித்துள்ளார்.

கொல்கத்தாவில்இடம்பெற்ற போட்டி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அப்போட்டியில் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் மிகச்சிறப்பாகப் பந்துவீசியதாகவும், ஆனால் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள் அடித்தாட முற்படாமை தனக்கு ஆச்சரியம் தந்ததாகவும் கங்குலி தெரிவித்தார்.

அவர்கள் இதை விடச் சிறப்பான எண்ணத்துடன் துடுப்பெடுத்தாடியிருக்க வேண்டுமெனத் தெரிவித்த கங்குலி, மாறாக அவர்கள் 250 குறைவான ஓட்டம், ஆகவே 50 ஓவர்கள் முழுவதும் துடுப்பெடுத்தாடி வென்றுவிடலாம் என எண்ணத்தில் களமிறங்கியதாகத் தெரிவித்தார்.

பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் கொல்கத்தா போட்டியில் மிகச்சிறப்பாகப் பந்துவீசியதாகத் தெரிவித்த கங்குலி, அவர்கள் இத்தொடரில் சிறப்பானபெறுபேறுகளையே வெளிப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

துடுப்பாட்ட வீரர்கள் ஒவ்வொரு பந்தினையும் கணித்து அதற்கேற்றவாறு ஆடியிருக்க வேண்டும் என கங்குலி தெரிவித்தார்.

இந்திய அணித்தலைவர் டோனி மீதும் விமர்சனங்களை முன்வைத்த கங்குலி, இந்திய அணியில் சிறந்த போர்மில் காணப்படுபவர் என்பதாலும், அணித்தலைவர் என்பதாலும் டோணி முன்வரிசையில் ஆட வேண்டுமெனவும், 7ஆம் இலக்கத்தில் தொடர்ந்தும் துடுப்பெடுத்தாடுவது தனக்குக் குழப்பத்தைத் தருவதாகவும் கங்குலி தெரிவித்துள்ளார்.

## இரண்டாவது சுற்றில்
## பற்றீசியன், புலுஸ், கோப்பாய் ஐக்கியம்



(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் மாவட்ட மட்ட கூடைப்பந்தாட்டத் தொடரின் இரண்டாவது சுற்று ஆட்டத்திற்கு சென்றலைட்ஸ் புலுஸ், யாழ். பற்றீசியன், கோப்பாய் ஐக்கியம் ஆகிய அணிகள் தகுதிபெற்றுள்ளன.

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினால் நடத்தப்படும் இப்போட்டித் தொடர் யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்று வருகின்றது.

யாழ். மாவட்டத்திலுள்ள முன்னணி அணிகள் பல பங்குகொள்ளும் இப்போட்டித் தொடர் விலகல் முறையில் இடம்பெற்று வருகின்றது.

இப்போட்டித் தொடரில் முதல் ஆட்டங்கள் கடந்த ஐந்தாம் திகதி நடைபெற்றது. இதில் முதலாவது போட்டியில் சென்றலைட்ஸ் சொக்ஸ் மற்றும் சென்றலைட்ஸ் புலுஸ் அணிகளுக்கிடையில் இடம்பெற்றது. இதில் சென்றலைட்ஸ் புலுஸ் அணி 48-43 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கொக்குவில் கே.சி.சி.சி. அணியும், யாழ். பற்றீசியன்ஸ் அணியும் மோதின. இதில் பற்றீசியன்ஸ் அணி 63-53 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெறறது.

இதேவேளை, நேற்று முன்தினம் நடைபெற்றபோட்டியில் கோப்பாய் ஐக்கியம் 'பி' அணியும், ஒல்ட்கோட் அணியும் மோதவிருந்தன. ஒல்ட்கோட் அணி சமுகம் அளிக்காதமையால் கோப்பாய் ஐக்கிய அணிக்கு வெற்றிவழங்கப்பட்டது.

இப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் தினம் மாலை 6.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (93)

# மோடியின் வெற்றி : அறுவடையாகும் வெறுப்பின் பலன்கள்

**- அ. மார்க்ஸ் கட்டுரையிலிருந்து.**

குஜராத் சட்டமன்றத் தேர்தலில் மோடி வெற்றி பெற்றது மட்டுமல்ல. இமாசலப் பிரதேசத்தில் பா.ஜ.க தோற்றதும்கூட நூறு சதம் எதிர்பார்த்த ஒன்றே. அதனால்தான் பெரிய புழுதி எதையும் இவை கிளப்பவில்லை.

இன்னொன்றையும் கவனிக்க வேண்டும் குஜராத்தின் வெற்றி பா.ஜ.கவின் வெற்றி அல்ல.

எப்படியோ கடந்த 60 ஆண்டுகால இந்திய "ஜனநாயக" வரலாற்றில் தொடர்ந்து மும்முறை முதலமைச்சரான ஜோதி பாசு உட்பட்ட மூன்று நான்கு பேர்களில் மோடி ஒருவராகியுள்ளார்.

மோடி இதை எப்படிச் சாதித்தார்?

"வளர்ச்சியில் முன் நிற்கும் மாநிலம்" என்கிற மோடி மஸ்தான் பிரச்சாரத்தாலா?

சவுராஷ்டிரப் பகுதியில் கடும் தண்ணீர்ப் பஞ்சம். வரட்சி என அறிவிக்க மோடி முன்வைக்கும் "குஜராத்தின் கவுரவம்" (குஜராத் அஸ்மிதா)

மாநிலங்களில் கிராமப்புற ஆண்களின் ஊதியத்தில் குஜராத் 14 ஆவது நிலையிலும், பெண்களின் ஊதியத்தில் 9ஆவது நிலையிலும் உள்ளது. பெரும்பாலான கிராமப்புற ஏழைகள் சத்துணவை வாங்க வக்கற்றவர்களாக இருப்பதே எதார்த்தம்.

எனினும் மோடியால் 48 சத வாக்குகளைக் குவிக்க முடிந்துள்ளது. இந்த வெற்றியின் பின்னணி குஜராத்தில் 58 சதம்



வந்த எழுபதாயிரம் மோடி முகமூடிகள் சற்றே மோடியின் முகத்தைக் கிழத்தனமாகக் காட்டியதால், அவை தூக்கி எறியப்பட்டு அடுத்த வாரம்

சென்றது அவரது தேர்தல் பிரச்சாரம்.

2007 தேர்தலில் மோடி உச்சபட்சமாக 127 தொகுதிகளை வென்றார். 2012இல் 117. இப்போது அவரது ஆதரவாளர்கள் மீண்டும் 117 என்கிற எல்லையைத் தாண்டி அதன்மூலம் பா.ஜ.கவின் அடுத்த பிரதம வேட்பாளருக்கான தகுதியைப் பெறுவார் எனக் கடும் பிரச்சாரம் செய்தனர். ஆனால் இத்தனைக்குப் பின்னும் இம்முறை பெற மோடியால் முடிந்தது 115 இடங்கள்தான். காங்கிரசை விட இருமடங்கு இது அதிகமென்றபோதிலும் அவரது ஆதரவாளர்கள் சற்றே மூக்குடைந்தனர். அத்வானியும், சுஷ்மாவும், ஜேட்லியும் நமுட்டுச் சிரிப்புச் சிரிக்கின்றனர்.

இது மோடியின் வெற்றி. பா.ஜ.கவின் வெற்றியல்ல. இது வருகிற 2014 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னோடியுமல்ல.

வரலாறு காணாத 2012 வன்முறைகளின் மூலம் இந்து - முஸ்லிம் என எதிர் எதிராக மக்கள் குவிக்கப்பட்டுள்ளதன் பலனைத் தொடர்ந்து மோடி அறுவடை செய்து வருகிறார். வன்முறையின் பலன்கள் இப்படி வன்முறையாளர்களுக்கே செல்வது பெரும்பான்மையினரின் ஆட்சி என்கிற ஜனநாயகக் கருத்தியல் எதிர்கொள்ளும் ஒரு தத்துவ நெருக்கடி.

அது மோடியின் வெற்றி மட்டுமே. பா.ஜ.கவின் மூத்த தலைவர்கள் அத்வானி, சுஷ்மா, அருண் ஜேட்லி யாரும் மோடியின் வெற்றியைப் பாராட்டவில்லை. பா.ஜ.கவின் வெற்றிக்கு வழக்கமாகப் பின்புலமாக உள்ள ஆர்.எஸ்.எஸ் இம்முறை கேசுபாய் படேலின் குஜராத் பரிவர்த்தன் கட்சியை ஆதரித்தது. ஆர்.எஸ்.எஸின் மூத்த தலைவர் ஒருவர் மோடியை "ஹிட்லர்" என வருணித்தார்.

அனுமதிக்காத போதும், இன்று அரசுச் செலவினங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தங்கள் ஒருபுறம். வால் ஸ்ட்ரீட் ஜேர்னல் சிலமாதங்களுக்கு முன் குஜராத்திப் பெண்கள் சத்துணவின்மையால் நொய்ந்து கிடப்பதைச் சுட்டிக் காட்டியது. "இல்லை, அவர்கள் அழகுணர்ச்சியின் காரணமாகத் தம் உடலை மெலிவாக வைத்துள்ளனர்" என்கிற மோடியின் பதிலை யாரும் ரசிக்கவில்லை. இந்தியாவின் 20 பெரிய

நகர்மயமாகியுள்ளதிலும், மக்கள் தொகையில் 89 சதமாக உள்ள "இந்துக்களின் இதய சாம்ராட்" ஆகத் தன்னைக் கட்டமைத்துக் கொண்டதிலும் அடங்கியுள்ளது..

இந்தக் கட்டமைப்புக்கு குஜராத் முஸ்லிம்கள் கொடுத்த விலை அதிகம்.

தனது பிம்பத்தைக் கட்டமைக்க மோடி எல்லாவிதமான விளம்பரத் தந்திரங்களையும் மேற்கொள்வது ஊரறிந்த கதை. ஆதரவாளர்கள் மத்தியில் விநியோகிக்க முதற்கட்டமாக

மூன்று இலட்சம் முகமூடிகள் தருவிக்கப்பட்டன. தேர்தலை ஒட்டி ஏராளமான இலவச மேளாக்கள், இந்தியாவிலேயே முதன்முதலாக ஹோலோகிராம் தொழில்நுட்பத்தில் 3டி பிம்பத்தில் ஒரே நேரத்தில் மோடி குஜராத் எங்கும் தோன்றுவது, கூடியுள்ள மக்கள் மத்தியில் குஜராத் அஸ்மிதாவை உசுப்பியும், மன்மோகன் மற்றும் சோனியாவைக் கிண்டலடித்தும், பாகிஸ்தானைப் பூதாகரமான எதிரியாக நிறுத்தியும் மோடிக்கும் ஆவேசங்கள் இப்படிச்

---

# ஈழப்போராட்டம், பெற்றதும் இழந்ததும்

**- ஸ்ரனிஸ் -**

ஈழப் போராட்டமானது இலங்கையில் ஆட்சி செய்த அரசுகளின் இனவிரோத போக்கால் ஏற்பட்டு அதற்காக போராடிய இயக்கங்கள் இடையே ஏற்பட்ட முரண்பாடுகளால், குறிப்பாக புலிகளின் சகோதரப் படுகொலைகள் காரணமாக அழியத் தொடங்கி, இறுதியில் புலிகளின் பாசிச கொள்கை காரணமாக முற்று முழுதாக அழிந்து விட்டது. இந்தப் போராட்டமானது ஆரம்பத்தில் சாத்வீக போராட்டமாக தமிழரசுக் கட்சியே தொடங்கியது. தமிழரசுக் கட்சியை அந்த நாட்களில் பலர் இதற்காக ஆதரித்தனர். தமிழரசுக் கட்சி இளைஞர்களை வழிநடத்தி தமிழ் ஈழத்தைப் பெற்றுக் கொடுத்து விடுவார்கள் என பலர் எண்ணி இருந்தனர். அதற்காக அது தமிழர் விடுதலைக் கூட்டணியாக உருமாற்றம் பெற்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணி இதனை செய்வதற்கு அருகதையற்ற கட்சி என பின்னர்







அதனை இனங்கண்டு தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட புறப்பட்டனர்.

தமிழ் இளைஞர்கள் பல பெயர்களை கொண்ட இயக்கங்களாக போராடினர். ஆயுதப் போராட்டம் மும்முரமாக நடைபெற்ற வேளையில் இயக்கங்களிடையே ஒற்றுமை இருந்தால், தமிழ் ஈழம் இலகுவாக கிடைத்துவிடும் என பலர் சொல்லத் தொடங்கினர். அந்த ஒற்றுமை நடந்தும் நடக்காது போல் அமைந்தது.

இயக்கங்களிடையே ஒற்றுமை இல்லை இவர்கள் உருப்பட மாட்டார்கள் என பலர் கூறினர். அதன்படியே எல்லாம் நடந்தது.

இறுதியாக எல்லா இயக்க தலைவர்களையும் அழிக்க காரணமாக இருந்த புலிகள் இயக்கமும்,

அதன் தலைமையும் அழிந்து போனது.

புலிகள் இயக்கம் ஆயுத ரீதியாக பலமாக இருந்த போது அதற்கு அரசியல் ரீதியாக ஒரு பலம் தேவை என, தமிழ் கட்சிகளை ஒற்றுமைப் படுத்தி உருவாக்கியதே தற்போதைய தமிழ் தேசிய கூட்டமைப்பு. இன்று சாட்சி சொல்ல பிரபாகரனும் இல்லை தமிழ்ச்செல்வனும் இல்லை, தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் அவர்கள்தான் இதனை உருவாக்கினார்கள் என்று சொல்லிக் கொள்ள

விரும்புவதில்லை.

இந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பில் உள்ள கட்சிகள் அனைத்தும் ஒரு வகையில் புலிகளால் மிகவும் பாதிக்கப்பட்ட கட்சிகள். அப்படி இருக்கையில் இந்த உடன்படிக்கை எப்படி ஏற்பட்டது. எதிரும் புதிருமானவர்கள் இதற்கு எப்படி ஒப்புக் கொண்டார்கள்? அரசியலில் இதெல்லாம் சகஜம் என்று கவுண்டமணி பாணியில் நாம் எடுத்துக் கொள்ள வேண்டியதுதான்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் புலிகளால் கொல்லப்பட்டவர். ரெலோ தலைவர் சிறிசபாரத்தினம் புலிகளால் கொல்லப்பட்டவர். ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா புலிகளால் கொல்லப்பட்டவர்.

இப்படியெல்லாம் இருந்தும் இது எப்படி சாத்தியமானது?

அது மட்டுமல்ல நாம் ஆரம்பத்தில் சொன்ன தமிழரசுக் கட்சி பிழையாக இளைஞர்களை வழி நடத்துகிறது என்று தூக்கி எறிந்த அந்தக்கட்சியை மீண்டும் இன்று தலைமைத்துவ கட்சியாக ஏற்றுக் கொண்டுள்ளோம். இது எப்படி?

ஆக, இந்த ஈழப் போராட்டமானது மக்களுக்கும், அதற்காக மடிந்த, காணாமல் போன பல நாடுகளில், இலங்கையில் குறிப்பாக மலையகம், வடக்கு-கிழக்கு ஆகிய பகுதிகளில் வாழும் இதனால் பாதிக்கப்பட்ட பலருக்கு அடுத்த நாள் என்ன செய்யப்போகிறோம், என்ற கேவலமான வாழ்கையையே கொடுத்துள்ளது என்பது வேதனையை கொடுக்கிறது.

மலைய இளைஞர்களை இன்று யாரும் கணக்கில் எடுப்பதாக தெரியவில்லை. அப்பகுதி இளைஞர்கள் பலர் இதற்காக மடிந்துள்ளதுடன், இன்னும் தமிழக முகாம்களில் அவர்கள் வாழந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் நினைவில் கூட கொள்வதில்லை..

இந்த ஈழப் போராட்டமும், அதன் தொடர்ச்சியும் இன்னும் பலருக்கு சௌகரியத்தை கொடுக்கிறது... அவர்கள் அரசியல் செய்து மேலும் மேலும் சௌகரியத்தை வளர்க்க இது வழி வகுத்து நிற்கிறது.



# நுண்ணுயிர் ஆபத்து!

மனிதர்கள் உலகெங்கும் அனேகமாக ஒரே மாதிரிதான் இருக்கிறார்கள். குறைந்த நேரம்தான் அவர்களால் எதையும் கவனிக்க முடிகிறது. பிறகு மறுபடி அன்றாட சுகங்கள், அவசர நுகர்வு, தற்சமய உளைச்சல்கள் என்று அவர்கள் கவனம் சிதறி விடுகிறது.

இதற்கு ஒரு காரணம் நாம் மண்ணோடு இணைந்த வாழ்விலிருந்து விடுபட்டு பெரு நகரங்களில் இயற்கையை அனேகமாக ஒழித்துக் கட்டிய ஒரு வாழ்வில் அடைந்து விட்டோம். இப்போது நமக்கு இயற்கை ஒரு உபாதை என்றுதான் தெரிகிறது. அல்லது ஒரு நுகர் பொருள். வார இறுதியில் மட்டும் நமக்கு பூங்காக்களும், வனங்களும், பறவைகளும் கேளிக்கைக்கு உபயோகப்பட்டு விட்டு, வார நாட்களில் கண்ணுக்குத் தெரியாது போய்விடுகின்றன. ஆனால் நம் கண்ணுக்குத் தெரியாத இன்னொரு பேரியக்கம் அனாதிகாலத்திலிருந்து நம்மோடும், நம்மைச் சுற்றியும் நடந்து கொண்டு வருகிறது.

பூசணம் எனப்படும் ஃபங்கஸ் (fungus) உயிரினங்களின் தோற்றுவாய்க் காலத்திலிருந்து உள்ளவை. ஒரு புறம் மிருகங்களாகப் பிரிந்து எழுந்த உயிரினங்கள், இன்னொரு புறம் பூசணங்களாகவும் அவை தொட்டு எழுந்த தாவரங்களாகவும் இன்னொரு வகை உயிரினங்கள்.

பூசணங்கள் சில நேரம் மனிதர்களுக்கும், மிருகங்களுக்கும் உதவுகின்றன. பென்ஸிலின் என்கிற ஒரு மருந்து ஒரு பூசணத்திலிருந்து உருவான மருந்துதான். ஆனால் பெருநேரமும் அவை உயிரினங்களை அழிக்கவும், இறந்த உயிர்களை மறுபடி இயற்கையின் சுழற்சியில் சேர்க்க உதவும் உத்திகளாகவும் இருக்கின்றன.

இன்று உலகெங்கும் இயற்கையின் சுழற்சியும், தட்ப வெப்ப நிலைகளும், மேலதிகமான உயிரினத் தேவைகளுமாக பூமி ஒரு பெரும் நெருக்கடியில் சிக்கி இருக்கிறது. இதனால் காலம் காலமாக வாழ்ந்து வந்த தாவரங்கள், பல வகை பூச்சிகள், சிறு மிருகங்கள், நீர்வாழ் உயிரினங்கள் போன்ற பலவும் தம் இயற்கைச் சூழலை இழந்து திணறிக் கொண்டிருக்கின்றன. இவற்றை இந்தப் பூசணங்கள் எளிதே தாக்கி பெரும் எண்ணிக்கையில் அழித்துக் கொண்டிருக்கின்றன என்கிறது இன்றைய ஆய்வு.

அப்படியாவது நாம் இயற்கையோடு இசைந்த வாழ்க்கையை நாடுவோமா என்றால் அது குறித்து ஐயம்தான் கொள்ள வேண்டி இருக்கிறது.

## நூற்றுக்கு தொண்ணூற்றி ஐந்து வீத காரணம்!

"நான் புலம்பெயர் தமிழர் மத்தியில் வாழ்ந்தவன். 5 வருடங்கள் நோர்வே, லண்டனில் வாழ்ந்து இருக்கிறேன். போராட்டத்தில் வந்த அழிவுகளுக்கும் வெற்றிகளுக்கும் தோல்விகளுக்கும் இன்று இருக்கும் நிலைமைகளுக்கும் புலம்பெயர் தமிழர்தான் நூற்றுக்கு தொண்ணூற்றி ஐந்து வீதம் பதில் சொல்ல வேண்டிய உண்மை உள்ளது. அதை அசோக ஹந்தகம பயமில்லாமல் கேட்க விளைகிறார். அதை நான் ஆமோதிக்கிறேன்" என்கிறார் இனி அவன் படத்தில் நடித்திருக்கும் கிங் தேவசாந்தன்.

இலங்கையில் பல வெற்றிப்படங்களைத் தந்த புகழ்பெற்ற சிங்கள மொழி இயக்குநரான அசோக ஹந்தகமவின் இயக்கத்தில் வெளியாகி பல்வேறு பாராட்டுதல்களை தன்வசப்படுத்திக் கொண்டிருக்கிறது "இனி அவன்".

செத்துப்போன எமது இலங்கை தமிழ் திரைத்துறைக்கு "இனி அவன்" உயிரோட்டத்தை கொடுத்துள்ளது என்றால் அது மிகையல்ல. புனர்வாழ்வு பெற்ற போராளி ஒருவன் - சமூகத்தில் எதிர்நோக்கும் சவால்களை இனி அவனில் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளார் அசோக ஹந்தகம.

இத்திரைப்படத்தின் கதாநாயகனாக தர்சன் தர்மராஜ், கதாநாயகிகளாக சுபாசினி பாலசுப்பிரமணியம், நிறஞ்சனி சண்முகராஜா மற்றும் ராஜா கணேசன், கிங் ரட்ணம் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

இத்திரைப்படத்தில் பணியாற்றிய உதவி இயக்குநர் வதீஸ் வருணன்



**Him, Here After**

**இனி அவன்...**

A Film By Asoka Handagama

தெரிவிக்கையில், "கனடா ரொரன்டோ திரைப்பட விழாவில் பல கனேடியர்கள் இத்திரைப்படத்திற்கு விமர்சனம் தெரிவித்துள்ளனர். அதேபோல் பலர் ஆர்வமுடன் ஆமோதித்தும் உள்ளனர்.

இயக்கம் என்றால் பயங்கரம், இயக்கத்தில் இருந்தவன் கெட்டவன் என்ற நிலைப்பாடு மக்கள் மத்தியில் வந்துவிட்டது. ஆனால், இனி அவன் திரைப்படத்திற்கு பிறகு சகோதர மொழி மக்கள் மத்தியில் காணப்படும் இந்த நிலைப்பாடு மாறும். அதனால்தான் இந்தப் படத்திற்கு இனி அவன் என்ற பெயர் வைக்கப்பட்டுள்ளது. சிங்களத்தில் இனிமையானவன் என்று அர்த்தம்."

## எரிவாயு சிக்கனம்

- சட்டியை அடுப்பில் வைக்கும்போதே அதன் உள்ளே, வெளியே உள்ள தண்ணீரை நன்கு துடைத்துவிடுங்கள்.
- சமையல் வேலைகளுக்கு பிரஷர் குக்கரைப் பயன்படுத்துங்கள்.
- காஸ் எரியவில்லை என்று காஸ் வரும் பேர்னரைக் குத்தி பெரிதாக்கி அடுப்பு சிவப்பாக எரிவதாலும் எரிவாயு வீணாகும்.
- பிட்டு, இடியப்பம் அவிக்கும்போது அந்தப் பாத்திரத்தில் உருளைக்கிழங்கு போன்றவற்றையும் வேகவைத்து எடுக்கலாம்.
- தோசையை இருபக்கமும் வேக வைக்காமல் அப்பம் மாதிரி மூடிவைத்து எடுக்கலாம்.
- காஸ் அடுப்பு எப்போதுமே நீல நிறத்தில் எரியுமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.
- அடுப்பில் சட்டியை மூடி வைத்தே சமையுங்கள். கடைசி தோசை அல்லது ரொட்டி கல்லில் இருக்கும் போதே காஸ் அடுப்பை அணைத்துவிடுங்கள்.
- ஃப்ரிட்ஜிலிருந்து எடுக்கும் காய்கறிகள், பழங்கள் போன்றவற்றைச் சாதாரண வெப்ப நிலைக்கு வந்த பிறகு சமையலுக்கு பயன்படுத்துங்கள்.





# ஜாக்கி சான்!

சச்சின், ஒருநாள் போட்டிகளிலிருந்து, ஓய்வு பெற்றுவிட்டார்.

இந்தத் தகவல் கிரிக்கெட் ரசிகர்களை, எவ்வளவு கலங்க செய்திருக்கும்? அதே அளவுக்கு, ஜாக்கிசானின் ஆக்சன் பட ஓய்வு அறிவிப்பும், என்னைப்போன்ற கோடிக்கணக்கான ஜாக்கி ரசிகர்களுக்கு, மிகப்பெரிய அதிர்ச்சிதான்.

குட்டிப்பையனாக, எத்தனை ஜாக்கிசான் படங்கள் பார்த்திருப்போம். அப்போதெல்லாம், தமிழ் டப்பிங் இருக்காது. ஆங்கிலம்தான். படத்தின் பெயர்கள் கூட குத்துமதிப்பாகத்தான் தெரிந்திருக்கும். மொழி புரியவில்லையென்றாலும் வெறும் காட்சிகளாலேயே நம்மை விலா நோக சிரிக்க வைத்தவர் ஜாக்கி. எவ்வளவு கடினமான ஆக்சன் காட்சிகளையும் சிரித்த முகத்தோடு ரத்தம் சிந்தி நடித்தவர். ஜாக்கியை குழந்தைகள்தான் கொண்டாடினர். அவர் குழந்தைகளுக்காகவே நடித்தார். அவருடைய சண்டைகளில் மூர்க்கம் இருக்கும்.. ஆனால் வன்முறை இருக்காது! அந்த மேஜிக் ஜாக்கிக்கு மட்டுமே வாய்த்திருந்தது.

அவருடைய படங்களை பார்த்துவிட்டு தியேட்டரைவிட்டு வெளியே வரும்போது, குளுக்கோஸ் டி குடித்த குதூகலத்தை கொடுத்தவர். ஓடும்பஸ்ஸை, தாவிக்குதித்துவிட வேண்டும்போல, நரம்பெல்லாம் உற்சாகம் உறைந்திருக்கும்.

அவருடைய, கடைசி ஆக்சன் படமான CZ12 (சைனீஸ் ஸோடியாக்) சென்றவாரம் வெளியானது. மிக சிறப்பாக அர்ப்பணிப்போடு எடுக்கப்பட்ட அனைவரும் பார்க்க வேண்டிய படம். படம் முழுக்க காமெடி கலாட்டாதான்.

காமெடி படம் தானே, என ஏனோதானோவென்று எடுக்காமல், அதற்குள், ஒரு பிரச்சினையையும் நுழைத்திருக்கிறார் ஜாக்கி! ஆக்சனும் காமெடியும் கலந்து, பரபரப்பான ஒரு படத்தையே கொடுத்திருக்கிறார்.

படத்தின் இயக்குனரும் ஜாக்கிதான். சண்டைக்காட்சிகளும் அவருடையதே. ஒவ்வொரு ஆக்சன் காட்சியிலும் புதுமையை புகுத்தியிருக்கிறார். ஒவ்வொன்றும் ஒரு ரகம். ஒரு ஷொட் கூட, படத்தில் வீண் கிடையாது. அவ்வளவு, கச்சிதமான திரைக்கதையமைப்பு.

இத்திரைப்படத்திற்காக, இரண்டு, கின்னஸ் சாதனைகள் செய்திருக்கிறார் ஜாக்கி. அதில், ஒன்று ஒரே படத்தில், அதிக ஸ்டன்ட்களில் நடித்தவர் (Most Stunts Performed by a Living Actor), இன்னொன்று ஒரே படத்தில் அதிக வேலைகளை செய்தவர் (Most Credits in One Movie)! இதெல்லாம், நிறையபேர் செய்யக்கூடியதுதானே என்று தோன்றலாம்.

ஜாக்கிசானுக்கு வயது 58!

இந்த வயதில், நாமெல்லாம், எழுந்து நடமாடவே யோசித்தபடி இருப்போமோ என்னவோ? இந்த மனிதர் ஒரு ஸ்டன்ட் நடிகர் என்னவெல்லாம் செய்ய அஞ்சுவார்களோ, அத்தனையையும் தன் கடைசி பட்த்தில் நிகழ்த்திக்காட்டியிருக்கிறார். அதோடு, படத்தில் இசை, எடிட்டிங், ஒளிப்பதிவு என ஏகப்பட்ட வேலைகளை இழுத்துப்போட்டுக்கொண்டு செய்துமுடித்திருக்கிறார்.

படத்தின் கிளைமாக்ஸ் சண்டைக்காக ஒரு எரிமலையின் உச்சியிலிருந்து உருளுகிறார்.. முகமெல்லாம் ரத்தம்.. மேக்கிங்கில் காட்டுகிறார்கள், சிரித்துக்கொண்டே வருகிறார் இந்த 58வயது பையன். யோவ் என்னய்யா.. உனக்கெல்லாம் வலிக்காதா.. என்று நமக்கு கோபம் வருகிறது.

கலையை நேசிக்கிற, தன் ரசிகர்களை மதிக்கிற, ஒருவனால் மட்டும்தான், இப்படியெல்லாம் அர்ப்பணிப்போடு இருக்க முடியும். மொழி, நாடு என்கிற எல்லைகள் தாண்டி, ஜாக்கியை, இத்தனை கோடிப்பேர் காதலிப்பதற்கான காரணம் அதுவாகத்தான் இருக்கவேண்டும்.

**சல்யூட் ஜாக்கி!**

# எறும்புகளின் கதறல்

## [இந்திய ஞானத்தைப் பேசும் ஈரானியப் படம்]



"இந்தியாவில் ஒரு பரிபூரண மனிதர் இருக்கிறார். சென்று அவரைப் பார்த்துவிட்டு வா" என்ற தனது ஆன்மீக குருவின் கட்டளையை நிறைவேற்ற ஒரு ஈரானியப் பெண், நாத்திகனான தனது கணவனுடன் இந்தியாவிற்கு வருகிறாள். இந்திய நிலத்தில் அந்தப் பரிபூரண மனிதரைத் தேடிச்செல்லும் வழியில் நடக்கும் சம்பவங்களும், சந்திக்கும் பிற மனிதர்களும், இவற்றால் உண்டாகும் அனுபவங்களும் இறுதியில் அந்தக் கணவன் மனைவிக்கு எந்த ஞானத்தை அளிக்கின்றன? உண்மையில் அப்படி ஒரு பரிபூரணம் அடைந்த மனிதர் இந்தியாவில் இருந்தாரா? இருந்தால் அவர் ஈரானியத் தம்பதிக்கு அளித்த செய்தி என்ன? இந்தக் கேள்விகளுக்குச் சொல்லப்பட்ட பதில்தான், 'எறும்புகளின் கதறல்' (Scream of the Ants) எனும் திரைப்படமாகியிருக்கிறது..

படம் ஒரு இனிய முரணுடன் தொடங்குகிறது. கம்யூனிஸ்ட்டும் ஆகவே நாத்திகனும், குடும்பம் எதிர்காலம் எதிலும் நம்பிக்கையற்றவனுமான கணவனுடன், மேலான உண்மையையும், வாழ்வின் பொருளையும், முழுமையையும் அறியும் ஆன்மீகத் தேடல் கொண்ட ஒரு பெண் தன் தேனிலவுப் பயணமாக இந்தியா வருகிறாள் - அதுவும் தன்னைச் சந்திப்பவர்களின் வாழ்க்கையில் அற்புதத்தை நிகழ்த்தும் ஞானியான ஒரு பரிபூரண மனிதரைத் தேடி. இருவரும் நேரெதிரான மனநிலைகளுடன் காதலும், சிறுசிறு ஊடல்களுமாக விவாதித்தபடியே பயணிக்கின்றனர்.

முதல் ரயில் பயணத்திலேயே சந்திக்க நேரும் ஒரு யதார்த்தவாதியான இந்தியப் பத்திரிகையாளன், 'அற்புதங்கள், அற்புத மனிதர்கள் என்று தவறாக இந்தியாவைத் தேடி வரும் வெளிநாட்டினர் எல்லாம் பைத்தியம்' என்கிறான். அந்த பயணத்திலேயே ஈரானிய தம்பதியினர் ரயிலை கண்களாலேயே நிறுத்தி விடும் ஒரு சாமியாரின் அற்புதச் செயலைப் பார்க்க நேர்கிறது. பின்னர் பத்திரிகையாளனிடம் சாமியார் தான் அற்புத மனிதனாக்கப்பட்ட கதையைச் சொல்கிறார். வாழ்வில்




துயரங்களால் அவதிப்பட்ட அவர் 'இனி வாழ்ந்து என்ன பயன்?' என ஒருநாள் தற்கொலை செய்து கொள்வதற்காக இந்த தண்டவாளத்தில் அமர்ந்திருக்கிறார். நீண்ட நேரம் கழித்து வந்த ஒரு ரயிலின் ஓட்டுனர் தண்டவாளத்தில் கிடக்கும் ஆளைக் கண்டு வண்டியை நிறுத்தப் போய் பயணிகள் சாமியார் தன் பார்வையின் சக்தியினால் ஓடும் ரயிலையே நிறுத்திவிட்டதாக பூரிக்கின்றனர். அன்று முதல் கூட இருக்கும் பண்டாரங்களும், பிச்சைக்காரர்களும் அவரைக் கொண்டு வந்து ரயில் தண்டவாளத்தில் உட்காரவைத்து ரயிலை 'நிப்பாட்டி' பயணிகளிடம் காணிக்கையும், உணவும் பெற்றுப் பிழைக்கிறார்கள். சாமியார் பாவமாக, 'எனக்கு என் வீட்டிற்குப் போக வேண்டும், பிள்ளைகளைப் பார்க்க வேண்டும் என ஆசையாக இருக்கிறது. இந்தப் பண்டாரங்கள் என்னை விடமாட்டேனென்கிறார்கள். என்னைக் காப்பாற்றுங்கள்' என்று கெஞ்சுகிறார். அவரை பண்டாரக் கும்பல் அலேக்காகத் தூக்கிச் செல்கிறது. முதல் அனுபவமே ஏமாற்றமாக, ஈரானிய தம்பதியின் பயணம் தொடர்கிறது.

அடுத்து இந்தியாவின் ஒரு பெருநகரச் சாலையில் சைக்கிள் ரிக்ஷாவில் உட்கார்ந்தபடி சாலையோரக்காட்சிகளைப் பார்த்தபடியே சவாரி செய்கிறார்கள். பெண்ணின் பார்வையில் பூக்குவியல், சிட்டுக்குருவிகள், ஏழ்மையில் இருந்தாலும் சந்தோஷமாகச் சிரித்தபடி ஓடிவரும் அழகான குழந்தைகள், அழகான இந்தியப்பெண்கள், விதவிதமான மனிதர்கள் என காட்சிகள் தெரிகிறது, 'எவ்வளவு அழகு?' என்று வியக்கிறாள்.

தொடர்ந்து அவன் பார்வையின் வழியாக சாலைக் காட்சிகள் விரிகின்றன. தெருவோரங்களில் படுத்திருக்கும் வீடற்றவர்கள், அவர்களுக்குப் பக்கத்திலேயே தூங்கும் நாய்கள், குப்பைமலைகள், போக்குவரத்து நெரிசல் பிச்சைக்காரர்கள், பிச்சை கேட்டு துரத்தியபடியே ஓடிவரும் சிறுமிகள், நீண்ட வரிசைகளில் தர்ம உணவுக்காகக் காத்திருக்கும் ஏழைகள் என்ற அழுக்கும் அசிங்கமுமான சித்திரம் தான் தெரிகிறது.

எங்கும் எப்பொழுதும் ஏதாவது ஒரு புரட்சிக்கான ஆவலிலேயே இருக்கும் அவனது கம்யூனிச மனம் 'தொண்ணூறு' சதவிகிதம் ஏழைகள் உள்ள நாட்டில் எப்படி புரட்சி வராமல் இருக்கிறது? என்று அடித்துக்கொள்கிறது. காந்தியின் அஹிம்சையால் பணக்காரர்கள் தான் பலனடைந்தார்கள்,' அஹிம்சை தான் வன்முறையை உருவாக்கும் என்று சமாதானம் செய்துகொள்கிறான். இங்கே தன் மனைவிக்கு என்ன அழகாகத் தெரிகிறது என்று புரியாமல் புலம்புகின்றான்.

மனைவியை, 'உன் கடவுள் இந்த ஏழ்மைக்கும் துயரத்திற்கும் என்ன பதில் வைத்திருக்கிறார்?' என்று சீண்டுகிறான், அவள் வெடுக்கென, 'கண்டிப்பாக உன் புனித சோஷலிசம் இல்லை' என்று பதிலளிக்கிறாள். தொடர்ந்து இருவருக்குள்ளும் ஏழ்மை, அழகு, கடவுள் என்று பலவிஷயங்களிலும் வாதம் வளர்கிறது. காதல் என்னும் மைய அச்சில்

- பிரகாஷ் சங்கரன்

இணைந்திருக்கும் கத்திரிக்கோல் போல இருவரும் ஒருபக்கம் பிரிந்து விவாதித்துக்கொண்டு மறுபுறம் இணைந்து முன்செல்கிறார்கள்.

மறுநாள் ஒரு டாக்ஸி ஓட்டுனரிடம் பரிபூரண மனிதர் இருக்கும் இடத்திற்கு போக வேண்டும் என்று சொல்கிறார்கள். ஓட்டுனர் (தமிழ் நடிகர் யூகி சேது இந்தக் கதாபாத்திரத்தைச் செய்திருக்கிறார்) 'காரில் போனால் ஒருமணி நேரம் தான், அவரை நன்றாகத் தரிசிக்கலாம். நடந்து சென்றால் இரண்டு நாள் ஆகும், ஆனால் அவரை நடந்து சென்று பார்ப்பது தான் சிறந்தது, அப்போது அவரிடமிருந்து வாழ்க்கைக்கு நல்ல தரிசனம் கிடைக்கும்' என்கிறார். வெயில் கொளுத்துகிறது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை புழுதி பறக்கும் பொட்டல் காடு. இரவும் பகலுமாக கால்நடையாக பரிபூரண மனிதரைத் தேடி நடக்கின்றனர். 'ஒவ்வொரு அடி கால்வைக்கும் போதும் ஒரு எறும்பு கொல்லப்படுகிறது, பரிபூரண மனிதரைப் பார்க்கவேண்டுமென்றால் எறும்புகளைக் கொல்பவர் ஆகித் தான் தீரவேண்டும், நடப்பதை நிறுத்தினால் குற்றவாளி ஆவாய்' என்று கிண்டலடிக்கிறான் கணவன். மனைவி கடவுளிடம் 'எறும்புகளை என் பாதையில் இருந்து மாற்று தெய்வமே. நான் நடக்க வேண்டும். உனது எறும்புகள் சாவதால் உனக்கு வருத்தம் இல்லையா? அவை என் காலடியில் கதறுவது எனக்குக் கேட்கிறது, உனக்குக் கேட்கவில்லையா?' என வேண்டியபடி நடக்கிறாள்.

வழியில் மாடுகளை மேய்த்துக் கொண்டுவரும் ஒருவரிடம் பரிபூரண மனிதரைப் பார்ப்பதற்கு வழி கேட்கிறார்கள். அவருடைய பெயர் என்ன என்று பேச்சுக் கொடுக்கிறார்கள், 'மக்கள் என்னை 'மாட்டுக்காரன்' என்று சொல்வார்கள் என்கிறார். 'உங்களுக்கு கடவுள் நம்பிக்கை உண்டா?' என்று பெண்ணின் கேள்விக்கு மாட்டுக்காரர் பதில், 'மனிதர்கள் ஒவ்வொருவருமே கடவுள் தான்'. பெண் விடாமல் கடவுள் இருக்கிறாரா இல்லையா என்று கேட்கிறாள், 'இருக்கிறார் என்றால் இருக்கிறார், இல்லை என்றால் இல்லை' என்று சொல்லிவிட்டு மாட்டுக்காரர் ஒரு வீட்டைக் காண்பித்து இது தான அவருடைய வீடு, கூப்பிடுங்கள், பதில் வராவிட்டாலும் மனம் தளராமல் தொடர்ந்து கூப்பிடுங்கள், வருவார் என்று சொல்லிவிட்டு தன் பாட்டுக்குப் போகிறார்.

ஆண் பரிபூரண மனிதரை உரக்கக் கூவி அழைக்கிறான். பெண் கண்மூடித் தியானிக்கிறாள். கொஞ்ச நேரத்தில் அந்த மாட்டுக்காரர் திரும்பவருகிறார், அவர் தான் பரிபூரண மனிதர் என அறிந்து ஆச்சரியமடைகிறாள். பரிபூரண மனிதரைப் பற்றின தன் கற்பனைகள் எல்லாம் தவிடுபொடியாக அவர் இவ்வளவு எளிமையாக, எல்லாரையும் போல் சாதாரணமானவராக இருப்பதைக் கண்டு குழம்பிவிடுகிறாள்.

எறும்புகளின் அலறல் (Scream of the Ants)


மோஹ்சென் மக்மல்பா.்.ப

எனும் இப்படம் அதன் நுட்பமான குறியீடுகளின் வழியாக வாழ்வில் அறியவேண்டிய மெய்ஞானத்தையும் அதை நோக்கிய தேடலுக்கான பயணத்தையும் குறிப்பிடுகிறது.

எதிர் எதிரான கருத்து நிலைப்பாடுகள் கொண்ட, ஆனால் காதலுள்ள கணவன் மனைவி என்னும் குறியீட்டு மனிதர்களுக்குள் இருக்கும் ஒரு முனையாக சஞ்சலமும், முடிவில்லாத கேள்விகளும், அவநம்பிக்கையும் கொண்ட வறண்ட தருக்க மனதையும், அதன் எதிர் முனையாக நுண்ணுணர்வும், உண்மையை நோக்கிய தேடலும், அதனில் ஆழமான நம்பிக்கையும் கொண்ட உணர்ச்சி மிகுந்த மனதையும் சித்திரிக்கிறது. ஒவ்வொரு மனித மனமும், தருக்கமும், உணர்ச்சிகரமுமாக இரண்டாகப் பிளந்து தான் இருக்கிறது.

(17ஆம் பக்கம் பார்க்க)

எங்கும் எப்பொழுதும் ஏதாவது ஒரு புரட்சிக்கான ஆவலிலேயே இருக்கும் அவனது கம்யு,னிச மனம தொண்ணூறு சதவிகிதம் ஏழைகள் உள்ள நாட்டில் எப்படி புரட்சி வராமல் இருக்கிறது? என்று அடித்துக்கொள்கிறது. காந்தியின் அஹிம்சையால் பணக்காரர்கள் தான் பலனடைந்தார்கள், அஹிம்சை தான் வன்முறையை உருவாக்கும் என்று சமாதானம் செய்துகொள்கிறான்.

# புதிய வருடத்துக்கான திட்டங்கள்; வடமாகாண ஆளுநர் ஆராய்வு





வட மாகாண சபை அமைச்சுக்களின் செயலாளர்களுடனான 2013 ஆம் ஆண்டின் முதலாவது கலந்துரையாடல் அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் ஒவ்வொரு அமைச்சினதும் இந்த ஆண்டுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும். புதிய ஆண்டுகான நிதிஒதுக்கீடுகள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

இதில் வட மாகாண பிரதம செயலாளர் திருமதி ர.விஜயலட்சுமி, ஆளுநரின் செயலாளர் இளங்கோவன், அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோர் இக்கலந்துரையாடலில் பங்குபற்றினர்.

# அச்சுவேலி வீதிக்கு மின்சாரம்


(அச்சுவேலி)

அச்சுவேலி மேற்கு யோகன் ராஜா வீதிக்கு தற்போது மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதாக இப்பிரதேச மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

இவ் வீதிப்பகுதிக்கு மின்சாரம் வழங்குமாறு மின்சார சபையிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் இங்குள்ள சுதேச மருத்துவமனைக்கு மாத்திரமே மின்சாரம் வழங்கப்பட்டது. எனினும் தற்போது இவ் வீதிக்கு மின்சாரம் வழங்க்ப்பட்டுள்ளதை அடுத்து மக்கள் இரவு நேரப்போக்குவரத்துக்கள் சிரமமின்றி இடம்பெற வழி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

புதிய மின்கம்பங்கள் நாட்டப்பட்டு வயர்கம்பிகள் பொருத்தப்பட்டு சீரான முறையில் மின் விநியோகம் வழங்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர். (15)

# புற்றுநோய் ஏற்படுவதை தடுப்பதற்கான வழிமுறைகள்




(யாழ்ப்பாணம்)

இலங்கையில் அண்மைக்காலமாக புற்றுநோயினால் இறப்பவர்கள் தொகை கூடியுள்ளதாக அவதானிக்கப்படுகின்றது. நவீன ஆய்வு கூட முறைகள் மற்றும் சிகிச்சை முறைகள் என்பன முன்னேற்றம் ஏற்பட்டும் கூட, இந்த நிலை ஏற்பட்டுள்ளது. காரணம் நோயால் பாதிக்கப்பட்டவர்கள் ஆரம்ப நிலையில் வைத்தியர்களிடம் உதவி நாடாமல் இருப்பதே. சாதாரண மக்கள் இந்த ஆரம்ப நிலையை அறிந்திருத்தல் அவசியமானதாகும். அந்தவகையில் வடமாகாண புற்றுநோய், எயிட்ஸ் நோய் தடுப்புச் சங்கம் மக்களுக்கு புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வை வழங்கும் வகையில் அறிவுறுத்தல்களை வளங்கியுள்ளதாக சங்க தலைவர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

**02.ஆரம்பஅறிகுறிகள்.**

உடலில் மறைமுகமாக வளரும் இந்நோய் ஆரம்பத்தில் வெளிப்படையாகக் காட்டி நிற்காது. ஆனால் அனுபவ ரீதியாக பின்வரும் எச்சரிக்கை அறிகுறிகளுக்கும், புற்றுநோய்க்கும் மிக நெருங்கிய தொடர்புண்டு என்பதை அறிந்திருக்கின்றனர். அவையாவன,

(அ) ஆறாத புண் (குறிப்பாக வாய், நாக்கு, சொக்கை, அல்லது உதடு).

(ஆ) அசாதாரணமான அல்லது தொடர்ச்சியான இரத்த ஒழுக்கு (விசேடமாக மாதவிடாய் நின்ற பெண்களுக்கு).

(இ) அசாதாரண மான கட்டி அல்லது வளர்ச்சி (மச்சம்) குறிப்பாக பெண்களின் முலையில் முலைக்காம்பின தோற்றம் மாறுபடல், முலைக்காம்பிலிருந்து இரத்தம் கலந்த ஊனநீர் வடிதல்.

(ஈ) இடையாறா அஜீரணம் அல்லது விழுங்குவதில் சிரமம்.

(உ) இடையறா இருமல் அல்லது நீண்டகால குரலடைப்பு.

(ஊ) வழமையான மலங்கழிக்கும் பழக்கத்தில் ஏதாவது ஒரு மாற்றம்.

(எ) உடம்பிலுள்ள காய் அல்லது மச்சத்தின் பருப்பம், நிறம் மாற்றமடைதல்.

(ஏ) படிப்படியாக எடை குறைதல்.

இவ்வெச்சரிக்கை அறிகுறிகள் காணப்படின் அண்மையிலுள்ள அரச வைத்தியசாலைகளை நாடுங்கள். தேவை ஏற்படின் தங்களை போதனாவைத்தியசாலைக்கு வைத்தியர்கள் அனுப்பி வைப்பர்.

**3. புற்றுநோயை எப்படித் தவிர்த்துக் கொள்ளலாம்.**

(அ) உடலில் எப்பாகத்திலும் தொடர்ச்சியான அழற்சி ஏற்படும் நிலைமை தவிர்க்கப்படல வேண்டும்.

(ஆ) பிரசவத்தின்போது கருப்பையில் உண்டாகும் எல்லாக்காயங்களும் உடனடியாக சீர்செய்யப்படல் வேண்டும். தனிநபர் சுகாதாரம் பேணப்படல் வேண்டும்.

(இ) மார்பகங்கள் இயல்பாகச் செயற்படவிடல் வேண்டும்.

(ஈ) புகையிலை பாவிப்பதில் தன்னடக்கம் வேண்டும்.

(உ) தீராத மலச்சிக்கல் சீர்செய்யப்படல் வேண்டும்.

(ஊ) சுருங்கக் கூறின் உடலில் எவ்விழையத்தையும் அனாவசியமாக அழற்சியேற்படாது பாதுகாத்தல் வேண்டும்.

**4. வாய்ப்புற்று நோயை நம் நாட்டில் எப்படித் தடுக்கலாம்?**

எமது பிரதேசத்தில் சம்பவிக்கும் புற்றுநோய்களில் 40 வீதமானவை வாய்ப்புற்று நோயாகும். தடுப்பு முறைகளாவன -

(அ) ஆடும் பற்கள், உடைந்த பற்கள் காலதாமதமின்றி சீர்செய்யப்படல் வேண்டும்.

(ஆ) நன்கு பொருத்தப்படாத போலிப் பல்வரிசைத் தகடுகள் தவிர்க்கப்பட வேண்டும்.

(இ) அண்ணம், சொண்டு, நாக்கு முதலியவற்றில் வெள்ளைப்படலம் தென்படின், வைத்தியரின் ஆலோசனை பெறப்படல் வேண்டும்.

(ஈ) சுண்ணாம்பு புகையிலை சேர்த்து வெற்றிலை பாக்கு பாவிப்பது முற்றாகத் தவிர்க்கப்படல் வேண்டும். மேலும் வேண்டிய தகவல்களுக்கு வெளிக்களச் சுகாதார ஊழியர்களையோ அல்லது எமது புற்று நோய் தடுப்புச் சங்கத்தையோ நாடவும்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

கிளிநொச்சியில் இயங்கும் சிறுவர்பராமரிப்பு இல்லத்திற்கு இயக்குநர், பராமரிப்பாளர் மற்றும் ஆங்கில, சிங்கள, பரதநாட்டிய, சங்கீத ஆசிரியர்கள் தேவை. ஊதியம் பேசித்தீர்மானிக்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி இல.4, 5/2, திருவையாறு, கிளிநொச்சி. தொ.பே.எண். 021 373 4848. email sencholai 1992@gmail.com.

---

மகேந்திரா வாகன திருத்த நிலையத்திற்கு ரிங்கறிங் மற்றும் பெயின்ரிங் வேலை தெரிந்தவர்களுக்கு வெற்றிடமுண்டு. ஆர்வமுள்ளோர் தொடர்பு கொள்ளவும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: றோயல் மார்க் பிறைவேட் லிமிட்டெட். மகேந்திரா வாகன காட்சியறை. இல.123, கண்டி வீதி யாழ்ப்பாணம். தொ.பே.இல. 077 393 1393.

---

சாவகச்சேரியில் இயங்கும் சஜித் என்ர பிறைசஸ் நிறுவனத்துக்கு விற்பனைப்பிரதிநிதிகள் தேவை. க.பொ.த.சாதாரண தர தகைமையுடையோர் இன்றும், நாளையும், நாளை மறுதினமும் டச்சு வீதி, சாவகச்சேரியில் உள்ள காரியாலயத்தில் நடைபெறும் நேர்முகத்தேர்வுக்கு சமுகமளிக்கவும். தொலைபேசித் தொடர்பு: 021 227 0586.

---

பொதிப் போக்குவரத்துச் சேவைக்கு ஆண், பெண் இருபாலாருக்குமான வேலைவாய்ப்புண்டு. தொடர்புகளுக்கு யோகா றான்ஸ்போட், யாழ்ப்பாணம், தொ.பே.இல. 077 756 0682.

---

அரைக்கும் ஆலை, தொலைத் தொடர்பகம், சுத்திகரிப்பு நிலையம் மற்றும் மாவறுத்தல், உணவக சமையல் என்பவற்றுக்கு உதவியாளர் தேவை. தொடர்புகளுக்கு பிருந்தா மில்ஸ், N-18, றக்கா றோட், யாழ்ப்பாணம். தொ.பே.இல. 077 991 2304.

---

அனுராதபுரத்தில் க்ளவுஸ் உற்பத்தி செய்யும் கம்பனிக்கு 16 தொடக்கம் 55 வரையான அகவையுடைய ஆண்கள், பெண்கள் தேவை. சாப்பாடு தங்குமிட வசதி உண்டு. மாதவேதனம் 25,000 ரூபா தொ.பே.இல. 077 303 2004.

---

தனியார் துறைமுகமொன்றில் கப்பல் வேலைக்கு 18 தொடக்கம் 55 வயது வரையான ஆண்கள் தேவை. உணவு, தங்குமிட வசதி உண்டு. மாதவேதனம் 25,000 ரூபா, 35,000ரூபா, 40,000ரூபா. தொடர்புகளுக்கு: 077 303 3803.

---

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் கட்டட நிர்மாணத்துறைசார்ந்த வேலைகளுக்கு மேசன், தச்சு, இலக்றீசன், பிளப்பர், கையுதவியாளர் உடனடியாகத்தேவை. உணவு தங்குமிடம் வழங்கப்படும். வேதனம் 18,000ரூபா, 40,000 ரூபா. தொடர்புகளுக்கு: 077 556 1883.

---

யாழ்.சிகிச்சை நிலையத்திற்கும் மற்றும் தெல்லிப்பளை துர்க்காபுரத்தில் ஆரம்பிக்கபடவிருக்கும் வைத்தியசாலைக்கும் MBBS அல்லது RMO தேவைப்படுகின்றனர். அனுபவம் தகைமையுள்ளவர்கள். தமது சுயவிபரங்களுடன் உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி, வைத்தியபணிப்பாளர், யாழ்.சிகிச்சை நிலையம். இல.335, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி. தொ.பே.இல. 021 222 9332.

---

யாழ்.நகரில் இயங்க்கொண்டிருக்கும் பிரபல மொத்த வியாபார நிறுவனத்துக்கு விற்பனையாளர், விற்பனை உதவியாளர், எழுதுவினைஞர் தேவை. ஆர்வமுடையோர் உடன் தொடர்புகொள்ளவும். தொ.பே.இல. 077 573 1318.

---

இல.410, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள லைடன் புடவைக்கடைக்கு பெண் பிள்ளைகளும் பழகவிரும்புபவர்களும் தேவை. விரும்புவர்கள் நேரில் சமுகமளிக்கவும்.

# வடக்கில் ஐ.நா.பணி முடக்கம்

# அரசின் அணுகுமுறை காரணமா?

## பழி விடாது தொடர்கிறது



(கொழும்பு)

வடக்கில் ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் தனது முகவர் நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளும் உதவித்திட்டங்களைச் சுருக்கிக்கொண்டமைக்கு அரசின் அதீத கெடுபிடி நடவடிக்கை காரணமா என்று இப்போது சர்ச்சை கிளம்பியுள்ளது.

எனினும் இந்த முகவர் நிறுவனங்களுக்கு கிடைக்கும் நிதி மூலங்கள் வற்றி விட்டமையே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் செயற்பட்டு வந்த ஐ.நா. முகவர் அமைப்புக்கள் தமது பணிகளை இந்த வருட ஆரம்பத்திலிருந்து குறைக்க எண்ணியுள்ளதுடன், இந்தவருட இறுதியுடன் தமது பிராந்திய அலுவலகங்களை மூடிவிடத் தீர்மானித்துள்ளதாகவும் நம்பகரமாக அறியமுடிகின்றது.

ஐ.நா. முகவர் அமைப்புக்களின் தேவைகள் யாழ். மாவட்டத்தில் குறைவடைந்துள்ளமையாலேயே மேற்படி அலுவலகங்கள் மூடப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. இருப்பினும் ஐ.நா. முகவர் அமைப்புக்களுக்கு நிதி இல்லாமையே அவை அலுவலகங்களை மூடுவதற்குப் பிரதான காரணம் என்று ஐ.நா. முகவர் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இலங்கையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போரின் காரணமாகப் பல இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் இடம் பெயர்ந்தனர். அத்துடன் பல பிரதேசங்களில் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத நிலையும் காணப்பட்டது.

கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருந்தமை, இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டிருந்தமை ஆகிய காரணங்களினால் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாமல் இருந்தனர்.

பின்னர் பல தமிழர் பிரதேசங்களில் ஐ.நா.முகவர் அமைப்புக்களின் மேற்பார்வையில் கண்ணிவெடி அகற்றல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதுடன், மக்கள் மீளக்குடியமர்த்தப்பட்டனர்.

இதன்போது மீளக்குடியமர்ந்த மக்களுக்கு இலங்கை அரசால் போதிய அளவில் உதவிகள் வழங்கப்படாத நிலையில், ஐ.நா. முகவர் அமைப்புக்கள் மக்களுக்கான உதவிகளை வழங்கிவந்தன. விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவடைந்த பின்னரும் ஐ.நா.வின் இந்த உதவிகள் தொடர்ந்தன.

யாழ். மாவட்டத்தில் இன்னமும் மக்களின் மீள்குடியமர்வு நடவடிக்கைகள் பூர்த்தியாகவில்லை. இந்த நிலையில் ஐ.நா. முகவர் அமைப்புக்கள் தமது செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் குறைத்துக் கொண்டுள்ளன.

குறிப்பாகக் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைகள் முடிவடைவதற்கு இன்னமும் 5 ஆண்டுகள் தேவை என்று கூறப்பட்டுள்ள நிலையில், யாழ்ப்பாணத்தில் இயங்கிரும் ஐ.நா. முகவர் அமைப்பின் மிதிவெடிச் செயற்பாட்டு அலுவலகம் இந்த ஆண்டு இறுதியுடன் மூடப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

2014ஆம் ஆண்டு டிசெம்பருடன் கண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பாதுகாப்பு அமைச்சு பொறுப்பேற்கும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தபோதும், இந்த ஆண்டு இறுதியுடன் பாதுகாப்பு அமைச்சு அந்தப் பணிகளை பொறுப்பெடுக்கவுள்ளது என இப்போது கூறப்படுகிறது.

இதேபோன்று மக்களுக்கான உதவித்திட்டங்களை வழங்கி வருகின்ற ஐ.நா.முகவர் அமைப்புக்களும் யாழ்ப்பாணத்தில் உள்ள தமது அலுவலகங்களில் பணியாற்றும் ஆளணியினை இந்த வருட ஆரம்பம் முதல் குறைத்துள்ளன என்று கூறப்படுகிறது.

வடக்கு மாகாணத்தின் ஒவ்வொரு மாவட்டங்களிலும் இயங்கிய சில ஐ.நா.முகவர் அமைப்புக்கள் வடக்கு மாகாணத்தின் எல்லாக் கிளைகளையும் ஒன்றிணைத்து ஒரு கிளையை மாத்திரமே, இந்த ஆண்டு ஆரம்பத்தில் இயக்கவுள்ளன. அத்துடன் இந்த ஆண்டின் இறுதியுடன் அவை முற்றாக இங்கிருந்து வெளியேறவும் தீர்மானித்துள்ளன என்று கூறப்பட்டது.

இலங்கை மத்தியதர நாடு என்று சொல்லப்படுவதால் இலங்கைக்கான உதவிகள் குறைவடைந்துள்ளன. இதனால் நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளமையால் கிளைகளை மூட வேண்டி ஏற்பட்டுள்ளதாக ஐ.நா. முகவர் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். குடாநாட்டில் மக்கள் மீள்குடியமர்வு இன்னமும் பூர்த்தியாகாத நிலையில் ஐ.நா. அமைப்புக்கள் தமது பணிகளைச் சுருக்குவது மக்களிடையே கவலையைத் தோற்றுவித்துள்ளது.

வலி.வடக்கில் மாத்திரம் 4 ஆயிரம் குடும்பங்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர முடியாத நிலையில் நலன்புரி நிலையங்களில் வசித்துவருவதாக வலி.வடக்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனி சிங்களத்தில் கடிதங்கள்

# அரச ஊழியர்கள் திண்டாட்டம்

(கொழும்பு)

"அக்ரஹரா" திட்டத்தின் கீழ் அரச ஊழியர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் தனிச்சிங்கள மொழியில் அனுப்பப்படுவதாக தமிழ் அரச சேவையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். அரச ஊழியர்கள் தாம் அல்லது குடும்ப அங்கத்தவர்களுக்கு தனிப்பட்ட வைத்தியசாலையில் நோய்க்கு சிகிச்சை பெறும் சந்தர்ப்பத்தில் அவர் குறிப்பிட்ட நோய் சார்பில் செலவு செய்த பணத்துக்கான கோரிக்கையை அக்ரஹரா நிறுவனத்துக்கு அனுப்ப முடியும். இவ்வாறான கோரிக்கைகள் தொடர்பில் விண்ணப்பங்கள் பூரணமற்றதாக இருக்கும் நிலையில் அது தொடர்பாக அக்ரஹரா நிறுவனம் விண்ணப்பதாரிகளுக்கு அனுப்பும் கடிதங்களை இவ்வாறு சிங்கள மொழியில் அனுப்புகின்றது.

தமிழ் மொழியைத் தாய் மொழியாக கொண்டவர்களுக்கு சிங்கள மொழியுடன் தமிழ் மொழி மூலமும் கடிதங்கள் அனுப்பப்படல் வேண்டும் என்ற சட்டவிதிகள் அரசியல் அமைப்பில் உள்ள போதும் பெரும்பாலான நிறுவனங்கள் சிங்கள மொழியிலேயே கடிதங்களை அனுப்பும் வழக்கத்தைக் கொண்டிருக்கின்றன. அண்மையில் தமிழ் அரச ஊழியர் ஒருவருக்கு இவ்வாறான கடிதம் ஒன்று சிங்கள மொழியில் கிடைத்தது. அந்தக் கடிதத்தில் மேலதிகமாக தெளிவற்ற கையெழுத்துடன் கூடிய விளக்கமும் அடக்கப்பட்டிருந்தது.

அந்தப் பகுதியில் உள்ள கூற்றின் விளக்கத்தை சிங்கள மொழியை தாய் மொழியாகக் கொண்ட ஒருவரிடம் காட்டி விளக்கம் கேட்ட போது அவரால் கூட அதனை சரியாக வாசித்து விளங்க முடியாத நிலை ஏற்பட்டது.

ஜனாதிபதி கடந்த வருடம் மும்மொழி அமுலாக்கம் தொடர்பில் செயலகம் ஒன்றை நிறுவி இது தொடர்பில் நடவடிக்கை எடுத்து இருந்ததுடன், மும்மொழிப் புலமையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரியிருந்தார். இருந்தும் தொடர்ந்து கூடுதலான நிறுவனங்கள் சிங்கள மொழியிலேயே தமிழ் மக்களுடன் தொடர்பு கொண்டு வருகின்றமை விசனத்தை ஏற்படுத்துகின்றது என்று கூறப்பட்டது.

# சுவிஸ் நீதிமன்றில் போர்க்குற்ற வழக்கு

## ஜகத் டயஸ் குற்றவாளிக் கூண்டில்



(கொழும்பு)

வடக்கின் இறுதியுத்தத்தில் பங்கு கொண்ட இலங்கையின் படைப்பிரிவுகளின் தளபதிகளில் ஒருவரான ஜகத்டயஸ் மீது யுத்தக்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு சுவிட்ஸர்லாந்து நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்விடயம் தொடர்பாக மேற்படி நாட்டில் செயற்படும் இலங்கைத்தூதரக அதிகாரிகள் தகவல்களைத் திரட்டி வருகின்றனர். இந்தப்படைத் தளபதிசார்பில் இந்த குறிப்பிட்ட நீதிமன்றத்துக்கு பதிலளிப்பதற்காகவே இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுவருகிறது. "யூரோபியன் சென்டர் போர் ஹியுமன் ரைட்ஸ்" என்ற ஜேர்மனிய அமைப்பே இந்த குற்றச் சாட்டை முன்வைத்துள்ளது. இந்த அமைப்பின் இலங்கைப் பிரதிநிதிகள் பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அர சாங்கம் அறிவித்துள்ளது.

# நாட்டின் உயர்கல்வி சீரழிகிறது

# பேராசிரியர்களின் ஒன்றியம் கவலை



(கொழும்பு)

அரசியல் நோக்கங்களை பூர்த்தி செய்து கொள்வதற்காக நாட்டின் கல்வித்துறையில் மாற்றங்கள் செய்யப்படுவதாக பல்கலைக்கழக பேராசிரியர் ஒன்றியத்தின் தலைவர் நிர்மால் ரஞ்சித் தெவ்சிறி குற்றஞ்சாட்டியுள்ளார்.

சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை தொடர்பிலான சர்ச்சை குறித்து கருத்து வெளியிட்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட ஓர் இன சமூகத்தைச் சேர்ந்த மாணவ மாணவியர் அதிகளவில் சட்டக் கல்லூரிக்கு தெரிவானமையின் மூலம், அமைச்சர்கள் எவ்வாறு பரீட்சைகளில் தாக்கம் செலுத்துகின்றனர் என்பது புலனாகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பரீட்சை முறைமையின் மீதான திட்டமிட்ட தலையீடாகவே இதனைக் கருத வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சையில் ஒரு குறிப்பிட்ட இன சமூக மாணவ மாணவியர் அதிகளவில் தெரிவானமைக்கு அரசியல் கட்சிகளும் சில பொது அமைப்புக்களும் கடும் எதிர்ப்பை வெளியிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் உலர் உணவு விநியோகம்

# முரண்பாடுகளை நீக்க நடவடிக்கை

## ஆயர் தலையிட்டதால் சுமுகம்

மல்வத்து ஓயா வெள்ள நீர் பெருக்கெடுத்துள்ள தன் காரணத்தினால் மன்னார் மாவட்டம் மடு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட குஞ்சுக் குளம் கிராம மக்களுக்கு அரசாங்கத்தினால வழங்கப்பட உலர் உணவுப்பொருட்கள் போதாமையினால் அப்பொருட்கள் திருப்பி மாவட்ட செயலகத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குஞ்சுக்குள கிராம மக்கள் தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர் சரத் ரவீந்திர அறியத்தருகையில், குஞ்சுக்குள கிராமமானது எவ்வித வெள்ளத்தினாலும் பாதிக்கப்படாத கிராமம் என்பதுடன் சுற்று நிருபத்தின்படி நிவாரணம் வழங்க முடியாத கிராமமாகும்.

தரை வழிப்பாதை தடைப்பட்டிருந்தமையை கவனத்தில் கொண்டு ஏற்கனவே 23.12.2012ஆம் திகதி மடு பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினால் தேவையான உலர் உணவுப் பொருட்கள் கிராமத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருந்தும், முசலி மக்களுக்கு என இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் மீள் எழுச்சித்திட்டத்தினால் சேகரிக்கப்பட்ட பொருட்கள் எமக்கு கையளிக்கப்பட்டது.

இதன் போது அப்பொருட்களில் அரைவாசி பொருட்கள் குஞ்சுக் குளமக்களுக்கு மனிதாபிமான ரீதியில் மிகுந்த சிரமத்தின் மத்தியில் 27-12-2012 கடல் மார்க்கத்தின் ஊடாக படகு மூலம் மாவட்ட செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டது.

குறித்த குஞ்சுக்குள கிராம அலுவலகரும் அப்படகில் சென்றிருந்தார். ஏறக்குறைய 06 நாட்களின் பின்னர் வழங்கப்பட்ட பொருட்கள் முழுவதுமின்றி குறிப்பிட்ட சில பொருட்கள் மட்டும் மாவட்ட செயலகத்தின் முன் வாயிலில் அனாதரவாக வைக்கப்பட்டிருந்தது.

இச் செயற்பாட்டிற்கு குறித்த கிராமத்தின் பங்குத்தந்தை தலைமை வகித்ததை அறிந்த மன்னார் மாவட்ட ஆயர் அதி வணக்கத் திற்குரிய இராயப்பு யோசப் ஆண்டகை மற்றும் குரு முதல்வர் அருட்தந்தை விக்டர்சோசை அடிகள் ஆகியோர் மாவட்ட செயலகத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை வருகை தந்து பொருட்களை பார்வையிட்டதுடன் 03 நாட்களுக்கு தேவையான அள்வு பொருட்கள் வழங்கப்பட்டு இருந்ததை அறிந்து பொருட்களை இவ்வாறு மீள அனுப்பிய விடயத்திற்காக தனது மன வருத்தத்தை அரசாங்க அதிபர், மேலதிக அரசாங்க அதிபர்,பிரதேச செயலாளர்களுக்கு தெரிவித்ததுடன் வாகனம் கொண்டு வந்து குறித்த பொருட்களை மீள கொண்டு சென்று உண்மையாக பாதிக்கப்பட்ட மடு பிரதேச மக்களுக்கு வழங்கியுள்ளதாகவும் மாவட்ட அரசாங்க அதிபர் சரத் ரவீந்திர மேலும் தெரிவித்தார்.

32. பொலித்தீன் பையொன்றில் 25 கிராம் வீதம் ஒன்றரைக் கிலோகிராம் தேயிலையை எத்தனை பொலித்தீன் பைகளில் அடைக்கலாம்?

.................................................................................

33. ஒரு பேனாவின் விலை 12.50 படி, ரவி ரூபா 200 ஐக் கொடுத்து 12 பேனாக்கள் வாங்கினான் எனின், கடைக்காரர் ரவிக்குக் கொடுத்த மிகுதிப் பணம் எவ்வளவு?

.................................................................................

34. ஒரு பாடசாலையில் கற்கும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 3000 ஆகும். அதில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை 2/3 பங்காகும். மிகுதி சிங்கள மாணவர்களாகும். பாடசாலையில் கற்கும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கையையும், சிங்கள மாணவர்களின் எண்ணிக்கையையும் தருக.

.................................................................................

35. குளிர்பானப் போத்தல் ஒன்றின் விலை ரூபா 18.50 எனின், 12 குளிர்பானப் போத்தல்களின் விலை யாது?

.................................................................................


36. 1463 ரூபாவை 7 பேருக்குச் சமமாகப் பங்கிடும்போது ஒருவர் பெறும் பணம் எவ்வளவு?

.................................................................................

37. விமல் 4 லீற்றர் 850 மில்லிலீற்றர் பெற்றோலையும், கார்த்திக் அதன் 1/2 பங்கு பெற்றோலையும் வாங்கினர். இருவரும் வாங்கிய பெற்றோலின் அளவு யாது?

.................................................................................

38. ஒரு பலகையில் இடைத்தூரம் 2 சென்ரிமீற்றர் ஆக இருக்குமாறு ஆணிகள் இறுக்கப்பட்டுள்ளன. ஆணிகளைச் சுற்றி றப்பர் பட்டியினால் அமைக்கப்படும் வடிவம் உருவில் காட்டப்பட்டுள்ளது. அவ்வடிவத்தின் பரப்பளவு யாது?



39. 915 புத்தகங்கள் மூன்று பெட்டிகளில் சம எண்ணிக்கையில் அடுக்கப்பட்டுள்ளன. ஒரு பெட்டியில் இருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது?

.................................................................................

40. "நான் புலமைப்பரிசில் பரீட்சையில் அகில இலங்கையில் முதலாம் இடத்தைப்பெற வேண்டுமெனப் படித்துக் கொண்டிருக்கிறேன். நேற்றுப் பாடசாலை விட்டு வீட்டிற்கு வந்தபோது எனக்கு ஒரு அதிசயம் காத்திருந்தது. எனது மாமா வெளிநாட்டிலிருந்து வந்திருந்தார்". தொடர்ந்து கதையை எழுவாய், பயனிலை திருத்தமாக அமைத்து நான்கு சொற்களுக்குக் குறையாத 6 வசனங்கள் எழுதுக.

1. .................................................................................
2. .................................................................................
3. .................................................................................
4. .................................................................................
5. .................................................................................
6. .................................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - I

1.30 மணி

# கல்வி முரசு

வெளியீடு 26



S.T.திலக்

**முதலில் உள்ள இரண்டு சொற்களுக்கு இடையிலான தொடர்பை விளக்கி அடுத்துவரும் சொல்லுடன் தொடர்புடைய சொல்லைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.**


01. விளக்கு - வெளிச்சம் | கல்வி - |

1. பணம் 2. அறிவு 3. புத்தகம் 4. தாவரம்

02. வீடு - அத்திவாரம் | மரம் - |

1. வேர் 2. கிளை 3. பூ 4. தாவரம்

**கீழே காணப்படும் உருவை அவதானித்து 3ஆம், 4ஆம் வினாக்களுக்கு விடை தருக.**




03. இங்கு காட்டப்பட்டுள்ள நீல மலர்கள் எத்தனை?

.................................................................................

04. அங்கு காட்டப்பட்டுள்ள வாசமலர்கள் எத்தனை?

.................................................................................

05. என்னிடம் நீலம், சிவப்பு, மஞ்சள் ஆகிய நிறமுடைய இனிப்புகள் இருந்தன. தம்பியிடம் கறுப்பு, மஞ்சள், பச்சை ஆகிய இனிப்புகள் இருந்தன. தங்கையிடம் வெள்ளை, மஞ்சள், ஊதா ஆகிய நிற இனிப்புகள் இருந்தன எனின் எந்த நிறமுடைய இனிப்பு மூவரிடமும் இருந்தது?

.................................................................................

**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

06. பெருந்தெருவில் பயணம் செய்யும் பேருந்தில் பெரும்பாலும் காணக்கூடியது.

1. சாரதி-பயணிகள்-பிச்சைக்காரர்கள் 2. நடத்துநர்-சாரதி-இசை 3. ஆசனங்கள்-சாரதி-நடத்துநர்

07. சமுத்திரத்தில் எப்பொழுதும் காணக்கூடியது.

1. கப்பல், பயணிகள், பிச்சைக்காரர்கள் 2. மீன், மீனவர், கரை 3. நீர், அலை, மீன்

08. பின்வரும் நிகழ்வுகள் ஒரு பிள்ளை காலையில் எழுந்து பாடசாலைக்குச் செல்வதற்குப் புறப்படும் வரை செய்து முடிக்கப்பட வேண்டிய கருமங்கள் பல உள்ளன. அவற்றுள் செய்து முடிக்கப்பட வேண்டிய கருமமும் இறுதியில் செய்ய வேண்டிய கருமமும் கீழே தரப்பட்டுள்ளன. விடுபட்ட இடங்களில் வரவேண்டிய சம்பவங்களைக் கொண்ட விடையின் கீழ்க் கீறிடுக.

A நித்திரைவிட்டெழுதல் B.............................. C..............................

D.............................. E வீட்டிலிருந்து புறப்படுதல்

| 1. | 2. | 3. |
|---|---|---|
| A உடை அணிதல் | A உணவு உண்ணல் | A முகம் கழுவுதல் |
| B முகம் கழுவுதல் | B முகம் கழுவுதல் | B உடை அணிதல் |
| C உணவு உண்ணல் | C உடை அணிதல் | C உணவு உண்ணல் |

**கீழே ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் சொற்களின் எழுத்துக் கோலத்தை விளங்கி வெற்றுக் கூண்டுக்குப் பொருத்தமான சொல்லைத் தந்துள்ள நான்கு விடைகளிலிருந்தும் தெரிந்து அதன் கீழ்க் கீறிடுக.**

09. | வெண்பா | - | பாம்பு | - | | - | யன்னல் |

1. புதிர் 2. புதிய 3. புடவை 4. யானை

10. | மரல | - | ரமல | - | | - | மரல |

1. மரல 2. ரமல 3. லமர 4. லரம

**சரியான தொடர்பில் அமைந்த விடையின் கீழ் கீறிடுக.**

11. 25, 50, 60, 75 ஆண்டுகளின் பூர்த்தியின்போது கொண்டாடப்படும் விழாக்கள் முறையே
   1. பொன்விழா, வெள்ளிவிழா, பவளவிழா, அமுதவிழா
   2. வெள்ளிவிழா, பொன்விழா, மணிவிழா, பவளவிழா
   3. வெள்ளிவிழா, மணிவிழா, பொன்விழா, வைரவிழா

12. ஐம்புலன்களைக் குறிப்பது.
   1. மெய், வாய், கண், மூக்கு, செவி
   2. நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம்
   3. ஒளி, ஊறு, சுவை, ஓசை, நாற்றம்

**பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் கருத்தற்றவை. இவை கருத்தற்றவை என விளக்குக.**

13. எனது அண்ணா பிறந்தபோது அம்மா எனக்குப் புதிய சட்டை ஒன்று வாங்கித் தந்ததாக அப்பா என்னிடம் கூறினார்.

14. இன்ஷிறா முக்கோணத்தின் நான்கு முகங்களுக்கும் நிறம் தீட்டியதாகக் கூறினாள்.

**சரியான விடையை இனங்கண்டு அதன் கீழ்க் கோடிடுக.**

மஸ்றுபாவை விட குமைறா 10 வருடங்கள் இளையவள். நிம்றானை விட அப்துல்லா 5 வருடங்கள் மூத்தவர். குமைறாவும், அப்துல்லாவும் ஒரே வயதினர். குமைறாவின் வயது 15 ஆகும்.

15. இவர்களில் மிகவும் இளையவர்
1. மஸ்றுபா 2. குமைறா 3. நிம்றான் 4. அப்துல்லா

16. மஸ்றுபா, நிம்றான் என்போருக்கு இடையே உள்ள வயது வித்தியாசம்.
1. 15 வருடங்கள் 2. 12 வருடங்கள் 3. 5 வருடங்கள் 4. 20 வருடங்கள்

**சரியான விடையைத் தெரிவு செய்க.**

17. நான் எனது தங்கையிடம் 8 நாணயக் குற்றிகள் கொடுத்துவிட்டு ஒரு காசுத்தாளை வாங்கிக் கொண்டேன் எனின், நான் கொடுத்த நாணயக் குற்றிகள்.
   1. 1/= நாணயம் 2/=, 2/= நாணயம் 3/=, 5/= நாணயம் 3/=
   2. 5/= நாணயம் 3/=, 2/= நாணயம் 2/=, 1/= நாணயம் 2/=
   3. 2/= நாணயம் 4/=, 5/= நாணயம் 2/=, 1/= நாணயம் 2/=

18. இரு வாகனங்கள் ஒரே நேரத்தில் A என்ற இடத்திலிருந்து புறப்பட்டு ஒன்றுக்கொன்று எதிர்த் திசையில் சென்றன. ஒரு வாகனம் மணிக்கு 40 கிலோமீற்றர் மாறா வேகத்தில் சென்றது. மற்றைய வாகனம் மணிக்கு 30 கிலோமீற்றர் வேகத்தில் சென்றது. 30 நிமிடத்தின் பின் இரு வாகனத்திற்கும் இடையிலான தூரம்.

1. 70 கிலோமீற்றர் 2. 10 கிலோமீற்றர் 3. 35 கிலோமீற்றர்

**தரப்பட்டுள்ள தரவுகளைக் கொண்டு 20, 21 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

19. அப்பாவின் வயதைவிட அம்மாவின் வயது 8 வருடங்கள் குறைவாகும். எனது வயதைவிட அப்பாவின் வயது 30 வருடங்கள் அதிகமாகும். தம்பி என்னைவிட நான்கு வருடங்கள் இளையவன். தம்பியின் வயது 8 வருடங்கள் எனின்

20. அம்மாவின் வயது என்ன?
1. 8 வருடங்கள் 2. 12 வருடங்கள் 3. 34 வருடங்கள் 4. 42 வருடங்கள்

21. எனக்கும் அம்மாவிற்கும் இடையில் எத்தனை வருட இடைவெளி காணப்படுகின்றது?
1. 8 வருடங்கள் 2. 30 வருடங்கள் 3. 26 வருடங்கள் 4. 22 வருடங்கள்

22. இரு எண்களின் கூட்டுத்தொகை 46. அவ்விரு எண்களுக்கும் இடையில் வித்தியாசம் 16 எனின், அவ்விரு எண்களும் எவை?
1. 20, 26, 2. 15, 31 3. 16, 30 4. 16, 46

**ராமு ஓர் ஆண் பிள்ளை, ராமுவின் அக்காவிற்கு ஆண் சகோதரர்கள் இருவரும், பெண் சகோதரிகள் இருவரும் உள்ளனர்.**

23. ராமுவிற்கு இருக்கும் ஆண் சகோதரர்கள் எத்தனை பேர்?
1. 3 2. 2 3. 1

24. ராமுவிற்கு இருக்கும் பெண் சகோதரிகள் எத்தனை பேர்?
1. 3 2. 2 3. 1

25. 20 மீற்றர் நீளமும் 10 மீற்றர் உயரமும் உடைய சுவருக்கு 2 லீற்றர் தீந்தை தேவையெனின், 40 மீற்றர் நீளமும் 5 மீற்றர் உயரமும் உடைய சுவருக்குத் தேவையான தீந்தை எவ்வளவு?
1. 3 லீற்றர் 2. 2 லீற்றர் 3. 4 லீற்றர்

**பின்வரும் விபரம் ஒரு தோட்டத்தில் உள்ள மரங்களைப் பற்றியது.**

- பழம் தரும் மரங்கள் 10
- பழம் தரும் மரங்கள் அல்லாதன 20
- மாமரங்கள் 4
- தென்னைகள் 4

26. இவ்விபரங்களுக்கு ஏற்பத் தோட்டத்தில் உள்ள மரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?
1. 30 மரங்கள் 2. 38 மரங்கள் 3. 34 மரங்கள்

27. 2007 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் 1, 8, 15, 22, 29 ஆகியன சனிக்கிழமைகளின் இந்த எண்களின் கூட்டுத்தொகை 75 ஆகும். இம்மாதத்தில் ஞாயிற்றுக்கிழமைகள் வரும் திகதிகளின் கூட்டுத்தொகை யாது?
1. 70 2. 71 3. 80

**28 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்குரிய விடைகளைத் தெரிவு செய்து கோடிடுக.**


28. நெல் - நாற்று கத்தரி - ?
1. மரம் 2. கன்று 3. செடி 4. வடலி

29. தென்னை - குரும்பை பனை - ?
1. வடு 2. முசு 3. கச்சல் 4. நுங்கு

30. ஓவியன் - சித்திரம் வரைதல் சிற்பி - ?
   1. கவி எழுதுதல்
   2. மட்பாண்டம் செய்தல்
   3. சிலை வடித்தல்
   4. தளபாடம் செய்தல்

31.

A



B



இவ்விரு உருக்களுள்,
1. A மாத்திரம் சரியானது
2. B மாத்திரம் சரியானது
3. A,B இரண்டும் சரியானது
4. A,B இரண்டும் பிழையானது

# பாலியல் குற்றம் புரிந்தவர்களுக்கு ஆயுள் தண்டனை வழங்க ஆலோசனை

(புதுடில்லி)

கற்பழிப்பு குற்றவாளிகளுக்கு கடுமையான ஆயுள் தண்டனை வழங்க வேண்டும் எனவும், அரிதிலும் அரிதான வழக்குகளில் மரண தண்டனை வழங்கலாம் எனவும் முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி வர்மா தலைமையிலான குழுவிடம் காங்கிரஸ் கட்சி பரிந்துரை செய்துள்ளது.

டில்லியில் ஓடும் பஸ்சில் மருத்துவ கல்லூரி மாணவி, 6 பேர் கும்பலால் கற்பழித்து கொலை செய்யப்பட்டார். இவர்களில் ஒருவர் சிறுவன். இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மாணவி கற்பழிப்பை தொடர்ந்து, டில்லியில் மாணவர்கள் போராட்டம் வெடித்தது. இதனை தொடர்ந்து பாலியல் குற்றங்களுக்கு எதிராக கடுமையான சட்டம் கொண்டு வர வேண்டும் என நாடு முழுவதும் கருத்து எழுந்தது.

இந்நிலையில், காங்கிரஸ் கட்சி சார்பில், வர்மா குழுவிடம் அளிக்க வேண்டிய பரிந்துரைகள் குறித்து முடிவு செய்ய நேற்று காங்கிரஸ் கட்சியின் ஆலோசனை கூட்டம் நடந்தது. இந்த கூட்டத்தில் மத்திய உள்துறை அமைச்சர் சுஷில் குமார் ஷண்டே, மத்திய நிதியமைச்சர் சிதம்பரம், பாதுகாப்புத்துறை அமைச்சர் அந்தோணி மற்றும் டில்லி முதல்வர் ஷீலா தீகஷித் கலந்து கொண்டு, வர்மா குழுவுக்கு அளிக்க வேண்டிய பரிந்துரை குறித்து இறுதி முடிவெடுத்தனர்.

இதன் பின்னர் காங்கிரஸ் கட்சி சார்பில் வர்மா குழுவிடம் அளிக்கப்பட்ட பரிந்துரையில், கற்பழிப்பு குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனை வழங்க வேண்டும். குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் ஆயுள் தண்டனை, தற்போது நடைமுறையில் உள்ள ஆயுள் தண்டனையை விட கடுமையானதாக இருக்க வேண்டும். அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டும் தூக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் என அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக டில்லி தகவல்கள் தெரிவிக்கின்றன.



மேற்கு வங்க மாநிலம், கொல்கத்தாவில் தொடங்கிய 100 ஆவது இந்திய அறிவியல் மாநாட்டில், சிறப்பு தபால் தலையை, ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வெளியிட, பிரதமர் மன்மோகன் சிங் பெற்றுக் கொண்டார்.

## அத்வானியின் ஆலோசனை

அறிஞர்கள், மடாதிபதிகளின் போதனைகளை பள்ளி வரலாற்றுப் பாடத்தில் சேர்க்க வேண்டும் என பா.ஜ தலைவர் அத்வானி தனது இணையதள பக்கத்தில் கூறியுள்ளார். புத்தாண்டுக்கு முதல்நாள் கேரளாவில் உள்ள சிவகிரி மடத்தில் நடந்த நிகழ்ச்சியில் பா.ஜ தலைவர் அத்வானி, கேரள முதல்வர் உம்மன் சாண்டி, மத்திய அமைச்சர் வயலார் ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சம்பவம் குறித்து தனது இணையதள பக்கத்தில் தற்போது கருத்து தெரிவித்துள்ள அத்வானி, இந்திய பள்ளிகளின் வரலாற்று பாடத்தில் அரசர்கள் அவர்களது வம்சங்கள், போர், சாதனை போன்றவை மட்டுமே இடம் பெற்றுள்ளது துரதிர்ஷ்டம். நமது அறிஞர்கள், முனிவர்கள், மடாதிபதிகள் போதனைகள் குழந்தைகளை சென்றடைவதில்லை. சுவாமி தயானந்த சரஸ்வதி, ராமகிருஷ்ண பரமஹம்சர், சுவாமி விவேகானந்தா ஆகியோரது போதனைகளை பாடத்திட்டத்தில் சேர்த்தால் பள்ளிக் கல்வியின் தரம் உயரும். மாணவர்களின் அறிவுத் திறன் மேம்படும். நான் எந்த மதத்தையும் மனதில் வைத்து இதை கூறவில்லை. பள்ளி மாணவர்களின் அறநெறி, நல்லொழுக்கம் மேம்பட வேண்டும் என்றுதான் நான் நினைக்கிறேன். இவ்வாறு அத்வானி கூறினார்.

## பாக். இராணுவம் அத்துமீறல்

காஷ்மீர் மாநிலம், பூஞ்ச் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் உள்ள இந்திய இராணுவ நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவம் அத்துமீறி தாக்குதலில் ஈடுபட்டது.

இருநாடுகளுக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில உள்ள நிலையில், அதை பாகிஸ்தான் தொடர்ந்து மீறி வருகிறது. கடந்த வெள்ளிக்கிழமை இரவு பூஞ்ச் பகுதியில் உள்ள நாங் கிடாக்ரியில் இந்திய இராணுவ நிலைகள் மீது பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியது. பீரங்கி குண்டுகளைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், எனினும், இதில் யாருக்கும் காயமேற்படவில்லை என்றும் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர்தெரிவித்தார்.

## அரசுக்கு யார் மீது அக்கறை

(சென்னை)

மக்கள் மீது தமிழக அரசு அக்கறை காட்ட வேண்டும் என தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் கூறியுள்ளார். இது குறித்து தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது: விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாலும், வரலாறு காணாத மின்வெட்டினால் பல குடும்பங்கள் வேலையிழந்துள்ளதாலும், பாலியல் தொல்லையால் பெண்கள் அவதிப்படுவதாலும், ஜாதி கலவரம் காரணமாகவும், இந்த பொங்கல் பண்டிகையை தே.மு.தி.க.கறுப்பு பொங்கல் பண்டிகையாக கொண்டாடும். 40 தொகுதிகளை கைப்பற்ற முனைப்பு காட்டும் அ.தி.மு.க.அரசு மக் கள் மீதும் அக்கறை காட்ட வேண்டும்.

வரும் 11ஆம் திகதி தஞ்சாவூரில் நடக்கும் விழா ஒன்றில் தே.மு.தி.க.சார்பில் விவசாயிகளுக்கு பச்சரிசி, மண்டவெல்லம், திராட்சை, முந்திரி, பாசிபருப்பு, ஏலக்காய், கரும்பு, மஞ்சள் மற்றும் நெய் ஆகியவை வழங்கப்படும்.

தற்கொலை செய்து கொண்ட 10 விவசாயிகளின் குடும்பங்களுக்கு தலா ரூ. 25 ஆயிரம் தே.மு.தி.க.சார்பில் வழங்கப்படும் என கூறினார்.

வாழ்க வளமுடன்

(5ஆம் பக்க தொடர்ச்சி...)

**இங்கு மாற்றம்...**

வடக்குக்கு குறிப்பாக உள்ள பிரச்சினைகளின் தீர்வுகள் வேண்டி கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன் ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. மக்களின் குறிப்பாக இளைஞர்களின் பேரினவாத உணர்வு குறைந்துள்ளது.

ஆட்சி செய்யும் அரசு இனப் பிரச்சினைக்கான தீர்வை வைக்கும் போது எதிர்க்கட்சிகள் குழப்பும் நிலையே இவ்வளவு காலமும் காணப்பட்டது. இன்று எதிர்க்கட்சியையும் முந்திக் கொண்டு அரசின் அங்கமான பேரினவாத சக்திகள் தடை போடுகின்றன. இடதுசாரிக் கட்சிகளினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் உள்ள சில நல்லெண்ணம் கொண்டவர்களினதும் குரல்களும் ஒலிக்காமல் இல்லை பேரினவாத சக்திகள் அளவில் சிறியதாக இருந்தாலும் நிறுவனமயப்பட்டனவாக உள்ளன.

பௌதீக அபிவிருத்திப் பொறிமுறையினால் மட்டும் மானிடர்களின் உள்ளங்களை வெல்ல முடியாது. சமூக அரசியல் கலாசார விடயங்களிலும் கவனம் செலுத்தப்படல் வேண்டும். அரசினுடைய அசமந்தப் போக்கு அமைதியைக் குழப்பி விடுமோ என்ற பயம் அமைதி விரும்புவோரின் மனங்களிலே தோன்றத் தொடங்கிவிட்டது. அண்மையில் பல்கலைக்கழகச் சூழலிலே நடைபெற்ற சம்பவங்கள் நல்ல அறிகுறி அல்ல. இதற்கு வெளிநாட்டில் உள்ள உறவுகளை மட்டும் குறை கூற முடியாது. பௌதீக அபிருத்தியோடு சமூக அரசியல் கட்டமைப்புக்களும் ஜனநாயகமயப் படுத்தப்படல் வேண்டும். இதில் அலட்சியம் காட்டும் அரசும் அசம்பாவிதங்களுக்கு பொறுப்புக் கூறத்தான் வேண்டும்.

13ஆவது திருத்தம்: இனப் பிரச்சினை வரலாற்றிலே இன்று நிதர்சனமாக உள்ள ஆவணம் இது மட்டும் தான். 40 வருடத்தில் ஜனநாயக உரிமை வேண்டி இரு தடவைகள் ஒப்பந்தங்கள் எழுதப்பட்டு கிழித்தெறியப்பட்ட பின்னர் தான் இந்த ஒப்பந்தம் எழுதப்பட்டது. அந்த ஒப்பந்தங்களினால் வர இருந்த உரிமைகள் தான் 13ஆம் திருத்தத்தில் குறிப்பிடப்பட்டன.

வடக்கிலும் தெற்கிலும் உள்ள இனவாத சக்திகள் ஓரங்கட்டப்படவேண்டிய தருணம் இது. இன்று அரசிலும் வெளியேயும் உள்ள ஜனநாயக சக்திகள் இனபேதம் இன்றி ஒன்றிணைந்து செயற்பட வேண்டிய தேவை ஒன்று உண்டு. எஞ்சியுள்ள 13ஆவது திருத்தத்தை என்றாலும் இனியும் வெட்டாமல் அமுல்படுத்த நடவடிக்கை எடுப்பதன் ஊடாகத்தான் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வு ஏற்படுத்தப்படலாம். இரு பக்கமும் உள்ள இனவாதிகள் ஓரங்கட்டப்பட்டால் எதிர்காலத்தில் ஜனநாயக சக்திகளின் புரிந்துணர்வுகளுடன் தேவையான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட முடியாது என்பதல்ல. தீர்வு முயற்சியின் முதற்படி வடமாகாண சபைத் தேர்தலாய் இருக்கலாம். இதில் ஜனநாயக சக்திகள் ஐக்கியப்பட்டு செயற்பட வேண்டிய வரலாற்றுத் தேவை உண்டு.

## இந்தியச் செய்திகள்

(12ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**எறும்புகளின் கதறல்...**

இந்த இரு வேறு மனப்பகுதிகளின் பிரதிபலிப்புதான் பயணம் முழுவதும் கணவன் - மனைவி இருவரின் பார்வைகளில் மாறுபடும் காட்சிகளாகவும், விவாதங்களில் எடுக்கும் நிலைப்பாடுகளுமாக காட்டப்படுகிறது. மேம்போக்கான தருக்கம் தன்னால் தொடமுடியாத ஆழங்களில் நம்பிக்கையின் தோள் மேல் சாய்ந்துகொள்கிறது.

முதல் இரயில் பயணத்தில் சந்திக்கும் பத்திரிகையாளனின் கிண்டலான பேச்சும், இரயிலைக் கண்ணால் நிறுத்தும் சாமியாரின் கதை தரும் ஏமாற்றமும், மெய்ஞானத் தேடலின் பாதையில் முதலில் தடையாகும் அவநம்பிக்கைகளையும், ஏமாற்றங்களால் உண்டாகும் மனத்தடுமாற்றத்தையும் உணர்த்துகிறது. அவர்கள் காரில் சுலபமாகச் சென்று பரிபூரண மனிதரைச் சந்தித்துவிடலாம் என்று நினைப்பது மெய்த்தேடலில் குறுக்கு வழியை முயல்வது. பின்னர் நடந்தே போக வேண்டி வருவது உண்மையை நோக்கிய தேடலின் பயணத்தை அவரவர்களே சுயமாக, படிப்படியாகச் செய்தாக வேண்டுமென்பதைக் குறிக்கும்.

பரிபூரண ஞானம் ஆடம்பரமில்லாமல் தன்னந்தனியாக இருக்கிறது. ஒரே உண்மையை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கண்டெடுக்கிறார்கள், வேறு வேறு பெயரிடுகிறார்கள் -மாட்டுக்காரன் என்றும், பரிபூரண மனிதர் என்றும், பைத்தியம் என்றும், ஞானியென்றும் பலவாறாக. ஆனால் பரிபூரண மனிதரின் ஞானம் இதுவே - 'ஒவ்வொரு மனிதரும் கடவுள் தான்.'

2006இல் வெளியான இந்தப் படத்தை இயக்கியவர் ஈரானின் மிக முக்கியமான இயக்குனர்களில் ஒருவரான மோஹ்சென் மக்மல்பா:.ப் (Mohsen Makhmalbaf). உலகத் திரைப்பட ரசிகர்களுக்கு, குறிப்பாக ஈரானியப் படங்களை விரும்பிப் பார்க்கும் அனைவரும் அறிந்திருக்கக் கூடிய இயக்குனர் மோஹ்சென். 'தி சைக்கிளிஸ்ட்' இவரது படம்.

மோஹ்சென் மக்மல்பா:.ப் இளமையில் ஈரானின் அரசரான ஷாவின் ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட இஸ்லாமிய புரட்சிக் குழுவில் சேர்ந்து, கலகம், வன்முறை செய்து ஐந்து வருடங்கள் சிறையில் இருந்தவர். அப்போது நிறைய வாசிக்கவும், யோசிக்கவும் தொடங்கினார். மகாத்மா காந்தியின் ஆளுமை இவரில் ஆழ்ந்த தாக்கத்தை உருவாக்கியது. அரசியலிலிருந்தும், வன்முறையிலிருந்தும் விலகி கலை, இலக்கியத்தின் பக்கம் வந்தார். ஒரு பேட்டியில் 'சே குவேராவில் இருந்து காந்திக்கு வந்தேன்' என்கிறார். ஆரம்ப காலங்களில் எழுத்தாளராக (27 நூல்களை எழுதியுள்ளார்) இருந்தவர் பின்னர் திரைப்படத்தை தனக்கான போராட்ட ஊடகமாகத் தேர்ந்தெடுத்தார்.

தனது சுயமான திரைக்கதை மற்றும் காட்சிப்படுத்தும் பாணியை உருவாக்கிக் கொண்டார்.

இந்தப் படம் மற்றும் Sex and Philosophy என்னும் இன்னொரு படம் எடுத்ததற்காக ஈரானிய அரசின் ரகசிய பொலிஸ் பிரிவு இவரது படப்பிடிப்புத் தளத்தில் வெடிகுண்டு வைத்து தாக்கியது. அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினார். 2009இல் இருந்து ஈரானை விட்டு வெளியேறி பிரான்ஸ் நாட்டில் பாரிஸில் வசித்துவருகிறார். இவரது மனைவி, இரண்டு மகள்கள், ஒரு மகன் என குடும்பம் முழுவதும் சினிமா இயக்குனர்கள். இவர்கள் குடும்பம் மட்டும் Cannes, வெனிஸ், கனடா உட்பட பல முக்கியமான சர்வதேச திரைப்பட விழாக்களில் இது வரை நூறுக்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றிருக்கிறார்கள். மத அடிப்படைவாதத்தில் சிக்காத பாரசீகனாக மோஹ் சென் மக்மல்பா:.ப் படைத்திருக்கும் பெருமைமிகு திரைப்படம் இது.

# கடாபியின் மகன் மீது வழக்கு

(கெய்ரோ)

லிபியாவில் சர்வாதிகார ஆட்சி செய்த மம்மர் கடாபியின் மகன் சைப் அல்-இஸ்லாம் (வயது - 40) மீதான விசாரணை அடுத்த மாதம் தொடங்கவுள்ளது.



சைப் அல்-இஸ்லாம் கடாபி, முன்னாள் பிரதமர் பக்தாதி அல்-மஹ்மோடி, உளவுத்துறை முன்னாள் தலைவர் அப்துல்லா அல்-செனூசி ஆகியோர் மீதான விசாரணை பெப்ரவரி மாதம் தொடங்கி அந்த மாதமே முடிக்கப்படும் என்று நீதித்துறை அமைச்சர் சலா மாராக்னி தெரிவித்தார். கடாபிக்கு அடுத்து அதிபர் பதவிக்கு வர வாய்ப்பு உள்ளவர் என கருதப்பட்ட சைப், 2011 ஆம் ஆண்டில் கடாபிக்கு எதிராக நடத்தப்பட்ட புரட்சியின்போது தந்தையுடன் இணைந்து புரட்சியை ஒடுக்க கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவ கொள்கையில் மறுசீரமைப்பு

## பாகிஸ்தான் அரசு அதிரடி முடிவு

தீவிரவாதிகளின் தாக்குதல்களை சமாளிக்க பாகிஸ்தான் இராணுவக் கொள்கையில் மாற்றம் கொண்டு வர வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்று பிரதமர் ராஜா பர்வேஸ் அஷரப் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் பிரதமர் ராஜா பர்வேஸ் அஷரப் தேசிய இராணுவ பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது,

பாகிஸ்தானில் சமீபத்தில் தலிபான் தீவிரவாதிகளின் தாக்குதல் அதிகரித்து வருகிறது. அங்குள்ள வடக்கு வசீரிஸ்தான் பகுதியை புகலிடமாக கொண்டு பல்வேறு தீவிரவாத அமைப்புகள் செயல்படுகின்றன. இந்த தீவிரவாதிகளை ஒடுக்க அமெரிக்கா உளவு விமானம் மூலம் குண்டு வீசி வருகிறது. பாகிஸ்தான் இராணுவத்தினரால் இந்த தீவிரவாதிகளை கட்டுப்படுத்த முடியவில்லை. கடந்த சில நாட்களுக்கு முன்பு 23 இராணுவ வீரர்களை தலிபான்கள் கடத்திச் சென்று இவர்களில் 21 பேரை சுட்டுக்கொன்றனர். இந்நிலையில் தீவிரவாதிகள், உள்நாட்டு பயங்கரவாதிகளால் நமது நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

எதிரிகள் முகவரி மற்றும் முகத்தோற்றம் இன்றி உலா வந்து தங்கள் திட்டத்தை செயற்படுத்த முனைகிறார்கள். எனவே இவர்களை முறியடிக்க நமது இராணுவம், சட்ட அமுலாக்கத் துறைகள், தீவிரவாதத்தை எதிர்க்கும் நல்லெண்ணம் கொண்ட பொதுமக்கள் ஆகியோர் இணைந்து தியாகம் செய்ய வேண்டும்.

இவர்களை (தீவிரவாதிகள்) சமாளிக்க ஒருங்கிணைந்த செயல்திட்டத்தை உருவாக்க வேண்டும். தேசிய பாதுகாப்பு அமைப்புகள் தங்களின் புலனாய்வு திறனை அதிகரித்து வெற்றிக்கு வழிவகுக்க வேண்டும். இதனால் இராணுவ வீரர்களுக்கு புத்துணர்வு உண்டாக்க, கொள்கையில் மாற்றம் கொண்டு வர வேண்டியது மிகவும் அவசியமாகிறது. இதற்கு தேவை



யான அனைத்து நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் முழு ஒத்துழைப்பு கொடுக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

இதற்கிடையில் கனடா நாட்டில் வசித்த தெஹ்ரிக் மின்ஹாஜ்உல்குரான் என்ற அமைப்பின் தலைவர் காட்ரி என்பவர் பாகிஸ்தானுக்கு சமீபத்தில் திரும்பி வந்துள்ளார். அவர் வருகிற 14 ஆம்திகதி லாகூர் இஸ்லாமாபாத் வரை நீண்ட பேரணியை நடத்தப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளார். இதனால் பாதுகாப்பு பிரச்சினை ஏற்படும் என அஞ்சப்படுகிறது. இதனை அடுத்து பிரதமர் அஷரப் கூட்டணி கட்சிகளின் தலைவர்களுடன் அவசர ஆலோசனை நடத்தியுள்ளார்.

# விபத்தில் சிக்கியது விமானம் பிரான்சில் 5 பேர் மரணம்



பிரான்ஸ் நாட்டில் தனியார் சிறு விமான விபத்துக்குள்ளானதில் 5 பேர் பலியானதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரான்ஸ் நாட்டின் தென்கிழக்கு பகுதியில் உள்ள செயின்ட் பியர்-டி-பிரஸ்ஸியக்ஸ் கிராமத்தில் உள்ள கிரனொபிள் விமான நிலையத்தில் நேற்று முன்தினம் தனியாரின் சிறு விமானம் ஒன்று 5 பேருடன் புறப்பட்டது.

புறப்பட்ட சிறிது நேரத்திலேயே விமானம் செயல் இழந்து விட்டதால் விமானம் விழுந்து நொறுங்கியதில் 5 பேரும் பலி யானார்கள். இறந்தவர்கள் குறித்து உடனடியாக தகவல் கிடைக்க வில்லை, உள்ளூர் பொலிஸார் இச்சம்பவம் குறித்து விசாரணை செய்து வருகின்றனர்.

# பாகிஸ்தான் மாணவிக்கு அமெரிக்காவின் உயர் விருது

பாகிஸ்தானில் கல்வி உரிமைக்காகப் போராடிய மலாலாவுக்கு அமெரிக்காவின் உயரிய விருதை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாகிஸ்தானில் பெண் கல்வி உரிமைக்காகப் போராடிய சிறுமி மலாலா யூசுஃப்சாய், தலிபான்களால் சுடப்பட்டு, பிரிட்டனில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். சமீபத்தில் அவர் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதைத் தொடர்ந்து பிரிட்டனில் அவருக்கு ஒதுக்கப்பட்ட வீட்டில் தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில், மலாலாவின் துணிச்சலையும், சேவையையும் பாராட்டி அமெரிக்க நாடாளுமன்றத்தின் தங்கப் பதக்கத்தை அளிக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

இது தொடர்பான மசோதாவுக்கான தீர்மானத்தை நாடாளுமன்ற உறுப்பினர் ஷீலா ஜாக்ஸன் லீ கொண்டு வந்தார். அவர் கூறுகையில், "கல்வி, நீதி, சமத்துவம் ஆகியவற்றுக்காகப் போராடிய மலாலாவுக்கு இவ்விருதை வழங்க வேண்டும். வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு தேசத்தில் மலாலா நம்பிக்கை நட்சத்திரமாக உள்ளார்" என்றார்.

இதே போன்றதொரு தீர்மா



னத்தை கடந்த ஆண்டு நவம்பரில் 13 ஆம் திகதி ஷீலா ஜாக்ஸன் லீ கொண்டு வந்தார். ஆனால், அது நிறைவேற்றப்படவில்லை. இந்நிலையில், அதே மசோதாவை மீண்டும் இப்போது கொண்டு வந்துள்ளார்.

# அமெரிக்க எம்.பிக்கு பகவத்கீதை தாரக மந்திரம்

அமெரிக்காவின் ஹவாய் பகுதியை சேர்ந்த துளசி கபார்டு என்பவர் பகவத் கீதையை படித்து எம்.பி.யாக பதவி ஏற்றுக்கொண்டார்.

அமெரிக்காவில் கடந்த நவம்பரில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் ஹவாய் பகுதியிலிருந்து ஜனநாயக கட்சி சார்பில் துளசி கபார்டு (வயது 31), பிரதிநிதிகள் சபைக்கு தெரிவு செய்யப்பட்டார்.

புதிதாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் கடந்த வெள்ளிக்கிழமை எம்.பிக்களாக பதவி ஏற்றனர்.

அமெரிக்க பிரதிநிதிகள் சபை சபாநாயகர், ஜான் போனர், புதிய உறுப்பினர்களுக்கு பதவி பிரமாணம் செய்து வைத்தார்.

அப்போது துளசி கபார்டு, பகவத் கீதையை படித்து உறுதி மொழி ஏற்றார். இது குறித்து துளசி கூறியதாவது:

என் தாய் இந்து, தந்தை கத்தோலிக்க கிறிஸ்தவர்.




பகவத் கீதை மன அமைதி, வாழ்க்கையின் இக்கட்டான தருணங்களில் நமக்கு வழிகாட்டுவது.

இளம் பருவத்திலேயே பகவத் கீதை எனக்கு கற்பிக்கப்பட்டது. இதனால் நான் கீதையை படித்து பதவியேற்றுக்கொண்டேன் என்றார்.

உலகச் செய்திகள்

# பூனையின் சாதனை: சிறைக் காவலர்கள் அதிர்ச்சி



(ரியோ டி ஜனெய்ரோ)

புழல், கடலூர் போன்ற இடங்களில் உள்ள சிறைச்சாலைகளில் மதில் சுவரின் வெளியே இருந்து கஞ்சாப் பொட்டலம், செல்போன் போன்றவற்றை சிறையினுள் எறிய முற்பட்ட சிலர் பிடிபட்ட செய்தியை அறிந்துள்ளோம்.

ஆனால், பிரேசில் நாட்டில் உள்ள இரண்டாவது பெரிய நகரமான ரியோ டி ஜனெய்ரோவில் உள்ள அலகோவாஸ் சிறைச்சாலைக்குள் நடைபெற்ற நூதனமான கடத்தல், சிறைக் காவலர்களை திகைப்பில் ஆழ்த்தியுள்ளது.

ஆங்கில புத்தாண்டு தினமான கடந்த 1 ஆம் திகதி அலகோவாஸ் சிறைச்சாலையின் பிரதான வாயிலில் சிறைக் காவலர்கள் காவல் காத்துக் கொண்டிருந்தனர்.

அப்போது, உடல் முழுவதும் பேண்டேஜ் துணியால் சுற்றப்பட்ட ஒரு பூனை சிறையினுள் நுழைய முற்பட்டது. சந்தேகப்பட்ட காவலர்கள் அந்தப் பூனையை பிடித்து, எப்படி காயம் ஏற்பட்டது? என்று சோதித்தனர்.

அந்த சோதனையில், பூனையின் உடலுடன் கட்டிவைக்கப்பட்டிருந்த துளைப்போடும் டிரில் பிட்டுகள், ஒரு செல்போன் சார்ஜர், இயர் போன், மெமரி கார்ட், பற்றரிகள் ஆகியவற்றை கண்டுபிடித்த காவலர்கள் உறைந்துப் போயினர்.

பூனையின் மூலம் இந்த பொருட்கள் யாருக்காக கடத்தப்பட்டது என்பது புரியாமல், அவர்கள் தவித்தனர். மனிதர்கள் கடத்தினால் 2 தட்டு தட்டி உண்மையை வரவழைத்து விடலாம். ஆனால், பூனையை... பிழிந்து காயப்போட்டாலும், அது வாக்குமூலம் அளிக்கப் போவதில்லை என உணர்ந்துக் கொண்ட காவலர்கள், சிறையினுள் உள்ள 263 கைதிகளையும் இந்த கடத்தலில் குற்றவாளிகளாக சேர்க்க முடிவு செய்துள்ளனர்.

# அமெரிக்க படைகள் வெளியேற வேண்டும் இல்லையேல் கடும் போர் வெடிக்கும்


## தலிபான்கள் எச்சரிக்கை

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான நேட்டோ படைகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றன. 2014 ஆம் ஆண்டு இறுதியில் அமெரிக்கப் படைகள் முற்றிலும் வாபஸ் பெறப்படும் என்று ஏற்கனவே அமெரிக்கா அறிவித்திருந்தது. இந்நிலையில், ஆப்கானில் அல்கெய்தா தீவிரவாதிகளின் தாக்குதல்கள் தொடர்வதால், 2014 ஆம் ஆண்டுக்கு பின்பும் 9000 வீரர்களை தொடர்ந்து பாதுகாப்பில் ஈடுபடுத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இது தொடர்பாக, அமெரிக்க அதிபர் ஒபாமாவும், ஆப்கான் அதிபர் கர்சாயும் அடுத்த வாரம் பேச்சு நடத்தவுள்ளனர். இதற்கிடையே, காபூலில் தலிபான் தீவிரவாதிகள் நேற்று முன்தினம் ஒரு அறிக்கை வெளியிட்டனர். அதில், ஆப்கானில் அமெரிக்க படைகளின் பாதுகாப்பு தொடர்ந்து நீடித்தால், பெரிய அளவில் போர் தொடுப்போம். இதனால், பெரும் அழிவுகள் ஏற்படும். உயிரிழப்புஅதிகமாகும். அதற்கு அமெரிக்காவே பொறுப்பு என்று மிரட்டல் விடுத்துள்ளனர்.

# விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் விரிவாக ஆராய்ந்து தீர்க்கப்படவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் உதயன்



யாழ். மாவட்டத்தில் விவசாயிகள் விவசாயச் செய்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்து விரைவில் இவற்றைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் உச்ச பயனைத் தரக்கூடிய விவசாயச் செய்கை முறைகளையும் நடை முறைப்படுத்த வேண்டும் என ஈ.பி.டி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினரும், தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) வேண்டுகோள் விடுத்தார்.

யாழ். மாவட்ட விவசாயிகளின் சிறந்த விவசாய செய்கைகளைப் பார்வையிடும் நோக்கில் கமநலசேவைகள், வனஜீவராசிகள் பிரதி அமைச்சர் எம்.எஸ். சந்திரசேன நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டு, விவசாயிகளின் வயல்களைச் சேதப்படுத்தும் கட்டாகாலி கால் நடைகளைக் கட்டுப்படுத்துவதற்காக முட்கம்பிகளை வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி கமநல சேவைகள் திணைக்களத்தில் கமநல உதவிப் பணிப்பாளர் பறறிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற விழாவில் விசேட அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், வடபகுதி மக்களும் தென் பகுதி மக்களும் இணைந்து இவ்வாறானதொரு நிகழ்வில் பங்குபற்றியது 30 வருட காலத்தின் பின்னர் நடைபெற்றுள்ளமை சிறப்பானதொரு நிகழ்வாகும். அநுராதபுர விவசாயிகள் யாழ். மாவட்டத்தின் கமநலசேவை நிலையத்தையும் வயல்கள் மற்றும் பயிர்ச் செய்கை நிலங்களையும் சென்று பார்வையிட்டுள்ளனர். அவ்வாறே எமது மாவட்ட விவசாயிகளும் அனுராதபுரத்திலுள்ள விவசாய செயற்பாடுகளைப் பார்வையிட்டுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில் அனுராதபுர கமநலசேவைகள் உதவி ஆணையாளர், அநுராதபுர மாவட்ட கமநல உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனத் தலைவர்கள், தென்மராட்சி விவசாய சம்மேளனத் தலைவர்கள் என பலரும் கலந்துகொண்டனர். இதன்போது விவசாய சம்மேளனங்களுக்கு 850 முட்கம்பிச் சுருள்கள் வழங்கப்பட்டன.

# ஒஸ்மானிய அதிபரின் இடமாற்றத்திற்கு எதிர்ப்பு

யாழ். ஒஸ்மானியா கல்லூரி அதிபரை இடமாற்ற வேண்டாம் எனக் கோரி நாவாந்துறை பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மாகாண கல்வி அமைச்சினால் இடமாற்றம் தொடர்பிலான கடிதம் ஒஸ்மானியா கல்லூரி அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், இந்த இடமாற்றத்தை நிறுத்தக் கோரியே இந்த ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர். நாவாந்துறை ஐந்து சந்தி பகுதியில் ஒன்றுகூடிய மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் எதிர்காலத்திற்காக தன்னை அர்ப்பணித்த முபாறக் அதிபரை மாற்ற நினைப்பது ஏன்?, மௌலவி சுபியான் அவர்களே பழிவாங்காதீர்கள், கல்வி வளர்ச்சிக்கு உதவுபவரை அவமானப்படுத்தாதீர்கள் அன்று பாடுபட்டவரை இன்று மறக்காது எம் சமூகம் உள்ளிட்ட பல கோஷங்கள் இதன்போது எழுப்பப்பட்டன. (25)

# சிற்றுண்டிச்சாலைகளுக்கான தேசிய உணவுக் கொள்கை

சிற்றுண்டிச்சாலைகளுக்கான தேசிய உணவுக் கொள்கையொன்றை தயாரிக்குமாறு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பாடசாலைகள் பல்கலைக் கழகங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் தேசிய உணவுக் கொள்கையொன்றை நடைமுறைப்படுத்துவதன் அவசியம் தோன்றியுள்ளதாக சங்கத்தின் தேசிய அமைப்பாளர் அசேல சம்பத் தெரிவிக்கின்றார்.

பசும்பால், கீரைக்கஞ்சி, பழச்சாறு மற்றும் சிவப்பரிசிச் சோறு ஆகியவற்றை பாடசாலை மாணவர்கள் மற்றும் பல்கலைக் கழக மாணவர்கள் மத்தியில் கட்டாயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

### சிங்களம்...

ஆசிரியர்கள் தொடர்பாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் வடமாகாண ஆளுநரிடமும், வடமாகாணக் கல்வி அமைச்சு செயலாளரிடமும் தொடர்புகொண்டு நிலைமைகளை விளக்கியிருந்தது.

வடமாகாணத்தில் தமிழ் மாணவர்களுக்கு சிங்களம் கற்பிக்க இராணுவத்தினரை நியமித்தல் வடமாகாண பாடசாலைகளில் நிலவும் ஆசிரிய பற்றாக்குறையை மூடிமறைக்கும் செயலெனவும், பாடசாலைகளை இராணுவ மயப்படுத்தும் செயலெனவும், தமிழ் பேசும் கல்வித்துறை அதிகாரிகளை சமூகம் தூற்றவைக்கும் செயலெனவும் சுட்டிக்காட்டப்பட்டது. இதனை ஏற்றுக்கொண்ட உரிய தரப்பினர் உடனடியாக இராணுவத்தினரை விலக்கிக்கொள்வதாக உறுதி அளித்தனர் என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### வார இறுதிக்குள்...

அழுத்தங்களை பிரயோகித்த போதிலும், அரசாங்கம் தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் தினத்தை தீர்மானிக்கும் வகையில், இன்றையதினம் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு இடையிலான விசேட சந்திப்பு ஒன்று நடைபெறவுள்ளதாக நாடாளுமன்ற பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார். இதன்போது நாளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 'திவிநெகும' சட்ட மூலம் தொடர்பிலும் பேசப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### நாவற்குழி...

6.00 மணிவரை மூடப்பட்டிருக்கும். இதனால் மாற்றுப் பாதையாக பூநகரி, பரந்தன் ஏ-9 வீதியைப் பயன்படுத்துமாறும், இவ் வீதி மூடப்பட்டுள்ளதற்கான அறிவித்தல் பலகை நாவற்குழிச் சந்தியிலும், சாவகச்சேரி வீதி ஆரம்பிக்கும் இடத்திலும் வைக்கப்பட்டுள்ளதாகவும் வீதிக் கண்காணிப்பாளர்கள் உரிய இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் இவ்வீதி மூடப்படுவது தொடர்பாக மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கும், இவ் வீதியோடு தொடர்புடைய பிரதேச செயலாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் திருத்தவேலைகள் எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே வீதிப்புனரமைப்பு வேலைகள் முடிவடைந்ததும் பாதை திறப்பு தொடர்பாக பின்னர் அறிவிக்கப்படும் எனவும், இப்பணி சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கேட்டுள்ளார். (12)

### அரசியல்...

அரசியல் சாசனத்திற்கு விரோதமானது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதிமன்றுக்கு எதிரான கருத்துக்களை வெளியிடும் தரப்பினருக்கு தண்டனை விதிக்க நீதிமன்றம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார். உயர் நீதிமன்றத் தீர்ப்பினை விமர்சனம் செய்த குற்றத்திற்காக தற்போதைய உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு நீதிமன்றம் தண்டனை விதித்திருந்ததாகவும், இதே நடைமுறை ஏனையவர்கள் விடயத்திலும் பின்பற்றப்பட வேண்டுமெனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# பரபரப்பான இறுதிப்போட்டியில் இந்திய அணி "த்ரில்" வெற்றி




இந்தியாவிற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசப் போட்டியில் இந்திய அணி 10 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. டெல்லி பெரோஹா கோட்லா மைதானத்தில் நேற்று இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 43.4 ஓவர்களில் 167 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. முதலாவது விக்கெட்டை 19 ஓட்டங்களுக்கே இழந்த அவ்வணி, அதன் பின்னர் விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்தது.

துடுப்பாட்டத்தில் இந்திய அணி சார்பாக மகேந்திரசிங் டோனி 36, சுரேஷ் ரெய்னா 31, ரவீந்திர ஜடேஜ 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக சயீட் அஜ்மல் 5, மொஹமட் இர்பான் 2, ஜுனைட் கான், உமர் குல், மொஹமட் ஹபீஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

168 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 157 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 10 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. ஒரு கட்டத்தில் 3 விக்கெட்டுக்களை இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றுக்காணப்பட்ட பாகிஸ்தான் அணி, அதன் பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மிஸ்பா உல் ஹக் 39 நசீர் ஜம்ஷெத் 34, உமர் அக்மல் 25, மொஹமட் ஹபீஸ் இறுதிவரை போராடி 31 பந்துகளில் 21 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக இஷாந்த் சர்மா 3, புவனேஷ்வர் குமார் 2, அஷ்வின் 2, ஹமி அஹமட் 1, ரவீந்திர ஜடேஜா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக இந்திய அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனியும், போட்டித் தொடரின் நாயகனாக பாகிஸ்தானின் நசீர் ஜம்ஷெத்தும் தெரிவாகினர். 3 போட்டிகள் கொண்ட இத்தொடரை பாகிஸ்தான் அணி 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பதவி...

தெரிவிக்கின்றன. இந்தச் செய்தி தொடர்பாக ஆளுநர் தரப்பில் உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்தாத போதிலும் இன்றைய தினம் இதுதொடர்பில் முழுமையான் விபரத்தினை அறிந்துகொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (25)

### நீர் நிரம்பிய...

டி-5 பெரிய பரந்தன் கிளிநொச்சி எனும் முகவரியைச் சேர்ந்த சுகுமார் நிசாந்தினி (வயது-30) அவரது மகனான கிருத்திகன் (வயது-5) ஆகிய இருவரது சடலங்களுமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் காலை பத்து மணியளவில் இருவரும் காணாமற் போயுள்ளனர். இதனையடுத்து உறவினர்கள் தேடிச் சென்றவேளை வீதி வேலை செய்பவர்களால் நீர்த் தேவைக்காக மழைகாலத்திற்கு முன்னர் வெட்டப்பட்டு தற்போது நீர் நிரம்பிய நிலையிலிருந்த குழியிலிருந்து இருவரும் சடலங்களாகக் கிடப்பதைக் கண்டுபிடித்தனர்.

உடனடியாக அப்பகுதி கிராமசேவையாளர் ஊடாக கிளிநொச்சிப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு நேற்று மதியம் 1.30 மணியளவில் வந்த கிளிநொச்சி மாவட்ட நீதவான் எம்.ஐ.வகாப்தீன் சடலங்களை மீட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். இரண்டு சடலங்களும் மீட்கப்பட்டு கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை இந்த உயிரிழப்பு தொடர்பாக உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டதனை அடுத்து, உயிரிழந்தவரின் கணவர் அவரது தாய் மற்றும் தந்தையிடம் வாக்கு மூலங்களைப் பெற்று எதிர்வரும் 21 ஆம் திகதி மூவரையும் நீதிமன்றில் ஆஜராகுமாறு பொலிஸாருக்கு நீதவான் உத்தரவிட்டார். (கே)

### தைப்பொங்கலுக்கு...

அனுப்பப்படுவார்கள். இருந்தபோதிலும் தைப்பொங்கலுக்கு முன்னர் அவர்கள் நால்வரும் விடுதலையாகக்கூடும் என நம்புவதாகவும், இன்றையதினம் பல்கலைக்கழகம் திறக்கப்பட்ட பின்னரும் அங்கு கல்விப் பணிகள் முழுமையாக நடைபெறாவிட்டால் பண விரயத்தை தடுக்கும் நோக்கில், அதை மூடுவது என்றும் கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. மாணவர்களும இன்று முதல் வகுப்புகளுக்கு வர உறுதிமொழி கொடுத்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். கடந்த வாரம் நடைபெற்ற கூட்டத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பீடாதிபதிகள், யாழ். கட்டளைத் தளபதி, பொலிஸ் அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டதாகவும் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார். (மற்றொரு செய்தி 6 ஆம் பக்கத்தில்)

# பிரதம நீதியரசர் விவகாரம் மனித உரிமைப் பேரவையில்

பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்கவிற்கு எதிரான குற்றவியல் பிரேரணை நடைமுறைகள் எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படுமென ஐ.நா. தெரிவித்துள்ளது.

ஐ.நா.வின் சுயாதீன நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் தொடர்பான விசேட நிபுணர் கெப்ரில்லா நவுல் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

பிரதம நீதியரசருக்கு எதிராக கொண்டு வரப்பட்டுள்ள குற்றவியல் பிரேரணை, மனித உரிமை கடப்பாடுகள் தொடர்பில் சர்வதேசத்துக்கு பிழையான செய்தி ஒன்றை கொண்டு செல்லும்.

அத்துடன் இந்த விடயம் இலங்கையின் உள்விவகாரம் என்பதால் எனது கருத்தை இலங்கை அரசாங்கத்துடன் பகிர்ந்துக் கொள்ளவில்லை. எனினும் இது சர்வதேச மனித உரிமை சட்டங்களுக்கு முரணான செயலாகும்.

எனவே இலங்கை அரசாங்கம், நீதித்துறையை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் பிழை செய்த நீதிபதி ஒருவரை விசாரணை செய்யும் போது அடிப்படை நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணை தொடர்பாக ஏற்கனவே கெப்ரில்லா தனது கருத்தை தெரிவித்திருந்தார்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த அரசாங்கம், அதற்கான பதிலையும் அனுப்பி வைத்திருந்தது. இந்நிலையில் அவர், மீண்டும் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை பிரதமநீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணை நடைமுறைகள் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் கெப்ரில்லா அறிவித்துள்ளார்.

# சிறுமி மீது மோதிய மோ.சைக்கிளை கூடியவர்கள் அடித்து சேதமாக்கினர்

மருதனார்மடம் றொட்டியாலடிப்பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற வீதிவிபத்தில் சிறுமியொருவர் தலையில் காயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த பகுதியில் பிரதான வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் சிறுமி மீது மோட்டார் சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப்படுகிறது. உடனடியாகவே அவர் தெல்லிப்பழைக்கு கொண்டு செல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை சிறுமி மீது மோதிய மோட்டார் சைக்கிளை, சம்பவ இடத்தில் கூடிய சிலர் சேதப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பேராதனை பல்கலையில் பகிடிவதை இல்லை

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இவ்வருடம் முதல் பகிடிவதை இடம்பெறாது என பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவித்தார்.

நேற்று இடம் பெற்ற சந்திப்பு ஒன்றில் கருத்துத் தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட மாணவர்களுடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின்போது இத் தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இவ்வருடம் மார்ச் மாதம் பல்கலைக்கழகத்திற்கு புதிதாக வரும் மாணவ, மாணவிகள் பகிடிவதை சம்பந்தமாக அச்சம்கொள்ளத் தேவையில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ரிசானாவின் மரண தண்டனை; உறுதிசெய்தது சவுதி நீதிமன்றம்

சவுதி அரேபியாவில் கொலைக்குற்றம் சாட்டப்பட்டுள்ள திருகோணமலை பெண் ரிசானா நபீக், மரண தண்டனையை எதிர்கொள்ளும் அபாயம் தற்போதும் உள்ளதாக சவுதியில் அவரது விடுதலைக்காக போராடி வரும் டாக்டர் ஹிபாயா இப்திகர் கூறியுள்ளார்.

முன்னர் ரிசானாவுக்கு மரண தண்டனையை வழங்கிய சவுதி நீதிமன்றம், தற்போது அந்தத் தண்டனையை உறுதி செய்துள்ளதாக டாக்டர் ஹிபாயா இப்திகார் தெரிவித்தார்

இந்த மரண தண்டனை எப்போது நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்படாவிட்டாலும், அது எந்த நேரத்திலும் நிறைவேற்றப்படலாம் என்றும் அவர் அச்சம் வெளியிட்டார்.

ரிசானா ரபீக்கின் விடுதலைக்காக இறுதிக்கணம் வரை போராடுவோம் என்று அவரது நலனுக்காக போராடும் டாக்டர் ஹிபாயா இப்திகார் தெரிவித்துள்ளார்.

அதேவேளை இறுதிக்கணம்வரை ரிசானாவின் விடுதலைக்காக இலங்கை அரசாங்கமும், ரிசானாவுக்காக செயற்படுபவர்களும் போராடிக்கொண்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக ரிசானாவுக்கு மரணதண்டனையை விதித்த சவுதி நீதிமன்றம், அவரால் கொலைசெய்யப்பட்டதாகக் கூறப்படும் குழந்தையின் சவுதி பெற்றோர் மன்னிப்பளித்தால் அவருக்கு விடுதலை வழங்கலாம் என்று கூறியிருந்தது.

ஆனால், அவர்கள் இதுவரை அப்படியான மன்னிப்பை வழங்காத காரணத்தால், தற்போது அந்த தண்டனையை உறுதி செய்துள்ளதாக டாக்டர் ஹிபாயா கூறினார்.

# விசர்நாய்க்கடிக்கு இலக்காகி 31 பேர் கடந்த வருடம் மரணம்

கடந்த வருடத்தில் விசர் நாய்க் கடி காரணமாக 6 பாடசாலை மாணவர்கள் உட்பட 31 பேர் உயிரிழந்தனர்.

சுகாதார தரப்புடன் இணைந்து கல்வி அமைச்சு நாடளாவிய ரீதியாக மாணவர்களுக்கு இடையே விசர் நாய் கடி மற்றும் நீர் ஒவ்வாமை நோய் குறித்து புரிந்துணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியாக இப்படியான பன்னீராயிரம் புரிந்துணர்வு நிகழ்வுகள் நடத்தப்படவுள்ளன. உரிமையாளர் அற்ற நாய்கள் பாடசாலைகள் மற்றும் அவற்றை சுற்றியுள்ள பிரதேசங்களில் அதிகமாகக் காணப்படுவதாக சுகாதாரத் துறையினர் குறிப்பிட்டுள்ளனர்.

அவ்வாறான நாய்களுக்கு பாடசாலை மாணவர்கள் மீதமாகும் உணவு வகைகளை வழங்குவதன் காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகக் குருநாகல் மாவட்ட கல்விப் பணிப்பாளர் ஜே.எம்.சூரிய பண்டார கூறுகிறார்.

குருநாகல் மற்றும் புத்தளம் மாவட்டங்களில் உள்ள பாடசாலைகளில் இந்த நிலை அதிக அளவில் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

விசர் நாய்க்கடி தொடர்பாக ஏற்படும் நீர் ஒவ்வாமை நோய் மற்றும் அது தொடர்பான தடுப்பு நடவடிக்கைகளுக்காக வருடாந்தம் 100 கோடி ரூபா நிதி அரசாங்கத்தினால் செலவிடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# லங்கா சமசமாஜக்கட்சி கலந்து கொள்ளாது

பிரதம நீதியரசர் மீதான குற்றப் பிரேரணை தொடர்பில் நாடாளுமன்றத்தில் நடத்தப்படவுள்ள வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதிருக்க லங்கா சமசமாஜ கட்சி தீர்மானித்துள்ளது.

நேற்றுக் கூடிய கட்சியின் மத்திய செயற்குழு இது தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வந்துள்ளதாக லங்கா சமசமாஜ கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பத்தேகம சமித்திர தேரர் தெரிவித்துள்ளார்.

லங்கா சமசமாஜ கட்சி, ஜனநாயக ஐக்கிய முன்னணி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட மேலும் சில கட்சிகளை உள்ளடக்கிய சோஷலிச முன்னணி ஏற்கனவே எடுத்திருந்த தீர்மானத்தை பின்பற்றும் வகையில் கட்சி இந்தத் தீர்மானத்திற்கு வந்துள்ளதாக தேரர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கலைப்பீட மாணவர்களுக்கு புதிய பாடத்திட்டம் அறிமுகம்

(கொழும்பு)

பல்கலைக்கழகத்தின் புதிய கல்வி ஆண்டிற்கு கலைப் பிரிவில் தெரிவாகியுள்ள மாணவர்கள் தொழில் வாய்ப்பை பெற்றுக்கொள்ளும் வகையில் புதிய பாடத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கு உயர் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அந்த மாணவர்களுக்கு தமது பாடத்திட்டத்திற்கு அப்பால் சென்று கல்வி பயில்வதற்கான சந்தர்ப்பம் இதனூடாக அறிமுகப்படுத்தப்படுவதாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கலைப் பீடத்திலுள்ள மாணவர்கள் பல்கலைக்கழகக் கல்வியை நிறைவு செய்து வெளியேறியதன் பின்னர் வேலை வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர். அதனை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனடிப்படையில் ஆங்கில பட்டப்படிப்பு, மும்மொழி பட்டப்படிப்பு, சுற்றுலாத்துறை பட்டப்படிப்பு போன்ற புதிய பாடத்திட்டங்களை ஆங்கில மொழியில் அறிமுகப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கு மொழி தொடர்பிலான பிரச்சினை காணப்படுகின்றமையால் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதில் அவர்கள் சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர் மேலும் சுட்டிக்காட்டுகிறார்.

# இரட்டைக்குடியுரிமையை மீண்டும் வழங்கத்திட்டம்

தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்த இரட்டை குடியுரிமை வழங்கல் நடைமுறையை மீண்டும் அமுலாக்க குடிவரவு கட்டுப்பாட்டுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த முறைமையை நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் அமுலாக்கும் வகையில் தற்காலிகமாக இது கைவிடப்பட்டிருந்ததாக வெளியுறவுகள் துறை அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் தற்போது விண்ணப்பதாரிக்கும், நாட்டுக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் இரட்டை குடியுரிமையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக பல்வேறு நடைமுறைகள் பின்பற்றப்படவுள்ளன. குறிப்பாக வெளியுறவுகள் துறை அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றினால் உறுதி செய்யப்படுகின்றவர்களுக்கு விரைவாக இரட்டைக் குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# காணி உறுதிப்பத்திரப் பதிவு கட்டணத்தில் மாற்றம்

கடந்த பல ஆண்டுகளாக திருத்தப்படாமல் இருந்த, காணி உறுதிப் பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை பதிவு செய்வதற்கான புதிய கட்டணத் திருத்தம் ஜனவரி முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காணி உறுதிப்பத்திர பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கான கட்டணங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் ஈ.எம்.குணசேகர தெரிவித்துள்ளார்.

காணி உறுதிப் பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை பதிவு செய்வதற்காக 100 ரூபா அறவிடப்படுவதாகவும் தொழில் நிறுவனமொன்றை பதிவு செய்வதற்காக இரண்டாயிரத்து 500 ரூபா அறவிடப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை காணி உறுதிப் பத்திரத்தின் பிரதிகளை பெற்றுக்கொள்வதற்கான கட்டணம் 500 ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

# இணக்கப்பாட்டை ஏற்படுத்த இலங்கைக்கு சாதுரியம் போதாது

## கூறுகிறார் தயான் ஜயதிலக

(கொழும்பு)

உலக நாடுகளுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் விடயத்தில் இலங்கைக்கு போதியளவு சாதூரியம் கிடையாது என பிரான்ஸ் நாட்டிற்கான இலங்கைத் தூதுவர் தயான் ஜயதிலக தெரிவித்துள்ளார்.

எல்லா சந்தர்ப்பங்களிலும் உலக நாடுகளுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக்கொள்ளும் விவகாரத்தில் இலங்கை வெற்றியை அடைவதில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலக நாடுகளுடன் இணக்கப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ளும் விவகாரத்தில் புலம் பெயர் இளைஞர்களின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள முடியம் என அவர் தெரிவித்துள்ளார்.

பரஸ்பர புரிந்துணர்வுடன் இந்த சவால்களுக்கு முகம் கொடுக்க முடியும் என தயான் ஜயதிலக குறிப்பிட்டுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஜனவரி 07 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.